அவற்றில், (க) "మనసైవజగత్సృష్టిం సంహారఞ్చకరోతియః- மநஸைவஜகத்ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரஞ்சகரோதியஃ" என்றும், (உ) "ஞானமஃதேகொண்டு எல்லாக்கருமங்களும் செய்யெல்லையில்மாயன்" என்றும், நிமித்தபூதனான வீஶ்வரனுக்குத் தன் ஸங்கல்பஜ்ஞாநமொழிய வேறொன்று அபேக்ஷிதமல்லவென்று சொல்லுகையாலும் "அத்விதீயம்" என்று நிமித்தாந்தர நிஷேதம் பண்ணுகையாலும், (௩) "సదేవ-ஸதேவ" (௩) "ఏకమేవ-ஏகமேவ" (௪) "అహమేవ-அஹமேவ" (௫) "బహుస్యామ్-பஹுஸ்யாம்" (௫) "స్వయమకురుత-ஸ்வயமகுருத" இத்யாதிகளாலே ஸச்சப்தவாச்யமான பரவஸ்துவொழிய உபாதாநாந்தரமில்லையென்று சொல்லுகையாலும், (௬) "సృష్టిస్థిత్యన్తకరణీంబ్రహ్మవిష్ణుశివాత్మికామ్ । ససంజ్ఞాంయాతిభగవానేకఏవజనార్దనః- ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம்ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம்। ஸஸம்ஜ்ஞாம்யாதி பகவாநேகஏவஜநார்தநஃ" என்று ப்ரஹ்மருத்ராதிரூபேண நின்று ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுகிறான் ஜநார்த்தநனொருவனுமே; வேறுஸஹகாரிகளில்லையென்றும், (எ) "அவனே அகல்ஞாலம்படைத்திடந்தான்" என்றும், ஸஹகார்யந்தர நிஷேதம்பண்ணுகையாலும், இவனை நிமித்தோபாதாந ஸஹகாரிரூபேண ஸஹகாரியென்னவொண்ணாது.

சிதசித்துகளிலே இவன் அநுப்ரவேஶித்து நின்று ஸ்ருஷ்டிக்கிறவோபாதி இவள்பக்கலிலே இவன் அநுப்ரவேஶிக்தாலும் உபாதாநாந்தர நிஷேதத்துக்கு விரோதம் பிறவாதியென்னில்; அப்படிச் சொல்லவொண்ணாது. அபரிணாமியாய் பரிஶுத்தமான ப்ரஹ்மத்துக்கு அவற்றினுடைய அநுப்ரவேஶாபாவத்தில் உபாதாநஹேதுகமான பரிணாமித்வமும், அஜ்ஞத்வதுஃக்கித்வரூபமான அஶுத்தியும் ப்ரஸங்கிக்குமாகையாலே பரிணாமியான வசித்தையும் †அசிதாஶ்ரயமான வாத்மாவையும் அநுப்ரவேஶிக்க வேண்டுகை

(க) வி-பு-௫-௨௨-௧௫ (உ) தி-வாய்-௩-௧௦-அ (௩) சாந்தோ-௬-௨-௧
(௪) சாந்தோ-எ-௨௫-௧ (௫) தை-ஆந- (௬) வி-பு-௧-௨-
(எ) தி-வாய்-௬-௩-௨- † அவித்யாஶ்ரய

யாலும் இவளுடைய அநுப்ரவேஶாபாவத்தில் இப்படி வருவதொரு விரோதமில்லாமையாலும்,

அதுக்குமேலே ப்ரஹ்மஸ்வரூபத்தை க்ரஹிக்கிற ப்ரமாணந்தான், (க) "యతో వా ఇమాని భూతాని జాయన్తే-யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே" இத்யாதிகளாலே காரணத்வாதி விஶிஷ்டமாக க்ரஹிக்கையாலும், (உ) "బహు స్యామ్-பஹுஸ்யாம்" என்கிற ப்ரஹ்மஸங்கல்பாநந்தரம் ஜகத்து உண்டாகையாலும், ஸங்கல்பாத்பூர்வம் ஜகத்து இல்லாமையாலும், (ங) "అజామేకాం లోహితశుక్లకృష్ణాం బహ్వీం ప్రజాం జనయన్తీం సరూపామ్ - அஜாமேகாம்லோஹிதஶுக்லக்ருஷ்ணாம்பஹ்வீம் ப்ரஜாம்ஜநயந்தீம்ஸரூபாம்" என்று குணத்ரயாத்மிகையான ப்ரக்ருதி ப்ரஜைகளை உத்பாதிக்குமிடத்தில் தான் அசேதநமாகையாலே, அசேதநமானம்ருத்து புருஷப்ரயத்ந ஸாபேக்ஷமாய்க்கொண்டு க(கு)டாதிகளை உத்பாதிக்குமாபோலே (ச) "మయాధ్యక్షేణ ప్రకృతిస్సూయతే సచరాచరమ్-மயாத்யக்ஷேணப்ரக்ருதிஸ்ஸூயதேஸசராசரம்" என்கிற படியே ப்ரஹ்மாதி(தி)ஷ்டிதமாய்க்கொண்டே ஜகத்தை யுத்பாதிக்குமென்று சொல்லுகையாலும், (ரு) "విష్ణోస్సకాశాదుద్భూతం జగత్తత్రైవ చ స్థితమ్-விஷ்ணோஸ்ஸகாஶாதுத்பூதம் ஜகத்தத்ரைவசஸ்திதம்" என்றும், (சு) "సర్వకారణకారణే-ஸர்வகாரணகாரணே" என்றும், விஷ்ணு ஶப்தவாச்யனான ஸர்வேஶ்வரனே ஜகத்காரணபூதனென்றும்சொல்லுகையாலும், இவள் ஸ்வரூபத்தை காரணத்வேந க்ரஹிப்பதொரு ப்ரமாணமில்லாமையாலும், இவள் ஸங்கல்பத்தை யொழியவும் ஜகத்து உண்டாகையாலும், இவள் கூடாதபோது ஜகத்து உத்பந்நமாகாதென்கைக்கு ஒரு அநுபபத்தியில்லாமையாலும், இவள் காரணபூதையென்று சொல்லுவதொரு ப்ரமாணமில்லாமையாலும் இவளுக்கு காரணத்வாந்தர்ப்பாவ ஶங்கையே பிடித்தில்லை.

காரணபூத ப்ரஹ்மஸ்வரூப நிரூபகத்வேந இவளுக்கு அவர்ஜநீயஸந்நிதி யுண்டேயாகிலும் அநுபயுக்த விஶேஷணங்களோபாதி தத்க்ரியாந்வயமின்றியிலே தத்விஷயப்ரீத்யாதிகளிலே அந்வயமாகக்கடவது. அப்படியே ரக்ஷகத்வமும் (க) "యేన జాతాని జీవన్తి-யேந

(க) தை-ப்ருகுவல்லி (உ) தை-ஆநந்தவ-சு (ங) தை-நா-கஉ-ரு
(ச) கீதை-கூ-கὀ (ரு) வி-பு-க-க-௩௫ (சு) வி-பு-சு-ரு-எஉ

ஜாதாநிஜீவந்தி'' இத்யாதிகளிலே ப்ரஹ்மலக்ஷணமாகச் சொல்லப்படுகையாலும், (௧) "ఈశ్వరస్సర్వభూతానామ్-ஈஶ்வரஸ்ஸர்வபூதாநாம்'' (௨) "విష్ణుస్త్రైలోక్యపాలకః-விஷ்ணுஸ்த்ரைலோக்யபாலக:'' (௩) "పాలనేవిష్ణురుచ్యతే-பாலநேவிஷ்ணுருச்யதே'' (௪) "సఏవపాతి-ஸஏவபாதி'' (௫) "విష్ణుఃపాల్యఞ్చపాతిచ-விஷ்ணு:பால்யஞ்சபாதிச'' இத்யாதிகளாலே விஷ்ணுஶப்தவாச்யனை ஸர்வேஶ்வரனை ரக்ஷகனாகச் சொல்லுகையாலும், இவனுக்கு ரக்ஷகத்வாந்தர்ப்பாவம் சொல்லவொண்ணாது. இந்த ரக்ஷகத்வவிஶிஷ்டமாய் அநிஷ்டநிவ்ருத்திபூர்வக இஷ்டப்ராப்திப்ரத(ஃ)த்வலக்ஷணமாயிருக்கிறவுபாயத்வம் யாதொன்று, அதிலும் இவனுக்கு அந்தர்ப்பாவமில்லை.

எங்ஙனேயென்னில்; (௬) 'మామేకంశరణంవ్రజ-மாமேகம்ஶரணம் வ்ரஜ'' (௭) "తమేవశరణంగచ్ఛ-தமேவஶரணம்கச்ச'' (௮) 'మామేవయేప్రపద్యన్తే-மாமேவயேப்ரபத்யந்தே'' (௯) "తమేవచాద్యంపురుషంప్రపద్యే-தமேவசாத்யம்புருஷம்ப்ரபத்யே'' (௰) "యోబ్రహ్మాణంవిదధాతిపూర్వం యోవై వేదాంశ్చప్రహిణోతితస్మై । తంహిదేవమాత్మబుద్ధిప్రసాదంముముక్షుర్వైశరణమహంప్రపద్యే-யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம் யோவைவேதாம்ஶ்சப்ரஹிணோதிதஸ்மை । தம்ஹிதேவமாத்மபுத்திப்ரஸாதம்முமுக்ஷுர்வைஶரணமஹம்ப்ரபத்யே'' (௧௧) "நாகணைமிசைநம்பிரான்சரணேசரண்'' (௧௨) "கழல்களவையேசரணாகக்கொண்ட'' (௧௩) 'கண்ணனல்லாலில்லைகண்டீர்சரண்'' (௧௪) "களைகண்மற்றிலேன்'' (௧௫) "மூவாத்தனிமுதலாய்மூவுலகும்காவலோன்'' இத்யாதிகளிலே வ்யக்த்யந்தரநிஷேதபூர்வகமாக ஸர்வகாரணவஸ்துவுக்கே உபாயத்தை விதிக்கையாலே.

ஜ்யோதிஷ்டோமம் ஸ்வர்க்கஸாதநமாகாநிற்கச்செய்தேயும் ப்ரயாஜாதிகளான கர்மவிஶேஷங்கள் ஸஹகாரித்வேந ஸஹாயமாகிறாப்போலேயும், பக்தி பகவத்ப்ராப்திஸாதநமாகாநிற்கச்செய்தேயும் கர்மஜ்ஞாநங்கள் ஸஹகாரித்வேந ஸாதநமாகிறாப்போலேயும், இவ

(௧) கீதை-௧௮-௬௧　　(௨)　　(௩)
(௪) வி-பு-௧-௨-௬௭　　(௫) வி-பு　　(௬) கீ-௧௮-௬௬
(௭) கீதை-௧௮-௬௨　　(௮) கீ-௭-௧௪　　(௯) கீ-௧௫-௪
(௰) ஶ்வே-௬-௧௮　　(௧௧) தி-வாய்-௫-௧௦-௧௧　　(௧௨) தி-வாய்-௫-௮-௧௧
(௧௩) தி-வாய்-௯-௧-௧௦　　(௧௪) தி-வாய்-௫-௮-௮　　(௧௫) தி-வாய்-௨-௮-௫

ளுக்கும் ஸஹகாரித்வேந உபாயத்வாந்தர்ப்பாவமுண்டாகுமோ வென்னில்; ஏதேனுமொன்றுக்கு ஸஹகாரித்வ முண்டாவது-ஸ்வரூபோத்பத்திமுமேகநவாதல், உத்பந்நஸ்வரூப வர்த்த (ஞ) கமுமேகநவாதல், வர்த்தி(ஞ) தஸ்வரூப பலப்ரதாநமுமேக வாதலாயிற்று ;

உபாயபூதனை யீஶ்வரன் (௧) "उपायोपेयत्वे तदिह तव तत्त्वम्- உபாயோபேயத்வே ததிஹ தவதத்வம்" என்று ஸித்தஸ்வரூபனுமாய் ஏகரூபனுமாய் அமோக (ஞ) ஸங்கல்பனுமாயிருக்கையாலே உத்பத்யாதிகளில் ஸஹகாரிஸாபேக்ஷதை யில்லாமையாலும், (௨) "களைவாய்துன்பம் களையாதொழிவாய்களைகண்மற்றிலேன்" என்றும், (௩) "உன்னாலல்லால்யாவராலுமொன்றும் குறைவேண்டேன்" என்றும், ஸஹகாரிநிரபேக்ஷமாகச் சொல்லுகையாலும் இவளுக்கு ஸஹகாரித்வமில்லை.

ப்ரஹ்மஸ்வரூப க்ராஹகப்ரமாணம் (௪) "येन जातानि जीवन्ति-யேந ஜாதாநிஜீவந்தி" (௫) "यो वै वेदांश्च प्रहिणोति तस्मै-யோவைவேதாம்ஶ்சப்ராஹிணோதிதஸ்மை" இத்யாதிகளாலே ப்ரஹ்மஸ்வரூபத்தை உபாயத்வேந க்ரஹிக்கையாலும் (௬) "सर्वपापेभ्यो मोक्षयिष्यामि-ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்கிற உக்த்யநந்தரம் ஶோகநிவ்ருத்தி பிறக்கையாலும், இந்த வுக்திக்கு முன்பு ஶோகநிவ்ருத்தி பிறவாமையாலும், அநிஷ்டநிவ்ருத்திபூர்வகமான இஷ்டப்ராப்தி-நிர்ஹேதுகக்ருபாவிஶிஷ்டனை ஸர்வேஶ்வரன் தன்னாலே உபபந்நமாகையாலும், (௭) "सर्वलोकशरण्याय - ஸர்வலோகஶரண்யாய" (௮) "शरण्यं शरणं यातः-ஶரண்யம்ஶரணம்யாத:" (௯) "चरणौ शरणं यातः-சரணௌஶரணம்யாத:" (௫) "मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये-முமுக்ஷுர்வைஶரணமஹம்ப்ரபத்யே" என்று ஸர்வஶரண்யனாகச் சொல்லுகையாலும், இவள் ஸ்வரூபத்தை உபாயத்வேந க்ரஹிப்பதொரு ப்ரமாணமில்லாமையாலும் இவளுடைய உக்தியொழிய கேவலபகவதுக்தியாலே ஶோகநிவ்ருத்தி பிறக்கையாலும், இவள் ஸஹகாரியாகபோதும் உபாயத்வம் உபபந்நமாகையாலும், இவள் ஜகத்துக்கு உபாயபூதையென்று சொல்லுவதொரு ப்ரமாணமில்லாமையாலும் இவளுக்கு உபாயத்வமில்லையென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம்.

---

(௧) ர-ஸ்த-௨-௮௭ (௨) தி-வாய்-௫-௮-௮ (௩) தி-வாய்-௫-௮-௩
(௪) தை-ப்ருகு- (௫) ஶ்வே-௬-௧௮ (௬) கீ-௧௮-௬௬
(௭) ரா-யு-௧௭-௧௫ (௮) ரா-யு-௧௯-௧௭ (௯)

ஸர்வஜ்ஞத்வாதிகுணமுகேந கார்யகரனாகிறவோபாதி இவளையும் ஸஹகாரித்வேந அந்தர்ப்ப(ர்பூ)வித்துக்கொண்டு கார்யகரனாகக் குறையென்னென்னில், குணங்கள் கார்யோபயோகியாகையாலும், குணத்வேந உண்டான அப்ருதக்ஸித்தியோக்யத்வத்தாலும், சைதந்யாநாதாரத்வத்தாலே கர்த்ருத்வாந்தராஸங்காவகாஸமில்லாமையாலே நைரபேக்ஷ்யஹாநியில்லாமையாலும், இவள் சார்யாநுபயுக்தையாகையாலும். த்ரவ்யத்வேநவருகிற ப்ருதக்ஸித்தியோக்யத்வத்தாலும், சைதந்யாதா(தா)ரத்வ நிபந்தந கர்த்ருத்வப்ராப்தியோக்யதையாலே நைரபேக்ஷ்யஹாநியுண்டாகையாலும் அதுவொண்ணாது. ஆகையாலே ஸர்வப்ரகாரத்தாலும் இவளுக்கு உபாயத்வாந்தர்ப்பாவமில்லையென்றதாயிற்று. ஆகையாலே உபாயதசையில் இவளுக்குண்டான ஸ்வரூபாந்தர்ப்பாவம் உபாயபூதனானவனை உபாயத்வேந ஆஸ்ரயிக்கிற சேதநருடைய ஸ்வாபராதநிபந்தநபயநிவ்ருத்தி ஹேதுபூத புருஷகாரோபயோகியாகக்கடவது.

அப்படியன்றியிலே ஸ்ரிய:பதித்வத்துக்கு ப்ரதிஸம்பந்த்யபேக்ஷை யுண்டாகையாலும், தர்மிக்ராஹகமான ஸ்ரீஸப்தந்தான் "[illegible]-ஸ்ரயத இதி ஸ்ரீ:" என்று பகவத்ஸ்வரூபத்தை யாஸ்ரயித்திருக்கையாலே ஸ்ரீஸப்தவாச்யை யானவளென்று சொல்லுகையாலும், "[illegible]-ஸ்ரிஞ்-ஸேவாயாம்" என்கிற தாதுவிலே கர்த்தரிவ்யுத்பத்தியாலே ஸ்வாஸ்ரயமான பகவத்ஸ்வரூபத்தை ஸேவித்திருக்குமென்கையாலும், (௧) "[illegible] - அநந்யாராகவேணாஹம் பாஸ்கரேணப்ரபாயதா" என்றும், (௨) "[illegible]-நிராதாராநஸித்த்யதி" என்றும், பகவத்ஸ்வரூபத்தை யாஸ்ரயித்தபோது தன்ஸத்தையாய், ஒழிந்தபோது ஸத்தையில்லையென்று சொல்லுகையாலும், ஸ்ரீயையொழிய அவனுக்குஸ்ரிய:பதித்வம் அநுபபந்நமாகையாலும், (௩) "[illegible]-விஷ்ணோஸ்ஸ்ரீ:" (௪) "[illegible]-விஷ்ணுபத்நீ" (௫) "[illegible] - ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்சபத்ந்யௌ" (௬) "[illegible]-தவஸ்ரியா" (௭) "மலராள்மணவாளன்" (௮) "நாண்மலராள்நாயகன்" (௯) "திருமக

(௧) ரா-ஸு-௨௧-௧௬ (௨) லக்ஷ்மீதந்-௨ (௩) வி-பு-௧-௯-அ-௧௭
(௪) ஸ்ரீஸூக்தம் (௫) யஜு- (௬) ஸ்தோ-ர-
(௭) தி-வாய்-௧-௧0-௪ (௮) தி-மொ-௫-௫- (௯) தி-வாய்-௧-௯-௧

ளார் தனிக்கேள்வன்'' இத்யாதிகளிலே இவளை அவனுக்குப் பத்நீத்வேந ஶேஷபூதையாகச் சொல்லுகையாலும், ஶ்ரிய:பதித்வத்தில் அந்வயமுண்டென்னுமிடம் ஸுஸ்பஷ்டம்.

அப்படியே "श्रीयत इति श्रीः - ஶ்ரீயத இதி ஶ்ரீ:" என்று ஸர்வராலும் ஆஶ்ரயிக்கப்படுமென்று சொல்லுகையாலும் "श्रिञ् - सेवायाम् - ஶ்ரிஞ்-ஸேவாயாம்" என்கிற தா(ஈ)துவிலே கர்மணிவ்யுத்பத்தியாலே ஸர்வர்க்கும் ஸேவாவிஷயபூதையாகச் சொல்லுமிவள் தன்னுடைய மாத்ருத்வரூபமான ஶேஷித்வத்தாலே ஆஶ்ரிதரை அபராதோபகரண பூர்வகமாக ரக்ஷித்துக்கொண்டு போருமென்று சொல்லுகையாலும், ஏவம்பூத ஶேஷித்வத்தாலே இவளுடைய புருஷகாராந்தர நிரபேக்ஷாஶ்ரயணீயத்வம் உபபந்நமாகையாலும், (க) "अस्येशाना जगतो विष्णुपत्नी - அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ" (உ) "सकलं तदिदं दैवमाधव-ஸகலம் தத் இதம் தைவ மாதவ" (ங) "दासोऽहं कमलानाथ - தாஸோஹம் கமலாநாத" (ச) "திருமாலையல்லது தெய்வமென்றேத்தேன்" (ரு) "திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்" (சு) "திருமாலை வணங்குவனே" இத்யாதிகளிலே இவளை ஶேஷித்வத்திலே அந்தர்ப்பவித்துச் சொல்லுகையாலும் இவளுக்கு ஶேஷித்வத்திலே அந்வயமுண்டென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம்.

ஆகையாலே நாராயணபதத்திற் சொல்லுகிற ஸகலகுணங்களும் பகவத்ஸ்வரூபாஶ்ரயமா யிருக்கச்செய்தேயும் வாத்ஸல்யாதிகள் ஆஶ்ரயணத்திலே உபயுக்தமாயும், ஸர்வஜ்ஞத்வாதிகள் கார்யகரத்வத்திலே உபயுக்தமாயும், ஸௌந்தர்யாதிகள் அநுபாவ்யமாயும் போருகிறவிடத்தில் விரோதமில்லாதாப்போலேயும், காரணதஶையில் சிதசித்துக்கள் உபாதாநோபயோகியாயும், ஸங்கல்பம் நிமித்தபர்யவஸாயியாயும், ஜ்ஞாநாதிகள் ஸஹகாரியாயும் போருகிறவிடத்தில் விரோதமில்லாதாப்போலேயும், லக்ஷ்மீஸ்வரூபம் அகாரவாச்யமான பகவத்ஸ்வரூபத்தை ஆஶ்ரயித்திருந்ததேயாகிலும் காரணத்வ ரக்ஷகத்வாதிகளி லந்வயமின்றியிலே தத்விஷயாநுமோத புருஷகாரத்வ மாத்ரமேயாய் ஶ்ரிய:பதித்வ ஶேஷித்வங்களில் அந்வயமுண்டாமிடத்தில் விரோதமில்லை.

(க) ஶ்ரீஸூக்தம் (உ) ஸ்தோ-ரத்ந (ங)
(ச) க. திருவ-கஅ (ரு) பல்லாண்டு-கக (சு) திருவிரு-கரு

இந்த காரணத்வ ரக்ஷகத்வங்களுக்கு ஸர்வஜ்ஞத்வாதி குணாபேக்ஷயுண்டாகையாலும், உபயவிபூதி ரக்ஷகனாகையாலும், ஶ்ரிய:பதியாகையாலும், ஸர்வஸ்மாத் பரனாகையாலும் (௧) "కారణన్తు ధ్యేయః-காரணந்துத்யேய:" (௨) "యో బ్రహ్మాణం విదధాతి పూర్వమ్-ముముక్షుర్వై శరణమహం ప్రపద్యే-யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்- முமுக்ஷுர்வைஶரணமஹம்ப்ரபத்யே" என்றும் காரணவஸ்துவே உபாஸ்யமாகவும் ஶரண்யமாகவும் சொல்லுகையாலும், உபாஸ்யமாயும் ஶரண்யமாயுமிருக்கிற வஸ்துவே அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகமான இஷ்டப்ராப்தியைப் பண்ணுகையாலும், உபாஸ்யமாயும் ஶரண்யமாயுமிருக்கிற வஸ்துவே உபாயமாயறுகையாலும், இதுதான் இதுக்குமுன்பு ப்ராப்தமின்றியிலே மேல்ப்ராப்தவ்யமாகையாலும், இந்த உபாஸ்யத்வ ஶரண்யத்வ உபாயத்வ ப்ராப்யத்வங்களுக்கு விலக்ஷணவிக்ரஹாபேக்ஷையுண்டாகையாலும், இவ்வகாரத்தாலே ஸமஸ்தகல்யாணகுணாத்மகத்வமும் உபயவிபூதிநாதத்வமும் ஶ்ரிய:பதித்வமும் ஸர்வஸ்மாத்பரத்வமும் உபாஸ்யத்வமும் ஶரண்யத்வமும் உபாயத்வமும் உபேயத்வமும் விலக்ஷணவிக்ரஹயோகமும் சொல்லிற்றாயிற்று.

அநந்தரம், உகாரம் (௩) "తదేవాగ్నిస్తద్వాయుస్తత్సూర్యస్తదు చన్ద్రమాః-ததேவாக்நிஸ்தத்வாயுஸ்தத்ஸூர்யஸ்தது சந்த்ரமா:" என்று ஏவகாரத்தையும் உகாரத்தையும் பர்யாயமாகச் சொல்லுகிற ஸ்தர்நப்ரமாணத்தாலே அவதா(தா)ரணார்த்தமாய்க்கொண்டு இந்த ஶேஷத்வவிரோதியான அந்யார்ஹதையைக்கழித்து அவனுக்கே ஶேஷமென்று அவத(த)ரிக்கிறது.

ஸர்வாதிகனான அகாரவாச்யனுக்குச் ஶேஷமான வஸ்துக்கு அந்யஶேஷத்வ யோக்யதையில்லையாயிருக்க இந்த ப்ரஸஜ்யப்ரதிஷேதமேதென்னில்; லோகத்திலே ஒருவனுக்கு ஶேஷமான க்ருஹக்ஷேத்ராதிகள் பிறர்க்கு அர்ஹமாகக் காண்கையாலும், "హిరణ్యం కుణ్డలాయ-ஹிரண்யம் குண்டலாய" என்றிருக்கச் செய்தேயும் கடகமகுடாதிகளுக்கும் அர்ஹமாகக் காண்கையாலும், (௪) "మాతృదేవో భవ, పితృదేవో భవ, ఆచార్యదేవో భవ, అతిథిదేవో భవ-மாத்ருதேவோபவ, பித்ருதேவோபவ, ஆசார்யதேவோபவ, அதிதிதேவோபவ" என்று ஒருவனுக்கு அநேகவிஷய ஶேஷத்வத்தை விதிக்கக்காண்கையாலும்,

(௧) அதர்வ (௨) ஶ்வே-௬-௧௮ (௩) தை-நா- (௪) தை-ஶீக்ஷாவல்லி

அப்படியே ஈஸ்வரனுக்கு இவ்வாத்மவஸ்து ஶேஷமாமிடத்தில் அந்யர்க்கும் ஶேஷமாய் ஈஸ்வரனுக்கும் ஶேஷமாயிருக்குமோ வென்று ஶங்கைபிறக்க, அந்த ஶங்கையைக்கழித்து அவனுக்கே ஶேஷமென்கிறது.

ஶேஷத்வமாகில் அநந்யார்ஹமா யிருக்குமென்கிற நியமமாகில் க்ஷேத்ராதிவிஷயமாக அந்யார்ஹமாவா னென்னென்னில்; அங்கு ப்ருதக்ஸ்திதியோக்யமான த்ரவ்யமாகையாலே க்ரயவிக்ரயாதிகளாலே அந்யார்ஹமாகைக்கு யோக்யதையுண்டு. இங்கு ப்ருதக்ஸ்தித்யயோக்யத்ரவ்யமாகையாலே அந்யார்ஹமாகைக்கு யோக்யதையில்லை.

எங்ஙனே யென்னில் ; க்ஷேத்ரம் க்ரயவிக்ரயார்ஹமாகையாலும், புத்ரன் க்ரயவிக்ரயார்ஹனுமாய் மாதாபிதாக்களுக்கும் அநேக தேவதைகளுக்கும் ஶேஷமாயிருக்கையாலும், பார்யை பாணிக்ரஹண பூர்வகாலத்திலே மாதாபிதாக்களுக்கு ஶேஷமாயும் அநந்தரம் ஸோமகந்தர்வாதிகளுக்கும் ஶேஷமாயும் ஶரீராவதி(தி)யாயும் உபேக்ஷாவதியாயுமிருக்கையாலும், தேஹமும், பார்யாஶரீரம் பர்த்தாவுக்கு ஶேஷமாய், பர்த்த்ருஶரீரம் தேவாதிகளுக்கு ஶேஷமாய், க்ரயவிக்ரய யோக்யமாயிருக்கையாலும், குணமும் நிராஶ்ரயமாகநில்லாதே ஓராஶ்ரயத்தைப்பற்றி நிற்கையாலே ஸ்வாஶ்ரய ஶேஷியான வ்யக்திக்குத் தானும் ஶேஷமாகையாலும் க்ஷேத்ரபுத்ர தாரதேஹ குணாதிகளுக்கும் அநந்யார்ஹத்வமில்லை.

குண்டலாபிமாநியான ஹிரண்யமும் கர்த்தாவினுடைய ருசிவிசேஷத்தாலே கடகாதிகளுக்கும் யோக்யமாகையாலே அதுக்கும் அநந்யார்ஹத்வமில்லை. * மாத்ருதேவோபவேத்யாதிகளும் அநேக விஷயவிதியாகையாலே அந்த விஷயபூதனானவனுக்கும் அநந்யார்ஹத்வமில்லை.

இங்கு அப்படியன்றியிலே (க) ''నతదస్తివినాయత్స్యాన్మయాభూతంచరాచరం-நததஸ்திவிநாயத்ஸ்யாந்மயாபூதம்சராசரம்'' (உ) ''தன்னுள்கலவாததெப்பொருளும்தானில்லையே'' என்று ப்ருதக்ஸ்திதியோக்யமன்றென்கையாலும், ப்ருதக்ஸ்திதி சொன்னபோது ஈஸ்வரனுடைய ஸர்வப்ரகாரித்வாதிகள் பக்ந (த்ந)மாகையாலும்,

---

(க) கீதை-௧0-௩௯ (உ) தி-வாய்-உ-௫-௩

(க) "ஆத்மைவ வேதம் ஸர்வம் - ஆத்மைவேதம்ஸர்வம்" (உ) "ப்ரஹ்மைவேதம் ஸர்வம் - ப்ரஹ்மைவேதம்ஸர்வம்" என்று ஸாமாநாதிகரண்யத்தாலே ஶரீராத்மபாவஸம்பந்தத்தைச் சொல்லி, தத்ஸஹிதமான ஶேஷஶேஷிபாவஸம்பந்தத்தை "ஆத்மைவ" என்று அவதரித்துக்கொண்டு அஸாதாரணமாகச் சொல்லுகையாலும், (௩) "ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் - ஸ்வத்வமாத்மநிஸஞ்ஜாதம்" (௪) "தாஸபூதா: - தாஸபூதா:" (௫) "ஆத்மதாஸ்யம் ஹரேஸ்ஸ்வாம்யம் ஸ்வபாவம் - ஆத்மதாஸ்யம்ஹரேஸ்ஸ்வாம்யம்ஸ்வபாவம்" (௬) "குலதொலடியேன்" (௭) "தொல்லடிமைவழிவரும்தொண்டர்" இத்யாதிகளாலே இந்த ஶேஷத்வத்தை நிருபாதிகமாகவும் அநந்யஸாதாரணமாகவும் ஸ்வாபாவிகமாகவும்சொல்லுகையாலும், இப்படி ஶேஷமானவஸ்து ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாய் ஜ்ஞாநகுணகமாயிருக்குமென்று மேலே உக்தமாகையாலும்,க்ரயவிக்ரயாநர்ஹம், அஸாதாரணம், நிருபாதிகம், நித்யம், ஔபாதிக தேஹவ்யாவ்ருத்தஶரீரம், குணியென்னுமிடம் ஸுஸ்பஷ்டம்.

ஆகையாலே க்ஷேத்ரபுத்ரதார தேஹாதிகளிற்போலே அந்யஶேஷத்வஶங்கா ஹேதுவான க்ரயவிக்ரயார்ஹத்வ ஸாதாரணத்வ ஔபாதிகத்வ அநித்யத்வங்கள் இவ்விடத்திலில்லாமையாலே இங்கு அந்யஶேஷத்வஶங்கையே பிடித்தில்லை.

பூர்வோக்தமான ப்ருதக்ஸ்தித்யநர்ஹதையாலும், அஸாதாரணதையாலும், *மாத்ருதேவோபவேத்யாதிகளிற் சொல்லுகிற அநேகஶேஷத்வத்துக்கு உதயமில்லை. குண்டலார்ஹமான ஹிரண்யத்தினுடைய ஸ்வாம்யதீநமான மகுடார்ஹத்வம் இங்கும் ஶேஷ்யதீநமாகவுண்டாக, ஶேஷத்வம் ஶேஷிபூதபகவந்நியோகாதீநமாக வருகிறதாகையாலே பகவச்சேஷத்வமே யித்தனையொழிய அந்யஶேஷத்வமன்று.

இப்படி அந்யஶேஷத்வஶங்கையில்லாமையாலே தந்நிவ்ருத்த்யபேக்ஷையில்லையென்றிட்டு தத்வாசகமான உகாரத்துக்கு உதயமில்லையாகாதோவென்னில்; இப்படி ஶேஷபூதனைச் சொல்லுகிற சேதநன் கர்மஹேதுகமாக உத்பந்நமான ஶரீரஸ்தனாயிருக்கையாலே அந்த ஶரீரோத்பாதகரான மாதாபிதாக்களென்ன, அந்த ஶரீரத்தைப்பற்ற வுண்டான வர்ணாஶ்ரமநிபந்தநமாக வருகிற க்ரியா

(க) சாந்தோ-எ-உ௫-உ (உ) ப்ருஹ-௬-௫ (௩)
(௪) (௫) (௬) தி-வாய்-௬-௧0-௧ (௭) தி-வாய்-௬-உ௩

ப்ரதிஸம்பந்திகளான அக்நீந்த்ராதி தேவதைகளென்ன, இவர்களைப் பற்றி வருவதொரு கர்மோபாதிகசேஷத்வமுண்டாகையாலே தந்நிவ்ருத்தியைச் சொல்லுகிற உகாரத்துக்கு உதயமில்லையென்ன வொண்ணாது.

ஆனால் கர்மஹேதுக ஶரீரஸ்தனாயிருக்கச் செய்தே தத்கார்யமான அந்யசேஷத்வத்தை நிவர்த்திப்பிக்கும்படி யென்னென்னில்; ஏவம்பூதனான சேதநன்விஷயமாக ஈஶ்வரன் நிர்ஹேதுகாங்கீகாரத்தைப்பண்ணி ஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞாநத்தைப் பிறப்பிக்கையாலே ஸ்வாத்மஶரீரங்களிலுண்டான அத்யந்தபேதஜ்ஞாநம்பிறந்து அந்த ஶரீரத்திற்காட்டில் அந்யனாகத் தன்னை யநுஸந்தித்திருக்கையாலும், ஸ்வரூபாநுகுணமாக ரக்ஷிக்குமென்கையாலே ஸ்வரூபவிருத்தக்ரியாஹேதுவான கர்மத்தை நேராக நிவர்த்திப்பித்து ஸ்வரூபாநுரூபமான உபாயத்தையும் பரிக்ரஹிப்பித்துப்போருகையாலும் ஶரீரஹேதுவாயும் க்ரியாஹேதுவாயும் வருகிற அந்யசேஷத்வங்களை நிவர்த்திப்பிக்கக் குறையில்லை.

(௧) “ యావానర్థ ఉదపానే సర్వతస్సంప్లుతోదకే । తావాన్సర్వేషు వేదేషు బ్రాహ్మణస్య విజానతః-யாவாநர்த்த உதபாநே ஸர்வதஸ்ஸம்ப்லுதோதகே। தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநதஃ” என்று ஆறு பெருகிப் போகாநின்றால் பிபாஸிதனுக்கு ஸ்வதாஹஶாந்தி மாத்ர ஜலபாநமே அபேக்ஷிதமானாப்போலே, ஸகலவேதங்களும் ஸகலார்த்தங்களையும் சொல்லிற்றேயாகிலும் க்ருஹஸ்ததர்மம் வநஸ்தனுக்கு த்யாஜ்யமானாப்போலேயும், அதுதான் பிக்ஷுவுக்கு த்யாஜ்யமானாப்போலேயும், ஸ்வரூபப்ரதாநனானவனுக்கு ஶரீரப்ரதாநனானவனுடைய க்ரியை த்யாஜ்யமாகையாலும், (௨) “ దేవర్షిభూతాప్తనృణాం పితౄణాం నకింకరో నాయమృణీ చ రాజన్ । సర్వాత్మనా యశ్శరణం శరణ్యం నారాయణం లోకగురుం ప్రపన్నః - தேவர்ஷிபூதாத்மந்ருணாம்பித்ருணாம் நகிங்கரோநாயம்ருணீ சராஜந்! ஸர்வாத்மநாயஶ்ஶரணம் ஶரண்யம்நாராயணம்லோககுரும்ப்ரபந்நஃ” என்று பகவச்சேஷத்வோபாயத்வ ஜ்ஞாநமுடையவன் தேவதாந்தரங்களுக்கு கிங்கரனுமல்லன், ருணியுமல்லனென்றும், (௩) “ బ్రహ్మచర్యేణ ఋషిభ్యః, యజ్ఞేన దేవేభ్యః, ప్రజయా పితృభ్యః-ப்ரஹ்மசர்யேணரிஷிப்யஃ,யஜ்ஞேநதேவேப்யஃ,ப்ரஜயாபித்ருப்யஃ” என்று சொல்லுகிற தேவர்ஷி பித்ரு பூதவிஷயங்க

(௧) கீதை (௨) பாக (௩) யஜு

ளான ரிணமோசநார்த்த க்ரியாநிபந்தநமாக வருகிற கிங்கரத்வத்தை அந்த க்ரியாஹேதுபூதமான ரிணித்வ விஶேஷபூர்வகமாக நிஷேதிக்கையாலும், (க) "యోఽన్యాం దేవతాముపాస్తే, న స వేద, యథా పశురేవం స దేవానామ్ - యோऽந்யாம் தேவதாமுபாஸ்தே ... ப்ரஸ்யாயை தேவதாயை ச்யவதே நபராந்ப்ராப்நோதி, பாபீயாந்பவதி" என்று யாவனொருவன் ஸ்வரூபாநுரூபமான தேவதையையொழிய யஜிக்கிறான்; அவன் அந்த தேவதையின்பக்கல் நின்று ப்ரஷ்டனும். அவனுக்கு பர(?)ப்ராப்தியுமில்லை. பாபிஷ்டனுமாமென்கையாலும், (உ) "సంసేవ్యైకో హరిరిన్ద్రియాణాం సేవాऽన్యదేవేష్వభిచార ఏవ। అన్యోऽపి సేవ్యో యది దేవసామ్యాత్ ప్రాహ్యాః హృషీకేశపదాభిధానః - ஸம்ஸேவ்ய ஏகோஹரிரிந்த்ரியாணாம் ஸேவாந்யதேவேஷ்வபிசார ஏவ। அந்யோபி ஸேவ்யோயதி தேவஸாம்யாத் கோவாஹ்ருஷீகேஶபதாபிதாந:" என்று ஸகலேந்த்ரியங்களாலும் ஸம்ஸேவ்யமானவனாயிருப்பான் ஹரி ஶப்தவாச்யனான ஸர்வேஶ்வரனென்றும், இந்த்ரியங்களைக்கொண்டு தத்வ்யதிரிக்த தேவதைகளை ஸேவித்தானாகில் பர்த்ருஶேஷமான ஶரீரத்தை அந்யபுருஷோபபோகமாக்கின ஸ்த்ரீக்கு வ்யபிசாரமே பலித்து பாதிவ்ரத்யஹாநி யுண்டாமாபோலே, ஹ்ருஷீகேஶனுடையதான ஹ்ருஷீகங்களை அந்யவிஷயமாக்குகையாலே அந்த ஹ்ருஷீகங்களுக்கும் ஸ்வரூபஹாநியாய் அவற்றுக்குக்காரணியான தனக்கும் ஸ்வரூபஹாநி யுண்டாமென்றும் சொல்லிக்கொண்டு இந்த்ரியங்களுடைய அந்யப்ரதிஸம்பந்தி கர்மகரத்வநிஷேதபூர்வகமாக பகவத் ப்ரதிஸம்பந்தி கர்மகரத்வத்தை விதிக்கையாலும், அந்யதேவதாப்ரதி ஸம்பந்திகமாய் ஸ்வரூபவிருத்த(த்த)மான கர்மத்திலுடைய நிவ்ருத்தி-ஏவம்பூத ஜ்ஞாநவிஶிஷ்டனுக்கு ஸ்வத: ப்ராப்தமென்றதாயிற்று.

சிலர், இதினுடைய அப்ராப்தத்வஶங்கையைப்பண்ணி தத்பரிஹாரார்த்தமாக இந்த க்ரியைகள் பகவத்பர்யவஸாநபுத்த்யா அநுஷ்டேயங்களென்றும், அந்த தேவதாநாமங்களை பகவந்நாமங்களாக புத்திபண்ணி அநுஷ்டிப்பானென்று சொல்லுவர்கள். அவற்றினுடையவிதா(நா)நகாலத்தில், "అగ్నయే, ఇన్ద్రాయ- அக்நயே, இந்த்ராய" என்று அக்நீந்த்ராதிதேவதைகளை ப்ரதிஸம்பந்திகளாகச் சில க்ரி

(க) (உ)

யைகளை விதிக்கிறவோபாதி "விஷ்ணவே" என்று ஸர்வவ்யாபகனான ஸர்வேஶ்வரனை ப்ரதிஸம்பந்தியாகச் சில க்ரியைகளைவிதித்தும் போராநின்றது.

அக்நீந்த்ராதி தேவதாப்ரதிஸம்பந்தி க்ரியைதானே பகவத்பர்யவஸாயியுமாய், அந்த தேவதாநாமங்கள்தானே பகவந்நாமங்களுமாமாகில் "விஷ்ணவே" என்று தனித்து விதிக்கக்கூடாது. அதுக்குமேலே அந்த க்ரியைகளுக்கு தத்தத்தேவதாப்ரதிஸம்பந்திகத்வமில்லையாகில் ஸர்வக்ரியைகளிலும் விஷ்ணவேயென்று வ்யாபகத்வேந ஸர்வவிஶேஷ்யபூதனான ஸர்வேஶ்வரனை ப்ரதிஸம்பந்தியாகவிதிக்க அமையும்.

அங்ஙனன்றியிலே அந்த தேவதைகளையும் ஸர்வேஶ்வரனையும் தனித்துவிதிக்கக் காண்கையாலே அந்தவிதிகளுக்கு ப்ரதிஸம்பந்தி அந்த தேவதைகளாகவேணும். ஆகையாலே அந்த தேவதைகள்தான் விஶேஷணத்வேந ஶேஷபூதராய்க்கொண்டு தங்கள் ஸ்வரூபம் ஸித்தமாயிருக்கச் செய்தேயும், "நாம்விஶேஷணத்வேந ஶேஷபூதர்; அவன் விஶேஷ்யத்வேந ஶேஷி" என்கிற ஜ்ஞாநமின்றியிலே "தேவோஹம், ஸ்வதந்த்ரோஹம்" என்று அஹங்காரமமகாரக்ர(க்ர)ஸ்தராயிருப்பார் சிலராகையாலே, பர்த்ருஶேஷபூதையான பார்யையானவள் ஆர்த்தவாதி தூஷிதையானவன்று அந்த பர்த்தாவோடு புத்ரர்களோடு வாசியற ஸர்வர்க்கும் ஸ்பர்ஶயோக்யதையில்லாதாப்போலே பகவச்சேஷத்வஜ்ஞாநமுடையார்க்கு தத்தத்தேவதா ப்ரதிஸம்பந்திகமான க்ரியைகள் த்யாஜ்யங்களாகையாலும், விதி விஶேஷ்யபர்யந்தமானபோதும் இந்த ந்யாயத்தாலே விஶேஷணத்துக்கு அஜ்ஞாநநிபந்தநமான அந்யதாத்வம் வருகையாலும், பூர்வோக்த ந்யாயத்தாலே ஸம்யக்ஜ்ஞாநநிஷ்டனைக்குறித்து விதியில்லாமையாலும், ஸம்ஶயவிபர்யயரஹிதமாம்படி நிர்ஹேதுகமாக லப்த(ப)ஜ்ஞாநரான ஆழ்வார், (க) "நீராய்நிலனாய்" என்றுதொடங்கி ஸர்வேஶ்வரனுடைய ஸர்வஶரீரத்வத்தை ஸாமாநாதிகரண்யத்தாலே அநுஸந்தித்து, தமக்கு அநுபா(ரூ)வ்யத்தை நிர்ணயித்து அபேக்ஷிக்கிற விடத்தில் (க) "கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால்வாராய்" என்று அஸாதாரண லக்ஷணமாயிருந்துள்ள ஶங்கசக்ர த(ஞ்)ரமான விக்ரஹத்தோடே வரவேணுமென்றபேக்ஷிக்கையாலும்,

(க) தி-வாய்-சு-கூ-க

யஜ்ஞத்திலே தீக்ஷித்தவனுக்கு நித்யகர்மங்கள் த்யாஜ்யமாமாபோலே பகவதுபாய நிஷ்டராவான்களுக்கு இவை த்யாஜ்யமாகையாலும் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநவான்களுக்கு தத்ப்ரகாராநுஷ்டாநம் அநுபபந்நமாகையாலே இது சொல்லவொண்ணாது.

கர்மஹேதுகோத்பந்ந ஶரீரமேயாகிலும் இந்த ஜ்ஞாநாநந்தரம் கர்மநிராஸபூர்வக கேவல பகவதிச்சாஹேதுவான ஶரீரஸ்திதியாகையாலே இந்த இச்சாஶ்ரயம் பகவத்விஷயமாகையாலும், பூர்வ ஜந்ம மாதாபித்ருஶேஷத்வம் அநந்தரஜந்மத்திலில்லாதாப்போலே இந்த ஶரீரோத்பாதகரான மாதாபித்ருவிஷயஶேஷத்வம் இவனுக்கில்லாமை கீழ்ச்சொன்ன ஹேதுஸித்தமாகையாலும் தந்நிவ்ருத்தி அத்யந்தம் ப்ராப்தமென்னுமிடம் ஸுநிஶ்சிதம். (க) "సహి విద్యాతస్తం జనయతి తచ్ఛ్రేష్ఠం జన్మ - ஸஹிவித்யாதஸ்தம்ஜநயதிதச்ச்ரேஷ்டம்ஜந்ம" (உ) "அன்றுநான்பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்றும் இந்த ஜ்ஞாநோத்பத்தியையும் ஜந்மாந்தரமாகச் சொல்லிற்றிறே.

ஜ்ஞாநம் பிறந்தவநந்தரத்திலே ஶரீரவிமோசநம் பிறக்குமாகில் ஒருவர்க்கும் இந்தஜ்ஞாநம் பிறவாதென்றும், இவனாலே அநேக சேதநரைத் திருத்தலாமென்றும், இவனுடைய சரமஶரீரமாகையாலே தனக்குண்டான வாதராதிஶயத்தாலும் ஈஶ்வரன் தன்னிச்சையாலே வைக்குமென்று பூர்வாசார்யர்களருளிச்செய்கையாலே பகவதிச்சையே ஹேதுவென்னக் குறையில்லை.

ஆனால் து:க்கஹேதுவான வ்யாத்யாதிகளுண்டாவானென்னென்னில், கர்மபலந்தான் வ்யாத்யாதிரூபேணவும், தேவதாந்தரஶேஷத்வரூபேணவும், தேஶகாலாதிநிபந்தநமான ஶீதோஷ்ணாதிகள், அந்நபாநாதி வாஞ்சையித்யாதி ரூபேணவும் த்ரிவிதமாயிருக்கும்.

அதில் வ்யாத்யாதிகள் தஜ்ஜநிதக்லேஶாதிஶயத்தாலே ததாஶ்ரயமான ஸ்வரூபவிருத்த ஶரீரத்திலே உபேக்ஷாபிறக்கைக்கு ஹேதுவாகையாலே ஹிதபரனான ஈஶ்வரன் தத்ஹேதுவான கர்மத்தை நிஶ்ஶேஷமாக நிவர்த்திப்பிப்பன். தேவதாந்தரஶேஷத்வம் ஸ்வரூபவிருத்தமாகையாலே ஸ்வரூபாநுகுணாக்ஷணம் பண்ணுகிற ஈஶ்வரன் தத்ஹேதுவானகர்மத்தினுடைய நிஶ்ஶேஷநிவ்ருத்தி

(க) ஆபஸ்தம்பதர்ம-க- (உ) தி-ச-வி-௬௪-

யைப்பண்ணும். தேஶகாலநிபந்தநமான ஶ்ரீமோக்ஷணாதிகள், அந்ந பாநாதிவாஞ்சை, இவை தேவதாந்தர ஶேஷத்வத்தோபாதி ஸ்வரூ பத்துக்கு அத்யந்தம் விருத்தமின்றியிலே வ்யாத்யாதிகளோபாதி ஶரீரோபேக்ஷாதிகள் பிறக்கைக்கு ஹேதுவாகையாலே தத்தேது வான கர்மத்தை அவன் உபேக்ஷித்திருக்கும். ஆகையாலே இச்சா ஹேதுவான ஶரீரஸ்திதிக்குங்குறையில்லை. அந்யஶேஷத்வநிவ் ருத்தியும் அத்யந்தமநுபபந்நம். ஆக உகாரத்தாலே ஶாஸ்த்ரீயமான அக்நீந்த்ராதி தேவதாநுவர்த்தநத்தையும் மாதாபிதாசகளுடைய அநுவர்த்தநாதிகளையும் வ்யாவர்த்திக்கிறது.

அங்ஙனன்றியிலே இவ்வுகாரம் பகவத்வ்யதிரிக்த ஶேஷத்வத் தினுடைய நிவ்ருத்தியைப் பண்ணுகிறதென்றுமர்த்தம். தத்வ்யதி ரிக்தஶேஷத்வத்தில் நிருபாதிக ப்ரஸங்கமில்லாமையாலே நிரஸ்தம். ஆக ஸர்வகாரணபூதனுய் ஸர்வரக்ஷகனுய் ஶ்ரிய:பதியாய் ஸர்வஶே ஷியான அகாரவாச்யனுக்கே அநந்யார்ஹ ஶேஷமென்றதாயிற்று.

அநந்தரம், மகாரம் இப்படி ஶேஷபூதனுய் தேஹேந்த்ரியாதி விலக்ஷணனுய் ஆநந்தரூபஜ்ஞாந ஸ்வரூபனுமாய் அஹமர்த்தவாச் யனுமாய் ஜ்ஞாத்ருத்வாதி குணவிஶிஷ்டனுமாய் ஸ்வயம்ப்ரகாஶ னுமாய் அணுபரிமாணனுனவாத்மாவைச் சொல்லுகிறது.

எங்ஙனேயென்னில்; (க) "भूतानि च कवर्गेण-பூதாநிசகவர்க்கே ண" இத்யாதியாலே தேஹோபாதாநமான பூதபஞ்சகங்களும் இந் த்ரியங்களும் விஷயங்களும் மனோஹங்காரங்களும் தொடக்கமான விருபத்துநாலுதத்வங்களையும் ககாராதி (ஃ) பகாராந்தமான இரு பத்து நாலக்ஷரத்தாலும் சொல்லி, அநந்தரம்.(உ) "आत्मा तु मकारेण पञ्चविंशः प्रकीर्तितः - ஆத்மா துமகாரேண பஞ்சவிம்ஶ:ப்ரகீர்த்தித:" என்று இருபத்தஞ்சாம் தத்வமான ஆத்மாவை இருபத்தஞ்சாமக்ஷர மானமகாரத்தாலே இவற்றிற்காட்டில் வேறுபடச்சொல்லுகையா லே; ஆத்மா தேஹாதிவிலக்ஷணனென்னுமிடம்சொல்லிற்று.

ஆத்மாதான் தேஹாதிவிலக்ஷணனுனபடி யென்னென்னில், தேஹமாகிறது- அவயவ ஸமுதாயமாகையாலே அந்த வவயவங்க ளுக்கு, என்னுடைய அவயவங்களென்று அந்யனுயிருப்பானொரு

(க) பாத்மோத்தரே-உஉசு-   (உ)

வ்னுடைய மமதைக்கு விஷயமாகையொழிய அஹம்வ்யவஹாரமில்லாமையாலும், ஒரு அவயவம் ஆத்மாவென்னும்போதைக்கு தத்தத(ஜா)பாவத்திலும் அஹம் வ்யவஹாரமுண்டாகையாலும், அவயவங்களெல்லாம் தனித்தனியே ஆத்மாக்களாமிடத்தில் ஆத்மபூதமாயிருக்கிற பாதத்திலுண்டானக்ஷதி அந்யாத்மாவாயிருக்கிற ஜிஹ்வை அறியக்கூடாமையாலும், (க) ''దేహస్తావదనాత్మా దృశ్యత్వాద్ఘటవచ్ఛ్రుతేః। ఆత్మా ఉదృశ్యో యతో యస్మాత్ప్రమాణైరేవ సర్వదా। ప్రత్యక్షేణోపలభ్యన్తే యథా ఘటాదయః। తథోపలభ్యతే దేహో హ్యతో నాత్మా భవేద్ధ్రువమ్ - தேஹஸ்தாவதநாத்மாத்ருஶ்யத்வாத்கடவச்சுருதே । ஆத்மாத்ருஶ்யோயதோயஸ்மாத்ப்ரமாணைரேவஸர்வதா । ப்ரத்யக்ஷேணோபலப்யந்தேயதைவாத்ரகடாதய:। ததோபலப்யதேதேஹோப்யதோநாத்மாபவேத்த்ருவம்'' என்று அசக்ஷுர்விஷயனென்று ப்ரமாணங்கள் சொல்லுகையாலே சக்ஷுர்விஷயமான தேஹம் ஆத்மாவாகக்கூடாதென்று சொல்லுகையாலும், நானும் என்னுடைய உடம்புமென்னும் அஹமர்த்தபூதனான வாத்மாவைக்காட்டில் இத(ட)மர்த்தபூதமான தேஹத்தைப் பிரியச்சொல்லுகையாலும் தேஹத்திற்காட்டில் வ்யாவ்ருத்தனென்னுமிடம் ஸித்தம்.

''యోహమద్రాక్షం సోహం స్పృశామి - யோஹமத்ராக்ஷம்ஸோஹம்ஸ்ப்ருஶாமி'' என்று தர்ஶநஸ்பர்ஶநங்களிரண்டுக்கும் ஒருவனே கர்த்தாவென்று சொல்லுகையாலும், ''న భవేచ్చక్షురాద్యాత్మా కరణత్వాత్ప్రదీపవత్। తథాత్మా న భవత్యన్యానీన్ద్రియాణ్యపి శోభనే - நபவேச்சக்ஷுராத்யாத்மாகரணத்வாத்ப்ரதீபவத் । ததாத்மாநபவத்யந்யாநீந்த்ரியாண்யபிஶோபநே'' என்று சக்ஷுராதிகளைப்போலே பதார்த்த தர்ஶநத்துக்கு ஹேதுவாகச்சொல்லுகையாலே கரணபூதமான இந்த்ரியங்களிற்காட்டில் கர்த்த்ருபூதனான வாத்மா வ்யாவ்ருத்தனென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம்.

ஆத்மஸந்நிதியுமுண்டாய் இந்த்ரியங்களுக்கு விஷயஸ்பர்ஶமுண்டாயிருக்கச்செய்தேயும் அந்த:கரணாபாவத்தாலே விஷயஜ்ஞாநமின்றிக்கேயொழிகையாலே அந்த:கரணாபேக்ஷையுண்டாகையாலும் ''ఆత్మా మనోపి న భవేత్కరణత్వాత్ప్రదీపవత్ - ஆத்மாமநோபிநபவேத்கர

ணத்வாத் ப்ரதீபவத்'' என்று ஸ்ம்ருதிகளுக்குக் கரணமாகச் சொல்லுகையாலும் கர்த்தாவான ஆத்மாவுக்குக்காணத்வம் கூடாமையாலும், பாஹ்யேந்த்ரியங்களினுடைய அபாவத்திலும் ஸ்ம்ருதியுண்டாகையாலே அவை ஸ்ம்ருதிகளுக்குக்காணமாக மாட்டாமையாலும், இவையொழிய அந்தஃகரணாபேக்ஷை யுண்டாகையாலே அந்தஃகரணரூபமான மநஸ்ஸிற்காட்டில் கர்த்தாவான ஆத்மா வ்யாவ்ருத்தன்.

"తథైవబుద్ధిస్సిద్ధఞ్చ కరణత్వం దృశోర్యతః – ததைவபுத்திஸ்ஸித்தஞ்ச கரணத்வம்த்ருஸோர்யத:'' என்று அத்யவஸாயத்துக்கும் தர்ஸநத்துக்கும் புத்திசித்தங்களைக் கரணமாகச் சொல்லுகையாலே இவற்றுக்கு ஆஸ்ரயமான வாத்மா இவற்றிற்காட்டில் வ்யாவ்ருத்தன்.

"ప్రాణోప్యనాత్మా విజ్ఞేయస్సుషుప్తేశ్చేతనోయతః-ப்ராணோப்யநாத்மா விஜ்ஞேயஸ்ஸுஷுப்தேஸ்சேதநோயத:'' என்றுப்ராணனும் ஆத்மாவன்றென்கையாலும் இதுதான் ஒருவர்க்கு ஸேஷமென்கையாலும் ஜ்ஞாநாஸ்ரயமாகமாட்டாமையாலும் ஜ்ஞாநாஸ்ரயமான ஆத்மா ப்ராணனில் வ்யாவ்ருத்தன்.

ஆகையாலே தேஹேந்த்ரியமந:ப்ராணாதிகளிற்காட்டில் வ்யாவ்ருத்தனென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம்.

இ(ద)தம் ஸப்தவாச்யமான ஸரீராதிகளை ககார்க்கந்தொடங்கி ப(్ర)காரமளவாகச்சொல்லி, அஹம்ஸப்தவாச்யமான ஆத்மாவை மகாரத்தாலே சொல்லுகையாலே ஆத்மா அஹம்ஸப்தவாச்யனே; அன்றாகில் பராக(ర)ர்த்தத்திற்காட்டில் ஆத்மாவுக்கு பேத(భేద)கமான ப்ரத்யகர்த்தம் ஸித்தியாது. அஹம் புத்தி(ద్ధి)கோசரம் அஹங்காரரூபஜடம்; அது ஆத்மத்யோதக மென்கிறவிது ஸாந்தாங்காரமானது ஆதித்யதர்ஸநத்துக்கு ஹேதுவாகமாட்டாதாற்போலே இந்த ஜடரூபமான அஹங்காரம் ஸ்வயம்ஜ்யோதிஸ்ஸான ஆத்மாவைத் த்யோதிப்பிக்கமாட்டா தாகையாலும் ஆத்மா அஹம்புத்திகோசரமாகவேணும்.

ஏவம்பூதமான தேஹாதிவைலக்ஷண்யமும் அஹமர்த்தமும் இவ்வக்ஷரஸ்வபாவத்தாலே சொல்லிற்றாயிற்று.

---

† (பா) సజ్ఞాతైన.

இதுதான் "మన-జ్ఞానే-மந-ஜ்ஞாநே" என்கிற தா(தா)துவிலே வ்யுத்பந்நமாய் வாச்யமான ஆத்மாவினுடைய (க) "అత్రాయంపురుష స్స్వయంజ్యోతిర్భవతి-அத்ராயம்புருஷஸ்ஸ்வயம்ஜ்யோதிர்ப்பவதி" (௨) "జ్యోతిరహమస్మి - ஜ்யோதிரஹமஸ்மி" (௩) "విజ్ఞానఘనఏవ - விஜ்ஞாநகநஏவ" (௪) "విజ్ఞానంయజ్ఞంతనుతే-விஜ்ஞாநம்யஜ்ஞம்தநுதே" இத்யாதி ப்ரமாணஸித்தமாய், க(கு)டாதிபதார்த்த ஸத்பாவத்திற்போலே‡ஸம்ஶயமின்றியிலேயிருக்கையாலே ப்ரத்யக்ஷஸித்தமாயிருக்கிற ஜ்ஞாநஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. இதுதான் அநுகூலமாகப்ரகாஶிக்கையாலே ஆநந்தரூபனுமிருக்குமென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம். "అహమిదంజానామినజానామి-அஹமிதம்ஜாநாமிநஜாநாமி" என்கிற ஸ்வவ்யதிரிக்த பதார்த்தஜ்ஞாத்ருத்வ ஸம்ஶயம்போலன்றிக்கே "అహమ్-அஹம்" என்கிற ஸ்வரூபம் ஜ்ஞாநாந்தரநிரபேக்ஷமாக நிஸ்ஸம்ஶயமாகத் தோன்றுகையாலே ஸ்வஸ்மைஸ்வயம் ப்ரகாஶமாயிருக்குமென்கிறது. இத்தால், ஆத்மாவினுடைய அநந்யாதீ(தீ)ந ப்ரகாஶகத்வாஹ்லாதகத்வ லக்ஷணமான ஜ்ஞாநாநந்தஸ்வரூபத்வம் சொல்லிற்றாயிற்று.

அநந்தரம், "మను-అవబోధనే-மநு-அவபோதநே" என்கிற தா(தா)துவிலே ஸித்தமாய், (௫) "నహివిజ్ఞాతుర్విజ్ఞాతేర్విపరిలోపోవిద్యతే-நஹிவிஜ்ஞாதுர்விஜ்ஞாதேர்விபரிலோபோவித்யதே" (௬) "విజ్ఞాతారమరేకేన విజానీయాత్-விஜ்ஞாதாரமரேகேநவிஜாநீயாத்" (௭) "జ్ఞోతఏవ-ஜ்ஞோத ஏவ" என்று சொல்லுகிற ஜ்ஞாநகுணகத்வம் சொல்லுகிறது. எனக்கு ஜ்ஞாநம்பிறந்தது, நஶித்ததென்று ப்ரத்யக்ஷமாகையாலும், ஜ்ஞாநம்தர்மமல்லவாகில் ஸம்ஸ்ருத்யவஸ்தையிற்சொல்லுகிறதிரோதா(தா)நத்துக்கு விஷயம் தர்மியாய், அதினுடைய ஏகரூபத்வத்துக்கு ஹாநிவருகையாலும், ஜ்ஞாநம்த(த)ர்மமாகவேணும்.

அநந்தரம், "మాఙ్-మానే-மாங்-மாநே" என்கிற தாதுவிலே பரிமாணாஶ்ரயத்வம் ஸித்தமாய், அந்தப்பரிமாணம் மஹத்பரிமாணமன்று; அணுபரிமாணமென்னுமிடத்தை (௮) "ఏషోఽణురాత్మా-ஏஷோ

(க) ப்ருஹ-௪-௩-௯ (௨) தை-நா- (௩) ப்ருஹ-௪-௪-௧௨
(௪) தை-ஆந (௫) ப்ரு-௪-௩-௩௦ (௬) ப்ருஹ-௪-௫-௧௫
(௭) ப்ரஹ்மஸூத் (௮) முண்ட-௩-௧-௯

‡ "ஆத்மஸத்பாவத்தில்" என்றதிகபாடம்

ணுராத்மா" (க) "வாலாக்ரஶதபாகஸ்ய ஶததா கல்பிதஸ்ய ச பாகோ ஜீவ:-வாலாக்ர ஶதபாகஸ்ய ஶததா கல்பிதஸ்ய ச | பாகோ ஜீவ:" இத்யாதிகளாலே சொல்லுகையாலே அணுபரிமாணத்வம் சொல்லுகிறது. உத்க்ராந்தி க(௩)த்யாக(௩)திகள் ப்ரத்யக்ஷமாகையாலும் அணுபரிமாணனாக வேணும். (உ) "ஸ சாநந்த்யாய கல்பதே-ஸ சாநந்த்யாய கல்பதே" என்று பரமமஹத்பரிமாணபூதனாகவும் சொல்லாநின்றதே யென்னில், அப்போது (௩) "ஆத்மா ஶுத்தோऽக்ஷர: ஶாந்த:-ஆத்மா ஶுத்தோऽக்ஷர: ஶாந்த:" என்று சொல்லுகிற ஏகரூபத்வத்துக்கு ஹாநிவருகையாலே மஹத்பரிமாணத்தைச் சொல்லுகிறதன்று. முக்தாவஸ்தையில் திரோதா(௩)ந நிவ்ருத்திபிறந்து ப்ரகாஶிதமான குணத்தினுடைய ஆநந்த்யத்தைச்சொல்லுகிறது. ஆனால் ஆபாதசூடம் அநுவர்த்திக்கிற ஸுகது:க்காநுபவம் கூடுமோவென்னில், ஸ்வத(௩)ர்மமான ஜ்ஞாநம் வ்யாப்தமாய் ஸர்வத்ர உண்டான ஸுகதுக்காதிகளை ஸ்வாஶ்ரயமான தர்மிக்கு ப்ரகாஶிப்பிக்கையாலே கூடும். ஆகையால் அணுபரிமாணனே; ஏவம்பூதமான ஜ்ஞாநஸ்வரூபத்வஜ்ஞாந குணகத்வ அணுபரிமாணத்வங்கள் தா(௩)துத்ரயத்தாலும் சொல்லுகிறது.

இந்த ஜ்ஞாத்ருத்வம் குணாந்தரங்களுக்குமுபலக்ஷணமாய் நித்யத்வம் ஏகரூபத்வம் தொடக்கமான குணங்களையும் சொல்லுகிறது. (ச) "அஜோऽஹ்யேக:-அஜோஹ்யேக:" (ரு) "நித்யோ நித்யானாம்-நித்யோநித்யாநாம்" என்று நித்யனைச் சொல்லுகையாலும், தேஹாந்தரக்ருத கர்மஹேதுகமான ஸுகது:க்காநுபவம் காண்கையாலும், நிஷ்கர்மனானபோது ஜந்மாதிகள் கூடாமையாலும் நித்யனாகவேணும். (உ) "ஆத்மா ஶுத்தோऽக்ஷர:-ஆத்மா ஶுத்தோக்ஷர:" என்கையாலே ஏகரூபன். இந்த நித்யத்வ ஏகரூபத்வங்கள் இதினுடைய அர்த்தஸ்வபாவத்தாலே சொல்லிற்று.

ஆக, ஆத்மாவினுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை அக்ஷரஸ்வபாவத்தாலும், தா(௩)துக்களாலும் அர்த்தஸ்வபாவத்தாலும் சொல்லாநின்றுகொண்டு ஆத்மாவுக்கு வாசகமாயிருக்கிறது மகாரம். இதில் ஏகவசநம் ஜாத்யேகவசநமாய், (ரு) "நித்யானாம் சேதநாநாம் பஹூநாம்-

(க) ஶ்வே-ரு-அ (உ) ஶ்வே-ரு-அ (௩) வி-பு-உ-௧௩-௭
(ச) கை-நா-௧உ (ரு) ஶ்வே-௬-௧௩

நித்யாநாம்சேதநாநாம்பஹூநாம்'' என்று சொல்லுகிற பத்த(ஷ) முக்த நித்யாத்மகமான த்ரிவிதாத்மவர்க்கத்தையும் சொல்லுகிறது. ஸுகதுஃக்காதி வ்யவஸ்தாபேதத்தாலும் ஆத்மாக்கள் அநேகராக வேணும். ஆக, மகாரத்தாலே பகவதநந்யார்ஹ ஶேஷமான த்ரிவிதாத்மவர்க்கமும் சொல்லிற்றாயிற்று.

அநந்தரம் த்ரிகுணாத்மிகையான அசித்வர்க்கமும் பகவச்சேஷபூதமாகையாலே, ஶேஷபூதவஸ்துக்களுக்கு கர்மாநுபவோபகரணமாயும் கைங்கர்யோபகரணமாயு மிருக்கையாலும், (க) “ஶேஷஸ்ய ஶேஷித்வ-யஸ்யைவ சேதநஸ்ய பத்தநம்” என்கிற ந்யாயத்தாலே ஶேஷியான பகவானுக்கு ஶேஷமாகையாலும், ஶேஷபூதவஸ்துவாசகமான விபத்திலே அந்த அசித்வர்க்கமும் சொல்லப்படுகிறது.

சிதசித்துக்களிரண்டும் ஶேஷமாயிருக்கச்செய்தே ஸ்வதஶ் ஶேஷத்வவிஸ்ம்ருதியுள்ளது சேதநவஸ்துவுக்காகையாலும், தந்நிவ்ருத்திபூர்வகமாக ஶேஷத்வ ஜ்ஞாநாபேக்ஷையும் அவனுக்காகையாலும், தத்கார்யமான ஶேஷவ்ருத்தி ருசிபூர்வகமானதத்விஷயோபாயஸ்வீகாரம் பண்ணுவானும் சேதநனாகையாலும், ஈஶ்வரனுக்கு ஸ்வபோக(போக்ய) விஷயமாயிருப்பதும் சேதநவஸ்துவாகையாலும், இந்த சேதநனுடைய ஶேஷத்வஜ்ஞாநத்தாலே அசித்தினுடைய ஶேஷத்வமும் ஸித்திக்கையாலும் தத்வாசகமான பதத்தாலே அசித்தை உபலக்ஷிக்கிறது. அங்ஙனன்றியிலே இதில் ஶப்தம் அசித்தாகையாலே ஶப்தாம்ஶத்தாலே அசித்வர்க்கத்தைச் சொல்லுகிறது. அர்த்தாம்ஶத்தாலே சித்வர்க்கத்தைச் சொல்லுகிறதென்னவுமாம். ஆக, மகாரத்தாலே கீழ்ச்சொன்ன ஶேஷத்வத்துக்கு விஷயமான த்ரிவிதாத்மவர்க்கமும் த்ரிவிதாசித்வர்க்கமும் சொல்லிற்றாயிற்று.

ஶேஷமான வஸ்துக்களை ப்ரதமம் சொல்லாதே வஸ்துகதமான ஶேஷத்வத்தை ப்ரதமம் சொல்லுகைக்கு ஹேதுவென்னென்னில்; வஸ்துதான் ஶேஷத்வேந உத்பந்நமானதாகையாலே ஶேஷத்வத்தை ப்ரதமத்திலே சொல்லி, அநந்தரம் உத்பந்நவஸ்துவேஷத்தைச் சொல்லவேண்டுகையாலும், ஶேஷபூதவஸ்துகத வ்யாபாரா

(க)

திகளும் ஶேஷ்யதீகமென்னுமிடம் தோற்றுகைக்காகவும், ஶேஷபூதபுருஷனுடைய புருஷார்த்தமும் ஶேஷிப்ரியவிஷயத்வமென்று தோற்றுகைக்காகவும், ஏவம்பூத ஜ்ஞாநாபாவத்தால் ஸ்வவிஷயாரோபிதமான ஸ்வாதந்த்ர்யதாவாநலத்தாலே த(ீ)ஹ்யமாநமான வஸ்துவை தத்ப்ரதிபடமான ஶேஷத்வஜலத்தாலே ஆற்றவேண்டுகையாலும் ஶேஷத்வத்தை ப்ரதமத்திலே சொல்லி அநந்தரம் தத்ஸித்தமான வஸ்துவைச்சொல்லக் குறையில்லை.

ஆக ப்ரணவத்தாலே ஸர்வகாரணபூதனாய் ஸர்வரக்ஷகனாய் ஶ்ரிய:பதியாய் ஸர்வஶேஷியாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் உபயவிபூதிநாதனாய் ஸர்வஸ்மாத்பரனாய் அகாரவாச்யனான ஸர்வேஶ்வரனுக்கு அநந்யார்ஹஶேஷமானது - தேஹேந்த்ரியாதிவிலக்ஷணமாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாய் அஹம் ஶப்தவாச்யமாய் ஜ்ஞாநகுணகமாய் ஸ்வயம்ப்ரகாஶமாய் அணுபரிமாணமாய் நித்யமாய் ஏகரூபமாய் அநேகவிதமான ஆத்மவஸ்துவும் அவனுக்கு உபகரணபூதமான அசித்வஸ்துவுமென்றதாயிற்று.

இப் ப்ரணவார்த்தத்தை (க) "கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேனொருவர்க்குரியேனோ" என்று திருமங்கையாழ்வாரும் அநுஸந்தித்தருளினார். "கண்ணபுரமொன்றுடையானுக்கு" என்று அகாரார்த்தத்தையும், "ஒருவர்க்குரியேனோ" என்று உகாரார்த்தத்தையும், "அடியேன்" என்று மகாரார்த்தத்தையும். இப்ப்ரணவந்தான் ஶேஷஶேஷிரூபேண ஆத்மபரமாத்மாக்களிருவருடையவும் ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கையாலே ஆத்மஸ்வரூபத்தையும் பகவத்ஸ்வரூபத்தையும் இரண்டையும் சொல்லுகிறது.

எங்ஙனேயென்னில்; அகாரத்திலேறிக் கழிந்த சதுர்த்தீவிபக்தியாலே ஆத்மாவினுடைய ஶேஷத்வத்தைச்சொல்லி, அகாரத்தாலே தத்ப்ரதிஸம்பந்தியைச்சொல்லி, உகாரத்தாலே ததந்யார்ஹதாநிவ்ருத்தியைச்சொல்லி, மகாரத்தாலே ஶேஷமானவஸ்து தேஹேந்த்ரியமந: ப்ராணபுத்திவிலக்ஷணமாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாய் ஜ்ஞாநகுணகமாய் நித்யமாய் அணுபரிமாணமாய் ஏகஸ்வரூபமாயிருக்குமென்றுசொல்லி, ஆக இப்படி ஆத்மஸ்வரூபத்தை யதா(ரூ)வாக ப்ரதிபாதிக்கையாலே ஆத்மஸ்வரூபம் சொல்லுகிறது.

(க) திருமொ-அ-கூ-ரு

ஸவிபக்திகமான அகாரத்தாலே பரமாத்மாவினுடைய ஸர்வ க்ாரணத்வ ஸர்வரக்ஷகத்வ ஶ்ரிய:பதித்வ ஸர்வஶேஷித்வங்களைச் சொல்லி, உகாரத்தாலே ஶேஷித்வத்தினுடைய அந்யார்ஹதா நிவ்ருத்திசொல்லி, மகாரத்தாலே தத்விதமானவிஷயத்தைச்சொல்லி ஆக இப்படி பரமாத்மஸ்வரூபத்தை யதாவாகப்ரதிபாதிக்கையாலே பரமாத்மஸ்வரூபம் சொல்லுகிறது.

அகாரத்தாலே* ரக்ஷணைச்சொல்லி மகாரத்தாலே ரக்ஷ்யவஸ்துவைச்சொல்லி † உகாரத்தாலே ரக்ஷ்யரக்ஷகனுடைய அநந்யார்ஹதாரூபமான லக்ஷணம் சொல்லுகையாலே இப் ப்ரணவத்தாலே உபாயத்தை ப்ரதிபாதிக்கிறது. அகாரத்தாலே ப்ராப்யமான பகவத்ஸ்வரூபத்தைச்சொல்லி, மகாரத்தாலே ப்ராப்தாவான ஆத்மஸ்வரூபம் சொல்லி, ஶேஷத்வமானதுஶேஷவ்ருத்தியொழிய வித்தியாமையாலே தத்வாசகமான சதுர்த்தியாலே கைங்கர்யத்தைச்சொல்லி, அவதா(ஃ)ரணத்தாலே (க) "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்கிற கைங்கர்யத்தைச் சொல்லுகையாலே ப்ரணவத்தாலே ப்ராப்யஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கிறது.

அகாரத்தாலே ஶேஷியான ப்ரஹ்மஸ்வரூபத்தைச்சொல்லி மகாரத்தாலே ஶேஷமான ஆத்மஸ்வரூபம்சொல்லி அகாரத்தில் தா(ஃ)துவாலே உபாயஸ்வரூபம்சொல்லி அதில் சதுர்த்தியாலே புருஷார்த்தஸ்வரூபம்சொல்லி அதிலே அந்யஶேஷத்வஶங்காரூபேண விரோதிஸ்வரூபம் சொல்லுகையாலே ப்ரணவத்தாலே அர்த்தபஞ்சகமும் சொல்லுகிறது. ஆக ப்ரணவத்தாலே பகவத்ஸ்வரூபமென்ன, சித்ஸ்வரூபமென்ன, தத்ஸம்பந்தஸ்வரூப விஶேஷமென்ன, உபாயஸ்வரூபமென்ன, ப்ராப்யஸ்வரூபமென்ன, இத்யாதிகளான ஸகலார்த்தங்களும் சொல்லப்படுகிறது. ஆகையாலே ஸகல ஶாஸ்த்ரஸங்க்ரஹ மென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நமாகச் சொல்லிற்றாயிற்று.

அநந்தரம் உகாரவிவரணமான நமஶ்ஶப்தம் இப்படி ஶேஷபூதனை வாத்மாவினுடைய அஹங்கார மமகாரநிவ்ருத்தியைப் பண்ணுநின்றுகொண்டு ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியையும் தத்விதமான அந்யஶேஷத்வாபாவத்தையும் ஸ்வகதமானஸ்வாமித்வ

(க) தி-வாய்-உ-க-அ † (பா) சதுர்த்தியாலே

ஶேஷித்வங்களினுடைய ராஹித்யத்தையும் தத்பலிதயான பார தந்த்ரயத்தையும் தத்பர்யவஸாந பூமியான ததீயஶேஷத்வத்தை யும் பாதந்த்ரஸ்வரூபத்துக்கு அநுரூபமான உபாயத்தையும் சொல் லுகிறது.

ப்ரதமாக்ஷரமான அகாரத்தை ப்ரதமம் விவரியாதே ப்ரதமம் உகாரவிவரணமான நமஶ்ஶப்தமாகைக்கடி யென்னென்னில்; இம் மந்த்ரந்தான் ஆத்மஸ்வரூபயாதாத்ம்ய ப்ரதிபாதக பரமாகையாலே உகாரோக்தமான பகவத்வ்யதிரிக்தாந்ய ஶேஷத்வநிவ்ருத்திமாத்ரத் தாலே ஸ்வரூபயாதாத்ம்யபூர்த்தி பிறவாமையாலே தத்பூர்த்திஹே துவான ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்திபண்ணுகை அநந்தரம் ப்ராப்த மாகையாலே தத்வாசகமான நமஶ்ஶப்தம் முற்படவேண்டுகையா லும்,ஸ்வரூபத்தை ததீயஶேஷத்வ பர்யந்தமாக வநுஸந்தித்து,தத நு ரூபபுருஷார்த்தஶிக்ஷை பண்ணவேண்டுகையாலே ததீயஶேஷத்வ வாசகமான நமஶ்ஶப்தம் புருஷார்த்த ப்ரார்த்தநாவாசகமான நா ராயணபதத்துக்கு முன்னேயாகவேண்டுகையாலும், இப்பதத்திற் சொல்லுகிற ஸ்வரூபாநுரூபோபாயவரணம் ஸ்வஸ்வதாந்த்ர்ய நிவ் ருத்திபூர்வகமாக வேண்டுகையாலும் ப்ரணவத்திற் சொல்லுகிற ப்ர காரத்வ ரக்ஷ்யத்வ ஶேஷத்வ ததநந்யார்ஹத்வ ஜ்ஞாநாநந்தஸ்வ ரூபத்வ ஜ்ஞாநகுணகத்வாதிகளுடைய ஸ்வார்த்ததை ஸ்வாதீநதை இவற்றினுடைய நிவ்ருத்தியையும் மேலே நாராயணபதத்திற்சொல் லுகிற புருஷார்த்தஸ்வரூப கைங்கர்யத்தில்வருகிற ஸ்வகீயத்வ ஸ் வஸ்வாரஸ்யாதி நிவ்ருத்தியையும் பண்ணும் போதைக்கு காகா க்ஷிந்யாயத்தாலே இருநடுவே கிடக்கவேண்டுகையாலும் ப்ரதமம் உ காரவிவரணமான நமஶ்ஶப்தமாகக்கடவது.

இந்த நமஶ்ஶப்தந்தான் "ந" என்றும், "ம:" என்றும் இரண்டு பதமாயிருக்கும். இதில் மகாரம்—"மந-ஜ்ஞாநே" என்கிற தா(தா) துவிலே ஷஷ்ட்யந்தவசநமாய், (தா)தாத்வர்த்தம் ஜ்ஞாத்ருத்வமா கையாலே எனக்கென்கிற வர்த்தத்துக்கு வாசகமாகிறது. இங்கு விஷயநியமம் பண்ணாமையாலே (க) "ചേതനസ്യയദാമമ്യം സ്വസ്മിൻ സ്വീയേഷുവസ്തുനി മമഇത്യക്ഷരദ്വന്ദ്വം തേദാമമ്യസ്യവാചകം-சேதநஸ்யயதாமம்யம் ஸ்வஸ்மிந்ஸ்வீயேசவஸ்துநி । மமஇத்யக்ஷரத்வந்த்வம்ததாமம்யஸ்ய

(க) அஹி-ஸம்ஹி-௫௨. ௨0.

வாசகம்'' "అనాదివాసనారూఢమిథ్యాజ్ఞాననిబన్ధనా। ఆత్మాత్మీయపదార్థస్థాయాస్వాతన్త్ర్యస్వతామతిః-அநாதிவாஸநாரூடமித்யாஜ்ஞாநநிபந்தநா । ஆத்மாத்மீயபதார்த்தஸ்தாயாஸ்வாதந்த்ர்யஸ்வதாமதி:" என்கிறபடியே அநாதிகாலஸஹிதமான விபரீதஜ்ஞாநமடியாக வுண்டாமதாய், "மமாஹம், மமேதம்" என்றுகொண்டு ஸ்வசதமாகவும் ஸ்வகீயசதமாகவும் கிடக்கிற மமதாமூலக ஸ்வரூபவிருத்த(த)மாய் நிவர்த்யமான அஹங்காரமமகாரங்களைச் சொல்லுகிறது.

நிஷேதகவாசியான நகாரம் அத்தைநிஷேதித்து (க) "నాహంమమ స్వతన్త్రోహం నాస్మీత్యస్యార్థ ఉచ్యతే। న మే దేహాదికం వస్తు స శేషః పరమాత్మనః। ఇతిబుద్ధ్యా నివర్తన్తే తాస్తాస్స్వీయా మనీషితాః। అనాదివాసనాజాతైర్బోధైస్తైస్తైర్వికల్పితైః। దూషితం యద్ధృఢం చిత్తం స్వాతన్త్ర్యస్వత్వధీమయమ్। తత్తద్వైష్ణవసార్వాత్మ్యప్రతిబోధసముత్థయా। నమ ఇత్యనయా వాచా నఞా స్వస్మాదపోహ్యతే- நாஹம் மமஸ்வதந்த்ரோஹம் நாஸ்மீத்யஸ்யார்த்த உச்யதே । நமே தேஹாதிகம்வஸ்து ஸஶேஷ:பரமாத்மந: । இதிபுத்த்யாநிவர்த்தந்தே தாஸ்தாஸ்ஸ்வீயாமநீஷிதா: । அநாதிவாஸநாஜாதைர்போதைஸ்தைஸ்தைர்விகல்பிதை: । தூஷிதம்யத்த்ருடம்சித்தம் ஸ்வாதந்த்ர்யஸ்வத்வதீமயம் । தத்தத்வைஷ்ணவஸார்வாத்ம்யப்ரதிபோதஸமுத்தயா । நம இத்யநயாவாசாநஞாஸ்வஸ்மாதபோஹ்யதே" என்றும் (உ) "யானே நீயென்னுடைமையும் நீயே" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வஸ்வகீய பகவச்சேஷத்வத்தை த்ருடீகரியாநின்றுகொண்டு ஸ்வாஹங்கார மமகாரநிவ்ருத்தியைப் பண்ணுகிறது.

இதில் அஹங்காரநிவ்ருத்தியாலே † ஸ்வஶேஷத்வாபாவம் சொல்லிற்று. மமகாரநிவ்ருத்தியாலே ஸ்வாமித்வ ஶேஷித்வங்களினுடைய ராஹித்யமும் ஸ்வகீய வ்யாபாராதிகளுடைய ஸ்வாதீநதாநிவ்ருத்தியும் பலிக்கையாலே, இத்தாலே ஸ்வார்த்தத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்களினுடைய நிவ்ருத்திசொல்லிற்று. ஆக நமஶ்ஶப்தத்தாலே (ரு) "ద్వ్యక్షరస్తు భవేన్మృత్యుః-த்வ்யக்ஷரஸ்துபவேந்ம்ருத்யு:" (ச) 'మమేతి ద్వ్యక్షరో మృత్యుః-மமேதித்வ்யக்ஷரோம்ருத்யு:" என்றும், (உ) "யானே யென்றனதே யென்றிருந்தேன்" என்றும், ஆத்மாவுக்கு நாஶகமான

---

† ஶேஷத்வம்.

(க) அஹிர்ஸம்ஹி. (உ) தி-வாய்-உ-கூ-க. (ரு) பார-ஶாந்தி-சரு.

அஹங்கார மமகாரங்களை நிவர்த்திப்பித்து, (க) "ॐ[illegible]ब्रह्मणः पद[illegible]-த்ர்யக்ஷரம்ப்ராஹ்மண:பதம்" (உ) "[illegible] - நமமே திச ஶாஶ்வதம்" (ரு) "[illegible]-அஹமபிநமம-பகவதஏவாஹமஸ்மி" (சு) "[illegible]-தாஸுமமதா நாஸ்தி-[illegible]-யா:காஶ்சநக்ருதயோமமபவந்தி-தாஸுமமதா நாஸ்தி பகவதஏவதா:" என்று ஆத்மோஜ்ஜீவநமாயிருக்கிற ஶேஷத்வபாரதந்த்ர்யங்களைச் சொல்லுகிறது.

ஆத்மஸ்வரூபம் ஶேஷமாய் ஜ்ஞாதாவாயிருக்கையாலே ப்ரதமம் ஶேஷத்வவாசியானபதம் உதித்தாப்போலே அஹங்காராதிகள் நிஷேத்யமாயேயிருக்கையாலே இங்கும் நிஷேத்யத்துக்கு முன்னே நிஷேதகம் முற்படுகிறது.

கீழே அநந்யார்ஹ ஶேஷத்வம் சொன்னபோதே ஸ்வஸ்வாதந்த்ர்யம் நிவ்ருத்தமன்றோ வென்னில்,

பார்யைக்கு பர்த்ரு ஶுஶ்ரூஷணம் ஸ்வரூபமாய், அது அவனுக்கு போக்யமாயிருக்கச்செய்தேயும் போக(भोग)ரஸத்திலே தனக்கும் அந்வய முண்டாய், (ரு) "[illegible]-பதிம்யாநாதிசரதி மநோவாக்காயகர்மபி: । ஸாபர்த்ருலோகாநாப்நோதிஸத்பிஸ்ஸாத்வீதி சோச்யதே" என்று அந்த ஶுஶ்ரூஷணந்தான் பர்த்ருலோகப்ராப்திக்கு ஸாதநமாயிருக்கையாலே ஶேஷபூதையானவவளுக்கு ஸ்வாதந்த்ரயம் அநுவ்ருத்தமாயிற்று.

உபாஸகனுக்கு பகவச்சேஷத்வஜ்ஞாநம் பிறந்து கைங்கர்ய ருசியும் நடந்து போராநிற்கச்செய்தேயும் ப்ராப்ய ப்ராப்திஸாதநம் ஸ்வப்ரவ்ருத்திரூப கர்மாதிகளாகையாலே பகவச்சேஷமான ஸ்வரூபத்துக்கு ஸ்வாதந்த்ர்யம் அநுவ்ருத்தமாய்ப் போந்தது.

அங்ஙனன்றியே ஸ்வரூப புருஷார்த்தங்கள் ஸ்வ(ग)கதமல்லாத வோபாதி ஸ்வரக்ஷணார்த்த வ்யாபாரமும் ஸ்வகதமல்லவென்றதாயிற்று. "அது ஸ்வரூபம் பரகதம், விரோதிபரகதம், புருஷார்த்தம் பரகதமென்கிற ப்ரதிபத்திஸ்வகதம், அதுவும் பராதீநம்" என்கிற ஆச்சான்பிள்ளை வார்த்தை இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

(க) பரா-ஶாந்தி-௪௩ (உ) (ரு)
(சு) (ரு)

அதவா, ஶேஷமானவஸ்து ஜ்ஞாதாவாயிருக்குமென்று மகாரத்தாலே சொல்லுகையாலே அந்த ஜ்ஞானத்தாலே ஹிதாஹிதவிஷயீகாரமுண்டாய், அத்தாலே ஹிதரூபக்ரியை பண்ணிக்கொண்டு நமஶ்ஶப்தம் அதடியாகவருகிற ஸ்வாதந்த்ர்யத்தை நிஷேதிக்கிறதென்னவுமாம்.

ஆகையாலே அங்கு பகவச்சேஷத்வ விரோதியான ஸ்வாதந்த்ர்யத்தினுடைய நிவ்ருத்தியைப் பண்ணிற்று. இங்கு அந்தஶேஷத்வத்தினுடைய ஸ்வாதீநதாநிவ்ருத்தியையும் ஶேஷிபூத பகவத்ரக்ஷகத்வ விரோதியான ஸ்வாதந்த்ர்யத்தினுடைய நிவ்ருத்தியையும் பண்ணுகிறது.

ஶேஷபூதனான சேதநன் ஸ்வரக்ஷணத்தினின்றும் நிவ்ருத்தனானால் ஶேஷியான ஈஶ்வரன் ரக்ஷகனுயறுமாகையாலே ஈஶ்வரனுடைய உபாயபாவம் ஆர்த்தமாகத்தோற்றுகிறது, ஆக இப்படி சேதநஸ்வரூபம் பகவதேகஶேஷமுமாய் பகவதேகரக்ஷ்யமுமாயிருக்கையாலே பகவத்கதமான குணங்களோபாதி ப்ராப்யத்வ ப்ரதிபத்தி பண்ணலாயிருக்கிறது. அவன் குணங்களோபாதி அவன் அபிமாநத்தே கிடக்கையாலே;

இவ்வர்த்தத்தை (௧) "அவரைப் பிராயந்தொடங்கியென்று மாதரித்தெழுந்தவென் தடமுலைகள் துவரைப்பிரானுக்கே சங்கற்பித்துத் தொழுதுவைத்தேன்" என்று நாய்ச்சியாருமருளிச்செய்தார். (௨) "ఇచ్ఛాత ఏవతవ విశ్వపదార్థసత్తా నిత్యం ప్రియాః స్తవతు శేషవతేహినిత్యాః॥ నిత్యం త్వదేకపరతన్త్రనిజస్వరూపాభావత్కమఙ్గళగుణాహి నిదర్శనంనః" இச்சாத ஏவதவவிஶ்வபதார்த்தஸத்தா நித்யம் ப்ரியாஸ்தவதுஶேஷவதேஹி நித்யா॥ நித்யம்த்வதேகபரதந்த்ர நிஜஸ்வரூபாபாவத்கமங்களகுணாஹி நிதர்ஶநம்நஃ" என்று பகவத்ப்ரீதிவிஷயபூதராய்க்கொண்டு ததபி(௩) மாநாந்தர்ப்பூதரானவர்கள் அவன் குணங்களோபாதி ப்ராப்யபூதரென்னுமர்த்தந்தை ஆழ்வானுமருளிச்செய்தார். குணங்களோபாதி பரதந்த்ர்களாகச் சொல்லுகையாலே அவனுக்கு இஷ்டவிநியோகார்ஹரென்னுமிடம் சொல்லிற்றாயிற்று. இஷ்டவிநியோகார்ஹத்வமாவது - அவன் கொடுத்தார்க்கு ஸ்வம்மாம்படியிருக்கையிறே. அப்போதிறே பாரதந்த்ர்யஸித்தியும். ஆகையாலே (௩) "அடி

(௧) நா-தி-௬-௪ (௨) வை-ஸ்த-௩௩ (௩) அமல-௧.

யார்க்கென்னை யாட்படுத்தவிமலன்'' என்றும், (க) "యాం శ్రీర్బ్రహ్మణా సఖ్యమయ్యయోధ్యానివాసినామ్| మత్ప్రియార్థం విశేషేణ భరతే సాని వేశ్యతామ్-யாப் ரீதிர்ப்ரஹ்மணாஸக்யமப்யயோத்யாநிவாஸிநாம் | மத்ப்ரியார்த்தம் விஶேஷேண பரதேஸாநிவேஶ்யதாம்'' என்றும் சொல்லுகிறபடியே ஶேஷிபூத பகவத்ப்ரேரிதமாய் ஶேஷபூத சேதநபாரதந்த்ர்ய பூர்த்திஹேதுவாயிருக்கிற ததீயஶேஷத்வமும் இப்பதத்திலே சொல்லிற்றாயிற்று.

பகவச்சேஷத்வபூர்த்தி ததீயஶேஷத்வத்தாலேயாகில்; அது கீழ்ச்சொன்ன பகவதநந்யார்ஹ ஶேஷத்வத்தோடு விருத்தமாகாதோவென்னில்; இந்த ததீயஶேஷத்வம் ஶேஷியான ஈஶ்வரனுடைய நியோகநிபந்தநமாய்க்கொண்டு ஶேஷத்வகார்யமாய் வருகிறதாகையாலே, பதிவ்ரதையானவள் பர்த்த்ருநியோகத்தாலே தத்பந்துஶுஶ்ரூஷணம் பண்ணினால் பர்த்த்ருப்ரியகாமாய்க்கொண்டு பாதிவ்ரத்யாபிவ்ருத்தி ரூ(த்)பமாமாபோலே அநந்யார்ஹஶேஷத்வாபிவ்ருத்தி(த்)ஹேதுவாமத்தனையொழிய தத்விருத்தமாகாது. ஆனாலும், (உ) "ఉత్తమః పురుషస్త్వన్యః-உத்தம: புருஷஸ்த்வந்ய:" என்கிற ந்யாயத்தாலும், ஈஶ்வரன், (ங) "மனனுணர்வளவிலன், பொறியுணர்வவையிலன்" (ச) "இலதுமுள்ளதுமல்லதவனுரு" என்கிறபடியே சேதநாசேதநவிஸஜாதீயனாகையாலும், ததீயரோயாகிலும் அந்யத்வம் வாராதோவென்னில். (ரு) "అనన్యాశ్చింతయన్తః-அநந்யாஶ்சிந்தயந்த:'' என்கிறபடியே இவர்கள்தான் அவனுக்கு அப்ருதக்ஸித்த விஶேஷண ஜ்ஞாநவான்களாய்க்கொண்டு அந்யரன்றிக்கேயிருக்கையாலும் (சு) "జ్ఞానీత్వాత్మైవ-ஜ்ஞாநீத்வாத்மைவ'' என்றும், (எ) "பத்தராவியை" என்றும், ததீயஶேஷத்வபர்யந்தமான தச்சேஷத்வ ஜ்ஞாநமுடையவர்கள் ஸர்வாத்மபூதனை தனக்கும் ஆத்மபூ(பூ)தராகச் சொல்லுகிற க்ருஷ்ணாபிப்ராயத்தாலே ஆத்மஶரீரங்களுக்கு அந்யத்வம்வாராது.

இந்த ததீயஶேஷத்வம் (அ) "స్వేచ్ఛయైవ పరేశస్య తాదధీన్యఫలాత్తునః| భగవద్భక్తశేషత్వం స్వేచ్ఛయాపి క్వచిద్భవేత్- ஸ்வேச்சயைவபரேஶஸ்யதா

(க) ரா-அயோ- (உ) கீ-௧௫-௧௮ (ங) தி-வாய்-க-க-உ
(ச) தி-வாய்-க-உ-ச (ரு) கீ-கூ-உரு (சு) கீ-எ-கஅ
(எ) தி-மொ-க0-க-அ (அ)

ததீநபலார்த்தந: । பகவத்பக்தஶேஷத்வம் ஸ்வேச்சயாபிக்வசித்பவேத்” என்கிறபடியே ஶேஷபூதனை தன்னுடைய அதீநமானதல்லாதாப்போலே ஶேஷபூதப்ரதிஸம்பந்தி நியோகாதீநமாக வன்றிக்கே, (க) “ఇత్థం త్వనయోర్దేవః స్వభక్తవిషయే ప్రభుః । ఆత్మాత్మీయస్య సర్వస్య సఙ్కల్పయతి శేషతామ్ ॥ అన్యోన్యశేషభావోఽపి పరస్వాతన్త్ర్యసమ్భవః । తత్తదాకారభేదేనయుక్త ఇత్యుపపాదితమ్- இதிஸ்வோக்திநயாதேவ ஸ்வபக்தவிஷயே ப்ரபு: । ஆத்மாத்மீயஸ்யஸர்வஸ்யஸங்கல்பயதிஶேஷதாம் । அந்யோந்யஶேஷபாவோபி பாஸ்வாதந்த்ர்யஸம்பவ: । தத்ததாகாரபேதேந யுக்தஇத்யுபபாதிதம்” என்கிறபடியே ஶேஷியான ஈஶ்வரனுக்கு ப்ரீதிவிஷயபூதரானவர்களைப்பற்ற தத்ப்ரேரிதமாய்க்கொண்டு வந்ததாகையாலே இஷ்டவிநியோகார்ஹதாலக்ஷணமான அநந்யார்ஹ ஶேஷத்வ கார்யமித்தனையொழிய அத்தோடு விருத்த(த்த)மன்று.

ஸ்வப்ரியவிஷயபூதரைப்பற்ற ஶேஷபூதசேதநரை ஶேஷமாக்கி அதடியாகத்தான் ப்ரியதமனாயிருக்குமென்கையாலே தத்ப்ரீதியே புருஷார்த்தமாயிருக்கும்; அவர்களுக்கு அந்தப்ரீதி ஔபாதிகமாகமாட்டாது. அதுதானே ப்ரயோஜநமாமித்தனை யாகையாலே ததீயஶேஷத்வம் நிருபாதிகமாகக்கடவது.

அங்ஙனன்றியிலே பகவச்சேஷத்வம்போலே ஸ்வத: வருகையன்றிக்கே பகவத்ப்ரேரிதமாய்க்கொண்டு வருகையாலே ஔபாதிகமென்னவுமாம். ப்ரதிஸம்பந்தி விஷயங்களினுடைய புத்த்பதீநமாக ஏககாலீநமாக ஏகாஶ்ரயஸ்தமாய் வருகிற ஶேஷஶேஷிபாவம் ஆஶ்ரயபேதேந வுண்டாகிறதாகையாலே அந்யோந்யாஶ்ரய தோஷமில்லாமையாலே இந்த ததீயஶேஷத்வம் உபபந்நமென்றதாயிற்று.

ஆக இந்த நமஶ்ஶப்தத்தாலே அஹங்காரமமகார நிவ்ருத்தியும், நிவ்ருத்தமான ஸ்வரூபத்தினுடைய அத்யந்தபாரதந்த்ர்யமும் பாரதந்த்ர்ய காஷ்டையான ததீய ஶேஷத்வமும் பாரதந்த்ர்யாநுரூபமான உபாயமுமாகிற இந்த நாலர்த்தமும் சொல்லிற்று.

ஆனாலும் இது அநந்யஶரணத்வ ப்ரகாஶகமாயிருக்கும்; எங்ஙனேயென்னில்; கீழே ஆர்த்தமாக உபாயபாவம் சொல்லாநிற்கச்

(*)

செய்தேயும் அவ்வளவில் பர்யவஸியாதே, (௧) “యశ్చదేవో మయాదృష్టః పురాపద్మాయతేక్షణః । స ఏష పృథుదీర్ఘాక్షస్సమ్బన్ధీ తే జనార్దనః । సర్వేషామేవ లోకానాంపితామాతాచమాధవః । గచ్ఛధ్వమేనంశరణం శరణ్యంపురుషర్షభాః - யஶ்சதேவோமயாத்ருஷ்டः புராபத்மாயதேக்ஷணः । ஸஏஷப்ருது தீர்க்காக்ஷஸ்ஸம்பந்தீதேஜநார்தநः । ஸர்வேஷாமேவலோகாநாம் பிதாமாதாசமாதவः। கச்சத்வமேநம்ஶரணம்ஶரண்யம்புருஷர்ஷபாः” என்று ஸர்வலோகங்களுக்கும் ப்ரியஹிதங்களை நடத்திக்கொண்டு போருவானொருவனாகையாலே எல்லார்க்கும் மாதாவுமாய் பிதாவுமாய் (௨) “உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணன்”. என்கிறபடியே அந்த ப்ரியஹிதபரதைகளெல்லாம் தோன்றும்படி பத்மாயதேக்ஷணனாயிருப்பான் யாவனொருவன்; அவனொரு தேவன் முன்பென்னால் காணப்பட்டான்; அந்த ஜநார்த்தநன் ப்ருதுதீர்க்காக்ஷனாய்க்கொண்டு உங்களுக்கு ஸம்பந்தியாயிருக்கிறான்; அவனைச் சரணம்புகுருங்கோளென்று உபதேஶிக்க, அநுஷ்டாநவேளையில் (௩) “ఏవముక్తాస్త్రయః పార్థా యమౌ చ భరతర్షభ । ద్రౌపద్యా సహితాస్సర్వే నమశ్చక్రుర్జనార్దనమ్ - ஏவமுக்தாஸ்த்ரயः பார்த்தாயமௌசபரதர்ஷப । த்ரௌபத்யாஸஹிதாஸ்ஸர்வே நமஶ்சக்ருர்ஜநார்தநம்” என்றிப்படி சொல்லப்பட்ட பாண்டவர்களைவரும் த்ரௌபதியோடே கூடிக்கொண்டு நமஸ்ஸைப்பண்ணினார்களென்கிற ஸ்தாநப்ரமாணத்தாலும் உபாயவாசகமாகச் சொல்லுகையாலும்,

(௪) “పన్థానకారఉద్దిష్టః ప్రధానఉదీర్యతే । విసర్గః పరమేశస్తు తత్రార్థోఽయం నిరూప్యతే । అనాదిః పరమేశో యశ్శక్తిమానచ్యుతః ప్రభుః । తత్ప్రాప్తయే ప్రధానోఽయం పన్థాస్సమనసావాన్ - பந்தாநகார உத்திஷ்டः ப்ரதாந உதீர்யதே । விஸர்கः பரமேஶஸ்துதத்ரார்த்தோயம்நிரூப்யதே । அநாதிः பரமேஶோயஶ்ஶக்திமாநச்யுதः ப்ரபுः। தத்ப்ராப்தயேப்ரதாநோயம்பந்தாநமநாமவாந்” என்று பகவத்ப்ராப்திக்கு கர்மஜ்ஞாநாதிகளிற்காட்டில் ப்ரதாநோபாயமாக பகவத்விஷயத்தைச் சொல்லுகிறது நமஶ்ஶப்தமென்று நிர்வசி(சி)க்கையாலும், இவ்வுபாயாங்கமான ஸ்வப்ரவ்ருத்தி த்யாகத்தை ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்திமுகேந இந்த நமஶ்ஶப்தத்திலே சொல்லுகையாலும் இந்த நமஶ்ஶப்தம் அநந்யஶரணத்வ ப்ரகாநமாகக்கடவது.

---

(௧) பா-ஸபா-ராஜஸூ (௨) தி-மொ-எ-௧ (௩) பார-ஸபா (௪) அஹிர்ப்பு-ஸம்

ஆக நமஶ்ஶப்தத்தாலே ஸ்வரூபவிருத்த(த)மான அஹங்கார மமகாரங்களினுடைய நிவ்ருத்தியும், நிவ்ருத்தமான ஸ்வரூபத்தினுடைய அத்யந்தபாரதந்த்ர்யமும், இந்தப் பாரதந்த்ர்ய காஷ்டையான ததீயஶேஷத்வமும், பரதந்த்ரனுக்கு அநுரூபமான உபாயமும் சொல்லிற்றாயிற்று.

ஆக ப்ரணவத்தாலே ஸ்வரூபம்சொல்லி நமஶ்ஶப்தத்தாலே ஸ்வரூபாநுரூபமான உபாயம் சொல்லிற்றாயிற்று.

அநந்தரம் அகாரவிவரணமான நாராயணபதம்-பகவச்சேஷபூதனாய் பகவதேகஶரணனாயிருந்துள்ள ஆத்மாவுக்கு தததநுரூப புருஷார்த்தஸ்வரூபமான கைங்கர்யப்ரார்த்தனையைச் சொல்லக்கடவதாகக்கொண்டு, தத்ப்ரதிஸம்பந்தியாய் தத்ஹேதுவான ஶேஷித்வத்துக்குக் காரணமான ஸர்வாதா(த)ரத்வ ஸர்வவ்யாபகத்வ ஸர்வாந்தர்யாமித்வ ஸர்வரக்ஷகத்வ ஸர்வஶரீரித்வாதிகளையுடையவனாய் அநுபாவ்யகுணஸம்பந்நனாய் உபாயோபேயபூதனாய் ஹேயப்ரத்யநீகத்வ கல்யாணைகதாநத்வ விஶிஷ்டனாய் ஶ்ரிய:பதியாய் ஸர்வவிதபந்துவாய் ஸர்வகாரணனான ஸர்வேஶ்வரனைச் சொல்லுகிறது.

அகாரத்திற்சொன்ன ஸர்வரக்ஷகத்வத்துக்கு விஷயமான ரக்ஷ்யாம்ஶத்தைச் சொல்லுகையாலும் நாராயணபதத்தில் ஸமாஸத்வயத்தாலும் ரக்ஷணப்ரகாரத்தைச் சொல்லுகையாலும் அகாரவிவரணமாகிறது நாராயணபதம். "நார" என்றும், "அயந" என்றும் இரண்டுபதமாய் மேல் சதுர்த்திவிபக்தியுமாயிருக்கும். அதில் நாரபதம் "நர" என்றும்; "நார" என்றும் "நாரா:" என்றுமாய் ஸ்வரூபேணவும் ப்ரவாஹரூபேணவும் நித்யமான ஸகலபதார்த்தங்களையும் சொல்லுகிறது.

எங்ஙனேயென்னில், ரேப(ப)ம் "ரிங்-க்ஷயே-ரீங்-ஸ்ரவே" என்கிற தா(த)துவிலே ஸித்தமாய் "ர" என்றுபதமாய், க்ஷயிஷ்ணுக்களான வஸ்துக்களைச்சொல்லி, நகாரம் அத்தை நிஷேதித்து "நர" என்று நித்யபதார்த்தத்தைச் சொல்லுகிறது. க்ஷயப்ரஸங்க நிஷேதமுகேந நித்யத்வம் சொல்லுகையாலே ப்ரவாஹரூபேண நித்யங்களான பதார்த்தங்களும் இந்த நாரபதத்தாலே சொல்லுகிறது.

"நார" "நாரா:" என்கிற தத்தி(த்)தப்ரத்யயமான *அண் ஜஸ் ப்ரத்யயஸித்தமான பஹுவசநமும் இந்த நித்யவஸ்துஸமூஹத்தையும் ஸமூஹ பாஹுள்யத்தையும் சொல்லுகிறது. அவை யாவன ;—*உணர்முழுநலமான ஜ்ஞாநாநந்தாதி நிரூபகதர்மங்களும், உயர்வறவுயர்நலமான ஜ்ஞாநாதிநிரூபித விஶேஷணங்களும், (க) "ஆசறுசீலன்" என்கிற ஶீலாதிகுணங்களும், அக்குணங்களுக்கு ப்ரகாஶகமாய், *மணிபுரைவில்பூதமைந்தானநீலச்சுடர்விடு மேனியும், *வெறிகொள்சோதிமூர்த்தி *மலர்புரையும் திருவுருவும், (உ) "ஸர்வகந்த:-ஸர்வகந்த:" (௩) "பரஞ்ஜ்யோதி:-பரஞ்ஜ்யோதி:" என்று சொல்லுகிற விக்ரஹகுணமான ஸௌகந்த்ய (க்ந்த்ய) ஸௌகுமார்ய ஸௌந்தர்யாதிகளும், (௪) "முடிச்சோதியாயுனது முகச்சோதிமலர்ந்ததுவோ" என்கிறபடியே திருமுகத்தினொளியானது விகஸிதமாய்க்கொண்டு மேலே பரம்பினாப்போலேயிருக்கிற *சென்னிநீண்முடியாதியாய பலகலன்களும், (௫) "அந்தாமவாண்முடிசங்காழிநூலாரமுள" என்று ஆபரணங்களோடே ஸமபரிகணிதமான திவ்யாயுதங்களும், (௬) "பார்மகள்பூமங்கைபோடு சுடராழிசங்கிருபால்" என்னும்படி ஆழ்வார்களோடொக்க அநுபவிக்கிற லக்ஷ்ம்யாதி திவ்யமஹிஷிகளும், (௭) "திருமகள்பூமிவை மற்றமரராட்செய்வார்" என்கிறபடியே லக்ஷ்மீபூமிவிஶிஷ்டனான ஸர்வேஶ்வரனுக்கு உசிதகைங்கர்யகாரரான நித்யரும், (௮) "அடியரோடிருந்தமை" என்று அவர்களோடு ஸாமீப்யம்பெற்று லப்த(ப்த)கைங்கர்யரான முக்தரும், அந்த கைங்கர்யத்துக்கு உபகரணபூதங்களான சத்ரசாமராதி பரிச்சதங்களும், இந்த்ரியங்களும், தந்மாத்ரைகளும், அண்டாந்தர்வர்த்திகளான தேவாதி சதுர்விதபூதங்களுமான *எண்மீதியன்ற வண்டங்களும். பஞ்சோபநிஷந்மயமாகையாலே பரமபதமும் ஸமூஹமாயிருக்கும். குணத்ரயாத்மிகையாகையாலே மூலப்ரக்ருதியும் ஸமூஹாத்மிகையாயிருக்கும். திவாராத்ராதி விபாக(க)ங்கள் அநேகங்களாகையாலே காலமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்.

ஆக நாரஶப்தத்திலே ஜ்ஞாநாநந்தாதிகள் தொடக்கமாக ப்ரக்ருதி

(க) தி-வாய்-௫-௩-க (உ) சாந்தோ-௩-கச-ச (௩) சாந்தோ-அ-கஉ உ
(௪) தி-வாய்-௩-க-௪ (௫) தி-வாய்-உ-௫-க (௬) தி-மொ-௨-க0-௬
(௭) தி-வாய்-அ-க-௪ (௮) தி-வாய்-க0-௬-கக

புருஷகாலங்கள் முடிவாக ஸ்வரூபேண நித்யமான பதார்த்தங்களும், மஹதாதியாக சதுர்வித பூதபர்யந்தமாக ப்ரவாஹரூபேண நித்யமான பதார்த்தங்களும் சொல்லப்பட்டது.

ஸ்வரூபேண நித்யத்வமாவது—உத்பத்தி விநாஶாத்யந்தாபாவம்; ப்ரவாஹரூபேண நித்யத்வமாவது—உத்பத்திவிநாஶயோர(?) யாகாநிற்கச் செய்தேயும் (க) "సూర్యాచన్ద్రమసౌ ధాతా యథాపూర్వమకల్పయత్-ஸூர்யசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத்" (உ) "యథర్తుష్వృతులిఙ్గాని నానారూపాణి పర్యయే । దృశ్యన్తే తాని తాన్యేవ తథా భావా యుగాదిషు- யதர்த்துஷ்வ்ருதுலிங்காநி நாநாரூபாணிபர்யயே। த்ருஶ்யந்தே தாநிதாந்யேவ ததாபாவாயுகாதிஷு" என்கிறபடியே அவ்வோப்ரவாஹரூபேணவும், ருதுக்கள் தோறுமுண்டாம புஷ்பாதி பதார்த்தங்கள் பூர்வவிநஷ்டநாமரூப லிங்காதிபா(ஞ)க்குக்களாய்க்கொண்டு தோன்றுமாபோலே மஹதாதிகளும் ஸ்ருஷ்டமாம்போது பூர்வஸம்ஸ்தாந விஶிஷ்டமாய்க்கொண்டு தோற்றுகை.

ஶேஷபூத ஸகலவஸ்துக்களும் ஶேஷபதிநோத்பத்திகங்களாக வேண்டுகையாலும், ஶேஷிபூத ஸர்வேஶ்வர நித்யேச்சாதீநஸத்தாகமாகையாலும், ஜ்ஞாநஶக்த்யாதி மங்களகுணங்களோபாதி நித்யபாரதந்த்ரமாகையாலும், ஸ்வரூபேண நித்யங்களான பதார்த்தங்களும் பகவததீ(த)நமாயேயிருக்கும்.

ஆக ஸ்வரூபேணவும் ப்ரவாஹரூபேணவும் நித்யங்களாய் வ்யாப்யங்களான ஸகலபதார்த்தங்களும் நாரஶப்தத்தாலே சொல்லிற்றாயிற்று.

அயநஶப்தம்-ஆவாஸத்தைச் சொல்லுகிறதாய், "நாராணாமயநம் யஃ" என்று ஷஷ்டீ தத்புருஷனாய், ஸ்வேதர ஸகலபதார்த்தங்களையும், (௩) "మేరోరివాణుః-மேரோரிவாணுஃ" (௪) "యస్యాయుతాయుతాంశాంశే విశ్వశక్తిరియం స్థితా-யஸ்யாயுதாயுதாம்ஶாம்ஶே விஶ்வஶக்திரியம்ஸ்திதா" (௫) "యస్యాయుతాయుతశతైకకలాంశకాంశే విశ్వం విచిత్రచిదచిత్ప్రవిభాగవృత్తమ్ - யஸ்யாயுதாயுதஶதைககலாம்ஶகாம்ஶே விஶ்வம்விசித்ரசிதசித்ப்ரவிபாகவ்ருத்தம்" என்றும் சொல்லுகிறபடியே தத்ஸ்வரூபைகதேஶத்தாலே த(ர)ரிக்குமென்னுமிடத்தையும், "நாராஃ அயநம்

(க) தை-நாரா (உ) வி-பு-க-ரு ௬௬ (௩)
(௪) வி-பு-க-௩-௬ (௫) ஸ்தோ-ரத்ந.

யஸ்யஸ:-நாராயண:" என்று பஹுவ்ரீஹியாய், ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களிலும் அந்த:ப்ரவிஷ்டனாய்க்கொண்டு ஆகாஶாதிகளைப்போலே ஸ்வரூபைகதேஶத்தாலே வ்யாபிக்கையன்றிக்கே ப்ரதிபதார்த்தம் யாவத்ஸ்வரூபம் பரிஸமாப்ய ஆத்மதயா வ்யாபித்து நின்று நியமிக்குமென்னுமிடத்தையும் சொல்லிற்றாயிற்று.

யதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ ! மஹாராஜதம்வாஸ:'' என்று ஆதித்யமண்டலத்தின்நடுவே ஹிரண்யனான புருஷன் காணப்படா நின்றான்; ஆபாதசூடம் ஹிரண்யவர்ணனாயிருக்கிற வனுக்கு அப்போதலர்ந்த செவ்வித்தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்கள் திருப்பரியட்டம் பொன்னெழுத்த வாடையாயிருக்குமென்றும், (௧) "𑌧𑍍𑌯𑍇𑌯𑌸𑍍𑌸𑌦𑌾𑌸𑌵𑌿𑌤𑍃𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌧𑍍𑌯𑌵𑌰𑍍𑌤𑍀 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌸𑌰𑌸𑌿𑌜𑌾𑌸𑌨𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 । 𑌕𑍇𑌯𑍂𑌰𑌵𑌾𑌨𑍍𑌮𑌕𑌰𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌵𑌾𑌨𑍍𑌕𑌿𑌰𑍀𑌟𑍀𑌹𑌾𑌰𑍀𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌵𑌪𑍁𑌰𑍍𑌧𑍃𑌤𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌃- த்யேயஸ்ஸதாஸவித்ருமண்டலமத்யவர்த்தீ நாராயணஸ்ஸரஸிஜாஸநஸந்நிவிஷ்ட: ! கேயூரவாந்மகரகுண்டலவாந்கிரீடீஹாரீஹிரண்மயவபுர்த்ருதஶங்கசக்ர:'' என்று ஆதித்யமண்டலாந்தர்வர்த்தியாய் செவ்வித்தாமரைப் பூவை யாஸநமாகவுடையனாய் தோள்வளையும் குழையும் திருச்செய்யமுடியுமாரமும்படையும் திகழும் பொன்மேனியுமாய் நிற்பானாய். ஶங்கசக்ரகதாதானான நாராயணன் த்யேயனென்கிற விக்ரஹத்தோடே, (௨) "𑌯𑌤𑍍𑌤𑌦𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌗𑍋𑌤𑍍𑌰𑌮𑌵𑌰𑍍𑌣𑌮𑌚𑌕𑍍𑌷𑍁𑌶𑍍𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂𑌤𑌦𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌵𑌿𑌭𑍁𑌂𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂𑌸𑍁𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌯𑌦𑍍𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌂𑌪𑌰𑌿𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌧𑍀𑌰𑌾𑌃-யத்தத்ரேஶ்யமக்ராஹ்யமகோத்ரமவர்ணமசக்ஷுஶ்ஶ்ரோத்ரம் ததபாணிபாதம்நித்யம்விபும்ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்யத்பூதயோநிம்பரிபஶ்யந்திதீரா:'' என்று சக்ஷுரிந்த்ரியக்ராஹ்யமின்றிக்கே மாநஸஜ்ஞாநவேத்யமுமின்றிக்கே நாமவர்ணாதிரஹிதமுமாய் சக்ஷுஶ்ஶ்ரோத்ரபாணி பாதாதிரஹிதமாய் நித்யமாய் அநவச்சின்னபரிமாணமாய் ஸர்வத்ரவ்யாப்தமாய் அதிஸூக்ஷ்மமாய் ஸத்தாபோகி ஸகலபதார்த்தங்களுக்கும் காரணமாயிருக்கும்வஸ்துவை தீ(தி)ரரானார் உள்ளபடி காண்பர்களென்றும், *ரூபவர்ணாதி நிர்த்தேஶவிஶேஷண வர்ஜிதமாயிருக்குமென்றும் சொல்லுகிற ரூபாதிநிஷேதம் விரோதிக்கையாலும்,

(௩) "𑌪𑌾𑌦𑍋𑌽𑌸𑍍𑌯𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌂𑌦𑌿𑌵𑌿- பாதோஸ்யவிஶ்வாபூதாநி த்ரிபாதஸ்யாம்ருதந்திவி'' என்று லீலாவிபூதி ஒருகாலும் நித்யவிபூதி முக்காலுமாயிருக்குமென்கிற விபூதித்வயத்தோடே (௪) "𑌨𑍇𑌹𑌨𑌾𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑌿𑌞𑍍𑌚𑌨-நேஹநாநாஸ்திகிஞ்சந'' என்கிற நாநாத்வ நிஷேதம் விரோதிக்கையாலும் இப்படி ஆபாதசூடம் பரஸ்பர விருத்தமாய்த்தோற்றுகிற ஶாஸ்த்ரமடங்கலும்விடவேண்டிவரும்.

(௧) (௨) முண்ட-௧-௧-௬

அப்போது ஶாஸ்த்ரவஶ்யதையும் ஆஸ்திக்யமுமின்றியிலே யொழியுமாகையாலே இப்படிவருகிற விரோதத்தை குணவர்ணாஶ்ரமபாக ருச்யாதிபேதங்களாலே வேறுபட்டுவருகிற வதிகாரந்தோறும் வ்யவஸ்திதவிஷயமாக்கிப் பரிஹரிக்கக்கடவது.

எங்ஙனேயென்னில்; தமோகுண ப்ராசுர்யநிபந்தநமான பரஹிம்ஸாபரதையாலும் ரஜঃப்ராசுர்ய நிபந்தநமான க்ஷுத்ரபுருஷார்த்தார்த்தித்வத்தாலும் ஸத்வப்ராசுர்யநிபந்தநமான முமுக்ஷுத்வத்தாலும் வருகிற வதிகாரந்தோறும் வ்யவஸ்திதமாகையாலே ஶ்யேநவிதிக்கும் மோக்ஷவிதிக்கும் வருகிற விரோதம் பரிஹ்ருதம்; ஹிம்ஸாநிஷேதம் ஸாமாந்யமாகையாலும் பஶுவிஶஸநவிதி கர்மநிபந்தநமாகையாலும் அவற்றுக்குண்டான விரோதம் பரிஹ்ருதம். நித்யாக்நிஹோத்ரவிதி தத்த்பாகவிதிகள்கர்மயோகநிஷ்டையும் ஜ்ஞாநயோகநிஷ்டையுமாகிறவதிகாரந்தோறும் வ்யவஸ்திதவிஷயமாகையாலே அவற்றுக்குவருகிற விரோதம் பரிஹ்ருதம். ஸமுச்சயவிதியும் கர்மயோகத்தில் விஶ்வாஸமாந்த்யத்தாலே உபபஸாபேக்ஷனவனைக் குறித்தாகையாலே பரிஹ்ருதம். பக்திவிதியும், கர்மஜ்ஞாநஸஹக்ருதையானபக்தியே கார்யகரமாவதென்கிற பாதம் பிறந்த வதிகாரிக்காகையாலே கர்மஜ்ஞாநங்களோடு அதுக்குண்டானவிரோதம் பரிஹ்ருதம். ஸத்வித்யைதஹரவித்யைகளுக்குவருகிற விகல்பமும் ஸ்வரூபமாத்ரத்திலும் குணவிஶிஷ்டஸ்வரூபத்திலுமுண்டான ருசிவிஶேஷத்தால்வந்த வதிகாரந்தோறும் வ்யவஸ்திதமாகையாலே பரிஹ்ருதம்-

ஸகுணவாக்யத்துக்கும் நிர்க்குணவாக்யத்துக்குமுண்டான விரோதம், (க)“అపహతపాప్మా విజరో విమృత్యుర్విశోకో విజిఘత్సోఽపిపాసస్సత్యకామస్సత్యసఙ్కల్పః- அபஹதபாப்மாவிஜரோவிம்ருத்யுர்விஶோகோவிஜிகத்ஸோஉபிபாஸஸ்ஸத்யகாமஸ்ஸத்யஸங்கல்பঃ” என்று ஹேயப்ரதிபடனாகையாலே அபஹதபாப்மாவாயிருக்கும். நித்யயௌவநஸ்வபாவனைக்கொண்டு ஏகரூபனாயிருக்கையாலே ஜராரஹிதனாயிருக்கும், நித்யனாகையாலே நாஶரஹிதனாயிருக்கும்; நிரதிஶயாநந்தஸ்வரூபனாகையாலே விஶோகனாயிருக்கும். அகர்மவஶ்யனா

(க) சாந்தோ-அ-எ-க

கையாலே க்ஷுத்பிபாஸாதிரஹிதனாயிருக்குமென்கிற ஹேயகுண ராஹித்யத்தையும், ஸத்யமான காமங்களையுடையனாயிருக்கும், ஸத்யமான ஸங்கல்பங்களையுடையனாயிருக்குமென்கிற கல்யாணகுண ஸாஹித்யத்தையும் சொல்லுகிறதாகையாலே பரிஹ்ருதம்.

நிர்விக்ரஹஸவிக்ரஹங்களுக்குண்டான விரோதமும்,(க)"இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:- இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:" என்கிற இச்சாக்ருஹீதமான விக்ரஹத்தையும், கர்மாதீநமானஶரீரபரிக்ரஹமில்லாமையும் சொல்லுகிறதாகையாலே பரிஹ்ருதம்; (உ) "நேஹநாநாஸ்தி-நேஹநாநாஸ்தி" என்கிறவாக்யம் த்ரவ்யபேதத்தாலே பி(ந்)ந்நமான விபூதித்வயத்தினுடையவும் விஶிஷ்டைக்யத்தைச் சொல்லுகிறதாகையாலே விபூதியோகம்சொல்லுகிற வாக்யத்துக்கு† முண்டான விரோதமும் பரிஹ்ருதம்.

ஆகவிப்படி பரஸ்பரவிருத்தமான வர்த்தவிஶேஷங்கள் குணவர்ணநபே(த்)தபிந்நமாய் வருகிற வதிகாரந்தோறும் வ்யவஸ்திதமானவோபாதி இதுவும்அதிகாரந்தோறும் வ்யவஸ்திதமாயிருக்கும்.

அதாவது(ங) "உணர்ந்துணர்ந்து" என்கிறபடியே ப்ரக்ருதேஃபரமாய் ஜ்ஞாநஸ்வரூபமாய் ஜ்ஞாநகுணகமாய் பகவச்சேஷமாய் ஜ்ஞாத்ருத்வகர்த்ருத்வ போக்த்ருத்வாதிவிஶிஷ்டமாயிருக்குமாத்மஸ்வரூபமென்றறிந்து, ததநுகுணமான புருஷார்த்தம்ஸ்வயத்நஸாத்யமென்கிறவளவிலேநிற்கிறவனைக்குறித்து கர்மஜ்ஞாநாதிஸாதநங்களை விதிக்கிறது; (ச)"உணர்வுமுயிருமுடம்பும் மற்றுலப்பிலனவும்பழுதேயாம், உணர்வைப்பெறவூர்ந்து" என்றும்,(ரு)"மெய்ம்மையை மிகவுணர்ந்து" என்றும் சொல்லுகிறபடியே ஜ்ஞாநாதிகளெல்லாம் புறவிதழாம்படி சரமமானபகவதேகரக்ஷ்யமாய் பகவதத்யந்தபாரதந்த்ரமாய் பகவதேகபோக(த்ய)மாயிருக்கும் ஆத்மஸ்வரூபமென்றறிந்து, அந்தபகவதேகபோகத்வமாகிற புருஷார்த்தம் பாரதந்த்ரமாய் பகவதேகரக்ஷ்யமான ஸ்வரூபத்துக்கு ஸ்வயத்நத்தால்ஸித்தியாது; நிருபாதிகரக்ஷகனானவனாலே லப்யமென்றறிந்து, (சு) "என்னான்

(க) வி-பு-சு-எ-அச (உ) ப்ருஹ-சு-ஐ-கக (ங) தி-வாய்-அ-ங-சு
(ச) தி-வாய்-அ-அ-ங (ரு) திருமாலை-ருஅ (சு) தி-வாய்-ரு-அ-ங
† இங்கே சிலபதம் காணவில்லை

செய்கேன்" என்கிறபடியே ஸ்வரூபத்தில் ஸ்வரக்ஷண ஜ்ஞாநாபாவத்தாலும், புருஷார்த்தம் அநந்யஸாத்யமென்கிற ஜ்ஞாநவத்தையாலும் பக்திபாரவஶ்யத்தாலும் அநந்யகதிகளாய், பலத்தில் ப்ராரப்தகர்மாவஸாநமாகிற விளம்பத்தைப் பொறுக்கமாட்டாதவர்களுமாயிருக்கிறவர்களைக் குறித்து ப்ரபத்தியோகத்தை விதிக்கிறதென்கை.

இப்படி ஜ்ஞாநவிபாக(భాగ) நிபந்தநமான ருசியைப்பற்றிவருகிற வதிகாரந்தோறும் வ்யவஸ்திதவிஷயமாகையாலே கர்மஜ்ஞாநாதிவிதாயக ஶாஸ்த்ரத்துக்கும் ப்ரபத்திவிதாயகஶாஸ்த்ரத்துக்கும் விரோதப்ரஸங்கமே பிடித்தில்லை. ஶாஸ்த்ரசோ(చో)திதமான ஸகலதர்மங்களும் ஸர்வர்க்கு முபாதேயமல்லாமையாலும் (க) "యావానర్థ ఉదపానే సర్వతస్సంప్లుతోదకే। తావాన్సర్వేషు వేదేషు బ్రాహ్మణస్య విజానతః" யாவாநர்த்த உதபாநே ஸர்வதஸ்ஸம்ப்லுதோதகே । தாவாந்ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:" என்று குணத்ரயவஶ்யராய் பகவல்லீலாவிஷயபூதரான சேதநரைக்குறித்து அவ்வோருடைய குணருசிகளுக்கு அநுகுணமாக ஶாஸ்த்ரசோதிதமான வர்த்தங்களில், ஸர்வத்ர பரந்துகிடக்கிற ஜலத்தில் த்ருஷார்த்தனுக்கு ஸ்வதாஹஶாந்திக்களவானதே அபேக்ஷிதமாமாபோலே அறிவுண்டானவனுக்கு ஸ்வாதிகாராநுகுணமானதே அபேக்ஷிதமாய் தத்வ்யதிரிக்தங்களானவை த்யாஜ்யமென்கையாலும், வர்ணாஶ்ரமதர்மங்களில் ஸ்வவர்ணாஶ்ரமாதிகளுக்கு விஹிதமான தர்மங்களை உபாதேயமாகவிதித்து தத்வ்யதிரிக்த வர்ணாஶ்ரமதர்மங்களை த்யாஜ்யத்வேந விதிக்கையாலும், ஸ்வாதிகாராநுரூப தர்மாநுஷ்டாநத்தாலும் வ்யதிரிக்த தர்மத்யாகத்தாலுமல்லது ஶாஸ்த்ரவஶ்யதைதான் கூடாமையாலும், ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநவானைப் பகவதேகரக்ஷ்யத்வ ப்ரதிபத்திபாகிற ப்ரபத்த்யநுஷ்டாநத்திலே யிழியுமவனுக்கு ஸ்வாதந்த்ர்யகார்யமாய் அஹங்காரகர்ப்பமான கர்மயோகாதிகளினுடைய த்யாகவிதி அத்யந்தமுபபந்நமென்றதாயிற்று.

(௨) "సన్న్యాసస్త్యాగ ఇత్యుక్తశ్శరణాగతిరిత్యపి। ఉపాయోయం చతుర్థస్తే ప్రోక్తశ్శీఘ్రఫలప్రదః। అస్మిన్నర్థే హి వర్తమానానాం విధాన్విప్రనిషేవితే। పూర్వత్రయముపాయానాం స్తేషు వేదేషు రమనోహరాః- ஸந்யாஸஸ்த்யாக இத்யுக்தஶ்ஶரணாகதிரித்

(க) கீ-உ-சசு (௨) அஹிர்ப்பு-ஸம்

யபி । உபாயோயம்சதுர்த்தஸ்தே ப்ரோக்தஶ்ஶீக்ரபலப்ரதஃ । அஸ்மிந்ஹிவர்த்தமாநாநாம்விஶ்வாஸப்ரநிஷேவிதே। பூர்வேத்ரயஉபாயாஸ்தேபவேயுரமநோஹராஃ" என்று ஸந்யாஸஶப்தத்தாலும் த்யாகஶப்தத்தாலும் ஶரணாகதிஶப்தத்தாலும் சொல்லப்பட்ட சதுர்த்தோபாயமான ப்ரபத்தி ஆரப்த(ப)ஶரீராவஸாநத்திலே பலமாகையாலே ஶீக்ரபலப்ரதமாயிருக்கும்; ப்ராஹ்மணோத்தமராலே ஸேவிக்கப்பட்டிருக்கிறவிந்தவித்தியிலே நடக்குமவர்களுக்கு முன்பு சொன்னகர்மஜ்ஞாநபக்தியென்கிற மூன்றுஉபாயங்களும் மநோஹரங்களன்று. ஆகையாலே அநுரூபங்களன்றென்று ப்ரபத்தியினுடையஉத்கர்ஷமும் கர்மஜ்ஞாநபக்திகளுடைய வபகர்ஷமும் பகவச்சாஸ்த்ரத்திலும் சொல்லிற்று.

(க) "సాధనం భగవత్ప్రాప్తౌ స ఏవేతి స్థిరామతిః । సాధ్యభక్తిస్స్మృతా సైవ ప్రపత్తిరితి గీయతే । ఉపాయోభక్తిరేవేతి తత్ప్రాప్త్యా యా తు సా మతిః । ఉపాయభక్తిరేతస్యాః పూర్వోక్తైవ గరీయసీ । ఉపాయభక్తిః ప్రారబ్ధవ్యతిరిక్తాఘనాశినీ । సాధ్యభక్తిస్తు సా హన్త్రీ ప్రారబ్ధస్యాపి భూయసీ- ஸாதநம்பகவத்ப்ராப்தௌஸஏவேதிஸ்திராமதிஃ । ஸாத்யபக்திஸ்ஸ்ம்ருதாஸைவ ப்ரபத்திரிதிகீயதே । உபாயபக்திரேதஸ்யாஃ பூர்வோக்தைவகரீயஸீ। உபாயபக்திஃப்ராரப்தவ்யதிரிக்தாகநாஶிநீ । ஸாத்யபக்திஸ்துஸாஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ" என்று பகவத்ப்ராப்திக்கு பகவானே உபாயமென்கிற வ்யவஸாயாத்மகஜ்ஞாநம் ஸாத்யபக்தியாக வநுஸந்திக்கப்படும்; அதுவே ப்ரபத்தியென்றுசொல்லப்படும்; பகவத்ப்ராப்திக்கு பக்தியே உபாயமென்கிற நினைவுக்கு உபாயபக்தியென்றுபேர். இத்தைப் பற்ற முன்புசொன்னப்ரபத்தி ஶ்ரேஷ்டை; அதுக்கு ஹேது- உபாயபக்தியென்கிறபக்தியோகம் ப்ராரப்தவ்யதிரிக்தமான பூர்வாகோத்தரா(க)க ரூபமானபாபத்தைப்போக்குமத்தனை; ஸாத்யபக்தியென்கிற ப்ரபத்தியோகம் ப்ராரப்தத்தையும் நஶிப்பிக்குமாகையாலேயென்று ப்ரபத்தியினுடைய ஸர்வோபாயாதிக்யம் ப்ரதேஶாந்தரங்களிலும் சொல்லிற்று.

இப்படி அதிகாரிபேதத்தாலே அவிருத்த(த)மாயிருக்கச்செய்தேயும் ஆபாதப்ரதீதியில் ஆபாஸமாகத்தோற்றுகிற விரோதத்தைப்

(க) லக்ஷ்மீதந்த்.

பரிஹரிக்கைக்காகச் சிலர் வேதோக்தமான தர்மங்களுக்கதிகாரமில்லாத ஸ்த்ரீஶூத்ரதிர்யகாதிகள் பாஞ்சாலீகாந்தபத்(ब्रु)ராதிகள் இவர்களுக்கு ப்ரபத்தியோகம் விதிக்கிறது; அல்லாத த்ரைவர்ணிகருக்கு கர்மஜ்ஞாநாதிகள் விதிக்கிறதென்று விஷயவிபாச(भाग)ம் பண்ணினார்கள்; (௧) "మాంహిపార్థ వ్యపాశ్రిత్య యేఽపిస్యుః పాపయోనయః। స్త్రియోవైశ్యా స్తథాశూద్రాస్తేఽపియాంతి పరాంగతిమ్। కింపునర్బ్రాహ్మణాః పుణ్యాభక్తా రాజర్షయ స్తథా-மாம்ஹிபார்த்தவ்யபாஶ்ரித்யயேபிஸ்யுஃ பாபயோநயஃ। ஸ்த்ரியோவைஶ்யாஸ்ததாஶூத்ராஸ்தேபியாந்திபராங்கதிம்। கிம்புநர்ப்ராஹ்மணாஃபுண்யாபக்தாராஜர்ஷயஸ்ததா" என்று, பார்த்தனே! பாபயோநிகளான ஸ்த்ரீஶூத்ரவைஶ்யாதிகள்யாவர் சிலர்; அவர்களும் என்னையாஶ்ரயித்து பரையானகதியை ப்ராபிப்பர்கள்; புண்யயோநிகளான ப்ராஹ்மணர், ராஜர்ஷிகள் பக்தராயிருக்கிறவர்கள், என்னைபஜித்துப் பரகதியைப்ராபிப்பர்களென்னுமிடம் சொல்லவேணுமோ வென்கையாலே ஸ்த்ரீஶூத்ராதிகளுக்கும் பஜநாதிகாரமுண்டாகையாலும், கர்மஜ்ஞாநாதிகளைவிட்டு ப்ரபத்தியைப்பண்ணென்றுவிதிப்பது தர்மாதிகாரமுள்ள விடத்தேயாகிலும், இந்த பக்த்யநதிகாரஹேதுவான ஜாத்யாதிவைகல்யமில்லாத க்ஷத்ரியனான அர்ஜுநனைக்குறித்து தர்மங்களைவிட்டு என்னைப்பற்றென்று விதிக்கையாலும், அந்தவிஷயவிபாச(भाग)ம் அயுக்தம்.

தர்மஶப்தத்தாலே பலாதிகளைச் சொல்லுகிறதாய் பலஸங்ககர்த்த்ருத்வங்களைப்பரித்யஜித்து தர்மஸ்வரூபமாத்ரத்தை யநுஷ்டியாநின்றுகொண்டு ததங்கமாக ப்ரபத்தியைப்பண்ண மோக்ஷஸித்தியுண்டாமென்கிறதென்பர்கள் சிலர்;

இவ்விடத்தில் பலத்யாகபூர்வகமாக தர்மத்தை யநுஷ்ட்டியென்று சொல்லாமையாலும், பலத்யாகத்தைச்சொல்லி ஸ்வரூபநிஷேதம் பண்ணுமையாலேதர்மஸ்வரூபாநுஷ்டாநம் ப்ரஸ்துதமாணாலும், (௨) "కర్మణ్యేవాధికారస్తే మాఫలేషుకదాచన। మాకర్మఫలహేతుర్భూర్మాతేసఙ్గోఽస్త్వకర్మణి-கர்மண்யேவாதிகாரஸ்தே மாபலேஷுகதாசநமா கர்மபலஹேதுர்ப்பூர்மாதேஸங்கோஸ்த்வகர்மணி" என்று கர்மத்திலே உனக்கதிகாரம்; பலத்திலதிகாரமில்லை; கர்மபலஹேதுவாகாதே

(௧) கீ-௯-௩௨ (௨) கீ-௨-௪௭

கொள்; உனக்குக்கர்மாநுஷ்டாநத்தில் அஸக்தமுண்டாவதென்கை யாலே பலாதித்யாகம் சொல்லவொண்ணாமையாலும், லக்ஷண்யாபல த்தைச் சொல்லுகிறதென்ன வேண்டிவரு, தர்மஸ்வரூபம் சொல் லுகிறதென்னுமிடத்தில் விரோதமுண்டானபோதாகையாலும், (௧) " 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌂 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌤𑍍𑌯𑌾𑌗𑍇 𑌭𑌰𑌤𑌸𑌤𑍍𑌤𑌮 । 𑌤𑍍𑌯𑌾𑌗𑍋 𑌹𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 । 𑌯𑌜𑍍𑌞𑌦𑌾𑌨𑌤𑌪𑌃𑌕𑌰𑍍𑌮 𑌨 𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍇𑌵 𑌤𑌤𑍍 । 𑌯𑌜𑍍𑌞𑍋 𑌦𑌾𑌨𑌂 𑌤𑌪𑌶𑍍𑌚𑍈𑌵 𑌪𑌾𑌵𑌨𑌾𑌨𑌿 𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌾𑌮𑍍 । 𑌏𑌤𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌫𑌲𑌾𑌨𑌿 𑌚 । 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑍀𑌤𑌿 𑌮𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 𑌮𑌤𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍- நிஶ்சயம்ஶ்ருணுமேதத்ர த்யாகேபரதஸத்தம । த்யாகோஹிபுருஷவ்யாக்ர த்ரிவிதஸ்ஸம்ப்ரகீர்த்தித: । யஜ்ஞதாநதப:கர் மநத்யாஜ்யம்கார்யமேவதத் । யஜ்ஞோதாநம்தபஶ்சைவ பாவநாநிம நீஷிணாம் । ஏதாந்யபிதுகர்மாணி ஸங்கம்த்யக்த்வாபலாநிச । கர்த்த வ்யாநீதிமேபார்த்தநிஶ்சிதம்மதமுத்தமம்" இத்யாதிகளாலே கீழ்ச் சொன்ன பலத்யாகத்தை நிகமிக்கிறதென்றும்போதும் நிகமநத்தில் பலமில்லாமையாலும், (௨)" 𑌇𑌤𑌿 𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌦𑍍𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌰𑌂 𑌮𑌯𑌾 । 𑌵𑌿𑌮𑍃𑌶𑍍𑌯𑍈𑌤𑌦𑌶𑍇𑌷𑍇𑌣 𑌯𑌥𑍇𑌚𑍍𑌛𑌸𑌿 𑌤𑌥𑌾 𑌕𑍁𑌰𑍁- இதிதேஜ்ஞாநமாக்யாதம்குஹ்யாத் குஹ்யதரம்மயா । விம்ருஶ்யைததஶேஷேண யதேச்சஸிததாகுரு" என்றிப்படி குஹ்யாத்குஹ்யதரமான ஜ்ஞாநம் உனக்கென்னாலே சொல்லப்பட்டது; நீ இவற்றையடங்கவிசாரித்து யாதொருபடி இச்சித்தாய்; அப்படியேசெய்யென்று முன்பேநிகமித்துவிட்டு,(௩) " 𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌭𑍂𑌯𑌃 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 - ஸர்வகுஹ்யதமம்பூயஶ்ஶ்ருணுமே" என்று முன்புசொன்னகுஹ்யதரமான தர்மாதிகளிற்காட்டில் குஹ்ய தமமாகையாலே விலக்ஷணமான ஸித்ததர்மத்தைச் சொல்லுகி றேன்; கேளென்று இதினுடைய வைலக்ஷண்யம் முன்பே ப்ரஸ் துதமாகையாலும் இதின் வைலக்ஷண்யத்தாலே மோக்ஷநிவ்ருத்தி ஸ்வரஸமாகப் பிறக்கையாலும், இங்கு நிகமிக்கிறதென்கை புநருக் தியாகையாலும் பலத்யாகம் சொல்லுகிறதென்கிறபக்ஷம் துஷ்டம்.

சிலர் அநாதிகாலார்ஜிதமான பாபங்களினுடைய நிரஸபூர்வக நிர்திஷயமாக பகவத்ப்ரேமரூபேண நடக்கப்பட்ட பக்தியோகா ரம்ப விரோதியான நாநாவிதபாபங்களுக்கு ப்ராயஶ்சித்தமாக விதி க்கிற க்ருச்ச்ரசாந்த்ராயண கூஶ்மாண்டாதிகளான ப்ராயஶ்சித்த

(௧) கீ-௧அ-௪ (௨) கீ-௧அ-௬௩ (௩) கீ-௧அ-௬௪

தர்மங்கள் சிரகாலேந அநுஷ்டிக்குமவையாகையாலும் துஷ்கரங்களாகையாலும் அவற்றைவிட்டு தத்ஸ்தாநே யென்னைப்பற்றென்றுசொல்லுகிற தென்பர்கள்; பக்தியோகாரம்பவிரோதி துஷ்க்ருதத்தையுடையனல்லாமையாலும், ஜிதேந்த்ரியனாகையாலும் பக்த்யாரம்பவிரோதி பாபநிபந்தநசோகமும் ப்ராயஸ்சித்தமும் கிழ்ப்ராஸ்துதமல்லாமையாலும் மோக்ஷஸாதந பூதகர்மாதிவாசகமான தர்மசப்தத்தை ப்ராயஸ்சித்ததர்மமாத்ரத்தைச் சொல்லுகிறதென்கைக்கும் ப்ரமாணமில்லாமையாலும், ஸர்வசப்தத்துக்குப்பொருளில்லாமையாலும், அதுவுமர்த்தமன்று.

சிலர் கர்மயோகாதிகளிலே ப்ரம்சமுண்டாகில் தத்ப்ராயஸ்சித்தமாக ப்ரபத்தியைவிதிக்கிற தென்பர்கள்; (க) "ఏషా తేఽభిహితా సాంఖ్యే బుద్ధిర్యోగే త్విమాం శృణు - ஏஷாதேபிஹிதாஸாங்க்யேபுத்திர்யோகேத்விமாம்ஶ்ருணு" என்று ஆத்மயோகத்தில் இந்தபுத்தி உனக்குச் சொல்லப்பட்டது; கர்மயோகத்திலிந்தபுத்தி உனக்குச்சொல்லப்படுகிறது; கர்மயோகத்தி லிந்தபுத்தியைக்கேளென்று கர்மயோகத்தைச்சொல்ல வாரம்பித்தவனவிலே, (உ) "నేహాభిక్రమనాశోఽస్తి ప్రత్యవాయో న విద్యతే - நேஹாபிக்ரமநாசோஸ்திப்ரத்யவாயோநவித்யதே", என்று இந்தக் கர்மயோகத்தில் ஆரப்த(ஞ)மானவம்சத்துக்கு நாசமில்லை; நடுவுவிச்சிந்நமானால் ப்ரத்யவாயமுமில்லையென்று ப்ராயஸ்சித்த நிரபேக்ஷமாகவும் சொல்லுகையாலே அதுவுமர்த்தமன்று.

(ரு) "తమేవం విదిత్వాఽతిమృత్యుమేతి నాన్యః పంథా విద్యతేఽయనాయ - தமேவம் விதித்வாதிம்ருத்யுமேதிநாந்ய:பந்தாவித்யதேயநாய" என்று ஜ்ஞாநயோகத்தாலே ஸம்ஸாரத்தைக் கடக்கலாமதொழிய ப்ராப்திக்கு உபாயம்வேறில்லை யென்றும், (௪) "తమేవైకం జానథ ఆత్మానమన్యా వాచో విముంచథ - தமேவைகம்ஜாநதாத்மாநமந்யாவாசோவிமுஞ்சத" "అమృతస్యైష సేతుః - அம்ருதஸ்யைஷஸேது:" என்று பரமாத்மாவான ஸர்வேஶ்வரனொருவனையுமே யறியுங்கள்; அவ்வறிவே அம்ருதஸ்வரூபமான மோக்ஷத்துக்குவழி; அல்லாதவார்த்தைகளை விடுங்களென்று, ஜ்ஞாநயோகத்தை மோக்ஷஸாதநமாகச் சொல்லுகையாலும், தந்நிஷ்டனுக்குக் கர்த்தவ்யமொன்றுமில்லையென்று, கர்மத்யாகம் "ஜ்ஞா

(க) கீ-உ-௩௯. (உ) கீ-உ-௪௦ (ரு) ஶ்வே-ரு-அ (௪) முண்ட-உ-உ-ரு

మృతేనతృప్తస్య-ஜ்ஞாநாம்ருதேநத்ருப்தஸ்ய" என்கிற ஶ்லோகத்திலே சொல்லுகையாலும், ஜ்ஞாநயோகலாபத்துக்கு ஸாதநமான கர்மத்தைவிட்டு தத்ஸ்தாநே என்னைப்பற்றென்று சொல்லுகிறதென்று சிலர் சொல்லுவர்கள் ;

(க) "కర్మణైవహి సంసిద్ధిమాస్థితా జనకాదయః- கர்மணைவஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:" என்று கர்மந்தன்னை மோக்ஷஸாதநமாகச் சொல்லுகையாலும், (உ) "యజ్ఞేన దానేన తపసానాశకేన బ్రాహ్మణా వివిదిషన్తి-யஜ்ஞேநதாநேநதபஸாநாஶகேநப்ராஹ்மணா விவிதிஷந்தி" என்று கர்மத்தை ஜ்ஞாநஸாதநமாகச் சொல்லுகையாலும், த்யாகாநந்தரம் ஜ்ஞாநயோகவாசகமாயிருப்பதொரு ஶப்தமில்லாமையாலும் "ஶரணம்வ்ரஜ" என்கிறவாக்யம் ஆத்மஜ்ஞாநவாசகமல்லாமையாலும், ப்ரபத்தியே மோக்ஷத்துக்கு ஸ்வதந்த்ரஸாதநமாகவிதிக்கையாலும், (ங) "యథా పుష్కరపలాశ ఆపో న శ్లిష్యన్తే, ఏవమేవం విది పాపం కర్మ న శ్లిష్యతే-யதாபுஷ்கரபர்ண ஆபோ ந ஶ்லிஷ்யந்தே, ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே" என்று யாதொருபடி தாமரையிலையில்நீர்தங்காது; அப்படியே ஜ்ஞாநயோகநிஷ்டன்பக்கல் பாபம்ஸம்ஶ்லேஷியாதென்றும், "జ్ఞానాగ్నిః-ஜ்ஞாநாக்நி:" இத்யாதிப்படியே ஜ்ஞாநமாகிற வஹ்நிதானே ஸர்வகர்மங்களையும் பஸ்மமாக்குமென்றும், (ச) "యథేషీకాతూలమగ్నౌ ప్రోతం ప్రదూయేత, ఏవం హాస్య సర్వే పాప్మానః ప్రదూయన్తే - யதைஷிகாதூலமக்நௌப்ரோதம்ப்ரதூயேத, ஏவம்ஹாஸ்யஸர்வேபாப்மாந:ப்ரதூயந்தே" என்று நெருப்பிலிட்ட பஞ்சுபோலே ஸகலபாபங்களும் நஶிக்குமென்றும், இத்யாதிகளாலே ஜ்ஞாநயோகந் தன்னாலே ஸகலபாபங்களும் போமென்கையாலே இங்குச்சொல்லுகிற "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்கிற ஸ்வயம்பாபவிமோசநோக்தி சேராமையாலும், (ரு) "చోదనాలక్షణోర్థో ధర్మః-சோதநாலக்ஷணோர்த்தோ தர்ம:" என்கிற ந்யாயத்தாலே ஸாதநபூதகர்மஜ்ஞாநாதிவாசகமான தர்மஶப்தத்தை கர்மயோகமாத்ரத்திலே ஸங்கோசிப்பிக்கவொண்ணாமையாலும், விஹிதஜ்ஞாநத்துக்கு அங்கமாக விஹிதமானகர்மத்தைவிட்டால் விஹிதகர்மத்யாகமாகிற தூஷணம்வருகையாலும் அதுவுமர்த்தமன்று ;

(க) கீ-ங-உ0 (உ) ப்ரு-சு-ச-உஉ (ங) சாந்தோ-ச-கச-ங
(ச) சாந்தோ-ரு-உச-ங (ரு) பூர்வமீமாம்ஸா

ஸர்வதர்மங்களைவிட்டே என்னை ஶரணவரணம் பண்ணுவானென்று ஶரணாகதிப்ரஶம்ஸையிலே இதுக்குத் தாத்பர்யம்; தர்மத்யாகத்திலன்றென்று சிலர் சொல்லுவர்கள்; ப்ரஶம்ஸையைக் காட்டுகிற அபிஶப்தமில்லாமையாலும், தர்மங்களினுடைய த்யாகம் விருத்த(ஸ)மாகையாலே, வருந்திக்கல்பித்தாலும் ப்ரஶம்ஸையால் "மாஶுச:" என்கிற ஶோகநிவ்ருத்தி கூடாமையாலும் அதுவுமர்த்தமாகமாட்டாது;

பஶுவிதியில் பஶுதந்த்ரத்தைப்பண்ணுதல், பூர்ணாஹுதியைப்பண்ணுதல் செய்வானென்று பஶுதந்த்ரத்யாகத்தில் தாத்பர்யமின்றிக்கே பூர்ணாஹுத்யநுஷ்டானமாத்ரத்திலே தாத்பர்யமானாற்போலே இங்கும் தர்மத்யாகத்திலே தாத்பர்யமில்லை; ப்ரபத்த்யநுஷ்டானத்திலே தாத்பர்யமென்கிற பக்ஷமும், ஸாதநாந்தரபரித்யாகமில்லாதபோது அநுஷ்டிக்கவொண்ணாத ப்ரபத்திக்கு பஶுதந்த்ரத்யாகத்தில் தாத்பர்யமின்றிக்கே பூர்ணாஹுத்யநுஷ்டானமாத்ரத்திலே தாத்பர்யமாகவிதிக்கிற பூர்ணாஹுதிந்யாயம் த்ருஷ்டாந்தமல்லாமையாலே அர்த்தமன்று;

தர்மஶப்தத்தாலே பகவத்வ்யதிரிக்த தேவதாந்தராராதநரூபமாக வேதவேதாந்தங்களிற் சொல்லுகிற தர்மத்தைச்சொல்லுகிறதாய், அந்த தர்மங்களைவிட்டு மோக்ஷோபாயமாக பகவத்ஸமாஶ்ரயணத்தைப் பண்ணுவானென்று, இதரதேவதாப்ரதிஸம்பந்திக கர்மநிவ்ருத்திபூர்வகமாக பகவதேகப்ரதிஸம்பந்திகமானகர்மத்தைவிதிக்கிறதாய், அத்தாலே பகவத்விஷயத்தோடே ஐகாந்த்யம் விதிக்கிறதென்று சிலர்சொல்லுவர்கள்; தேவதாந்தரங்கள் இங்கு ப்ரஸ்துதமல்லாமையாலும், ப்ரஸ்துதமானாலும், (௧) "యేప్యన్యదేవతాభక్తా యజన్తే శ్రద్ధయాన్వితాః । తేపి మామేవ కౌన్తేయ యజన్త్యవిధిపూర్వకమ్-யேப்யந்யதேவதாபக்தா யஜந்தேஶ்ரத்தயாந்விதா: । தேபிமாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம்" என்று யாவர் சிலர் அந்யதேவதாபக்தராய்க்கொண்டு ஶ்ரத்தையோடே யஜிக்கிறார்கள்; அவர்களும்நம்மையே யஜிக்கிறார்களென்கையாலே தேவதாந்தராராதநத்திலும் பகவதைகாந்த்யத்துக்கு விரோதமில்லையென்கையாலும், ஶரணவரணமாகிறது-ஸமாஶ்ரயணமாத்ரமின்றிக்கே உபாயப்ரார்த்தநாரூபமாகை

(௧) கீ-௯-௨௩

யாலேதர்மஶப்தம் தத்ப்ரதிகோடியாய்க்கொண்டு த்யாஜ்யமான ஸாதநதர்மத்தைக் காட்டுமதொழிய கேவலம் ஆராதநரூபமான தர்மத்தைக் காட்டாமையாலும் அதுவுமர்த்தமன்று;

சிலர், ஶரணாகதிவிரோதிகளான தர்மங்களைவிட்டு ஶரணாகதியைப் பண்ணுவானென்று சொல்லுகிறதென்பர்கள்; விரோதித்தவற்றைவிடுகைக்கு விதிவேண்டாவாகையாலும், தர்மஶப்தம் விருத்த(ரு)தர்மத்தைவ(சொ)சியாமையாலும், ஸர்வதர்மங்களையுமென்கை கூடாமையாலும், அதுவுமர்த்தமன்று.

ஸர்வதர்மங்களைவிட்டு நின்றவனுக்கு விஹிததர்மபரித்யாக ப்ராயஶ்சித்தமாக "ஶரணம்வ்ரஜ" என்று ப்ரபத்தியைவிதிக்கிறதென்பர்சிலர்; அதுவுங்கூடாது; அவற்றுக்கு நியதப்ராயஶ்சித்தமாகவிதிக்கிற தர்மங்களோடே விரோதிக்கையாலும், விதிவிஷயபூதனானவர்ஜநனுக்கு விஹிததர்மத்யாகப்ரஸங்கமில்லாமையாலும், விதிக்கப்படுகிற விந்தப்ராயஶ்சித்ததர்மந்தான் பலஸாதநதர்மத்யாகத்தைப்பற்றவோ? பலவிது(து)ரதர்மத்யாகத்தைப் பற்றவோ வென்று விசாரித்தால், பலஸாதநதர்மமநுஷ்டியாதபோது பலாபாவமாத்ரமொழிய தோஷமில்லாமையாலே ப்ராயஶ்சித்தாபேக்ஷையில்லை.

இஞ்சபலஸாதநதர்மப்ராயஶ்சித்தமாகில், நான் மோக்ஷவிரோதி ஸகலபாபவிமோசநம் பண்ணுகிறேனென்கிற வுக்திகூடாது. பலவிதுரமான நித்யநைமித்திகதர்மங்களில் நைமித்திகதர்மத்யாகத்தில் பேதேந ப்ராயஶ்சித்தமின்றிக்கே நிமித்தம்வந்தபோது ததநுபந்தியான நைமித்திகத்தை யநுஷ்டிக்கவே அதினுடையதோஷம் பரிஹ்ருதம். அதுக்கு அதிகாரமுண்டாகத்தனையொழிய ப்ராயஶ்சித்த தர்மத்துக்கு அதிகாரமில்லை. நித்யகர்மத்யாக ப்ராயஶ்சித்தமென்னப்பார்க்கில், தத்த்யாகத்தைப்பற்றவிதிக்கிற ப்ராயஶ்சித்தகர்மத்தோடே விரோதிக்கும்.

அந்த ப்ராயஶ்சித்த தர்மங்களாதல், ஶரணவரணமாதலென்று ஸமவிகல்பமாகச் சொல்லப்பார்க்கில், அந்தப்ராயஶ்சித்ததர்மங்கள் ஸாமாந்யமான ஶரணவரணத்தைப்பற்ற ப்ரபலமாகையாலே ஸமவிகல்பமாகச் சொல்லவொண்ணாது.

அந்ததர்மங்களும் ஶரணவரணமுங்கூட நித்யகர்மத்யாக ப்ராயஶ்சித்தமாமென்று ஸமுச்சயமாகச் சொல்லப்பார்க்கில், ஏகஶப்தத்தில் சொல்லுகிற வ்யவதா(ச்சே)ரணத்துக்கு விரோதம்வரும்; அவைதான் இந்த ஶ்லோகத்தில் ஸந்நிஹிதங்களுமல்ல; ஆகையாலே ஸமுச்சயம் கூடாது.

அஸந்நிஹிதங்களான வந்தப்ராயஶ்சித்தங்கள்தான் ஸ்வதந்த்ராதிகாரங்களுமாயிருக்கும்; ஆகையாலே விஹிததர்மத்யாக ப்ராயஶ்சித்தமாக ஶரணவரணம் விதிக்கிறதென்னுமர்த்தமநுபபந்நம்.

பக்தியோகத்துக்கு அங்கமான கர்மாதிகளிலே வைகல்யம் பிறந்தால் தத்ப்ராயஶ்சித்தம் ப்ரபதநமென்பர் சிலர்; தர்மஶப்தம் அங்கஸஹிதமாய் வேதோக்தமான ப்ரதாநோபாயத்தை யல்லது அங்கதர்மமாத்ரத்தை வசியாமையாலும், அங்கதர்மமாத்ர வாசகமென்கைக்கு ப்ரமாணமில்லாமையாலும், அங்கதர்மமாத்ரத்தைச் சொல்லும்போது தர்மவிஶேஷணமான ஸர்வஶப்தத்துக்கு வையர்த்த்யம்வருகையாலும் அதுசொல்லவொண்ணாது.

அங்கதர்மவைகல்யப்ராயஶ்சித்தமாம்போது, ஶக்யாம்ஶத்யாகப்ராயஶ்சித்தமோ? அஶக்யாம்ஶத்யாக ப்ராயஶ்சித்தமோவென்று விகல்பித்தால், அதிகாராநுகுணமான வநுஷ்டாநஸமயத்தில் ஸாமாந்யேந ஸர்வவர்ணாஶ்ரமதர்மங்களும் ஒருவனாலநுஷ்டித்துத் தலைக்கட்டப்போகாமையாலும், ஒருவனைக்குறித்து விதியில்லாமையாலும், ஸ்வாதிகாராநுரூபமான விஹிதங்களானவற்றில் ஶக்யாம்ஶத்யாக ப்ராயஶ்சித்தமொழிய அஶக்யாம்ஶத்யாக ப்ராயஶ்சித்தமென்னவொண்ணாது. ஶக்யாம்ஶத்யாக ப்ராயஶ்சித்தமென்னில் அவற்றைக்குறித்து விதிக்கிற அந்த ப்ராயஶ்சித்தங்களோடே விரோதிக்கும். ஆகையாலே அங்கவைகல்ய ப்ராயஶ்சித்தமென்கிற பக்ஷம் துஷ்டம்.

சிலர் கீழ்விஹிதமான கர்மஜ்ஞாநாதி ஸாதநவிஶேஷங்களை நிகமித்துத் தலைக்கட்டுகிறதித்தனை யல்லது தத்த்யாகத்தை விதிக்கிறதன்றென்பர்கள். எங்ஙனேயென்னில்; (க) "ఏవముక్త్వా హృషీకేశం గుడాకేశః పరంతప- நயோத்ஸ்யாமீதி கோவிந்தமுக்த்வா தூஷ்ணீம்பபூவஹ" (உ) "రథోపస్థ-ரதோபஸ்தஉபாவிஶத்" என்று நான்

(க) ௨-௨-௯ (உ) ௨-௧-௪எ

யுத்தம்பண்ணக்கடவேனல்லேனென்று தேர்த்தட்டிலே விழுந்த வர்ஜுநனை யுத்தத்திலே ப்ரவர்த்திப்பிக்கைக்காக ப்ரவ்ருத்தமான ப்ரபந்தமாகையாலும், (க) “నియతంకురుకర్మత్వం కర్మజ్యాయోహ్యకర్మణః । శరీరయాత్రాపిచతేనప్రసిద్ధ్యేదకర్మణః-நியதம்குருகர்மத்வம் கர்மஜ்யாயோஹ்யகர்மணஃ । ஶரீரயாத்ராபிசதேநப்ரஸித்த்யேதகர்மணஃ” (௨) “ధర్మ్యాద్ధియుద్ధాచ్ఛ్రేయోన్యత్ క్షత్రియస్యనవిద్యతే । లోకసఙ్గ్రహమేవాపిసమ్పశ్యన్ కర్తుమర్హసి-தர்ம்யாத்தியுத்தாச்ஶ்ரேயோந்யத்க்ஷத்ரியஸ்யநவித்யதே । லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பஶ்யந்கர்த்துமர்ஹஸி” என்று கர்மத்தை நியதமாகப்பண்ணு; கர்மாநுஷ்டாநமே ஶ்ரேஷ்டம்; கர்மவிதுரனானவனுக்கு ஶரீரயாத்ரையும் ஸித்தியாது. க்ஷத்ரியனானவனுக்கு தர்மஸஹிதமான யுத்தத்திற்காட்டில் நல்லதுமில்லை. லோகஸங்க்ரஹத்தைப் பார்த்தாகிலும் கர்மத்தைச்செய்யென்றுமித்யாதிகளாலே கர்மம் அவஶ்யம் கர்த்தவ்யமென்கையாலும், (௩) “అథచేత్త్వమిమం ధర్మ్యంసఙ్గ్రామంనకరిష్యసి । తతస్స్వధర్మంకీర్తించహిత్వాపాపమవాప్స్యసి- அதசேத்த்வமிம்தர்ம்யம்ஸங்க்ராமம்நகரிஷ்யஸி । ததஸ்ஸ்வதர்மம்கீர்த்திஞ்சஹித்வாபாபமவாப்ஸ்யஸி” “తతోయుద్ధాయయుజ్యస్వనైవంపాపమవాప్స్యసి-ததோயுத்தாயயுஜ்யஸ்வநைவம்பாபமவாப்ஸ்யஸி” என்று நித்யகர்மமான இந்தயுத்தத்தைப் பண்ணுயாகில் தர்மத்தையும் கீர்த்தியையுமிழந்து பாபத்தையடைவதி; ஆகையாலே யுத்தத்தின்பொருட்டு யுக்தனாய் இப்படிப் பாபத்தையடையாதேகொள்ளென்று கர்மமநுஷ்டியாதபோது பாபிஷ்டனாமென்கையாலும், (௪) “యేత్వేతదభ్యసూయన్తోనానుతిష్ఠన్తిమేమతమ్ । సర్వజ్ఞానవిమూఢాంస్తాన్విద్ధినష్టానచేతసః- யேத்வேததப்யஸூயந்தோநாநுதிஷ்டந்திமேமதம் । ஸர்வஜ்ஞாநவிமூடாம்ஸ்தாந்வித்திநஷ்டாநசேதஸஃ” நானுதரித்து உபதேசித்த கர்மத்தை அஸூயைபண்ணிநின்றுகொண்டு யாவர்சிலர் அநுஷ்டியாதிருக்கிறார்கள்; அவர்கள் ஜ்ஞாநஹீநராய் நஶிக்குமவர்களாக புத்திபண்ணு; கர்மத்தையநுஷ்டியானாகில் நஷ்டனாமென்றும், (௫) “మోహాత్తస్యపరిత్యాగస్తామసఃపరికీర్తితః-மோஹாத்தஸ்யபரித்யாகஸ்தாமஸஃபரிகீர்த்திதஃ” என்று மோஹத்தாலே கர்மத்தினுடைய பரித்யாகம் தாமஸமென்று கர்மத்யாகத்தை தமஃகார்யமாகச்சொல்லுகை

(க) கீ-௩-௨0 (௨) கீ-௨-௩௧ (௩) கீ-௨-௩௩
(௪) கீ- (௫) கீ-௧அ-எ

யாலும், (க) "సఙ్గంత్యక్త్వా ఫలఞ్చైవ స త్యాగస్సాత్త్వికో మతః - ஸங்கம்த்யக்த்வாபலஞ்சைவஸத்யாகஸ்ஸாத்விகோமத꞉" என்று ஸங்கத்தையும் பலத்தையும் விடுகிறது ஸாத்விகத்யாகமென்கையாலும், (உ) "నహి దేహభృతా శక్యన్త్యక్తుం కర్మాణ్యశేషతః । నియతస్య తు సన్న్యాసః కర్మణో నోపపద్యతే-நஹிதேஹப்ருதாம்ஶக்யஸ்த்யக்தும்கர்மாண்யஶேஷத꞉। நியதஸ்யதுஸந்ந்யாஸ꞉ கர்மணோநோபபத்யதே" என்று-ஶரீரியானவனுக்கு கர்மங்கள் நேராகவிடவொண்ணாதென்றும், நித்யமானகர்மத்தினுடைய த்யாகம் கூடாதென்கையாலும், (ங) "కర్తవ్యానీతి మే పార్థ నిశ్చితం మతముత్తమమ్ - கர்த்தவ்யாநீதிமேபார்த்தநிஶ்சிதம்மதமுத்தமம்" கர்மங்கள் கர்த்தவ்யமென்றே எனக்கு உத்தமமானமதமென்கையாலும், (ச) "స్థితోఽస్మి గతసన్దేహః కరిష్యే వచనం తవ-ஸ்திதோஸ்மிகதஸந்தேஹ꞉ கரிஷ்யேவசநந்தவ" என்று நீ திருவுள்ளமானபடியே நான்கர்மாநுஷ்டாநம் பண்ணக்கடவேனென்கையாலும், அப்படியே பாரதயுத்தம் ப்ரவ்ருத்தமாகையாலும்.

"மாமேவயேப்ரபத்யந்தே" இத்யாதிகளிலே அங்கமாகவிதித்த ப்ரபத்தியை ப்ரதாநமாகவிதிக்கக்கூடாமையாலும், சிரகாலஸாத்யமாய் துஷ்கரமானகர்மஜ்ஞாநங்களாலே ஸாத்யமானவர்த்தத்தை ஒருப்ரபத்திமாத்ரம் ஸாதிக்கக்கூடாமையாலும், கீழ்ஸாதநாந்தர துஷ்கரத்வாதிகளாலே ஶோகம்பிறந்ததாகச் சொல்லாமையாலும், (ரு) దుఃఖమిత్యేవ యత్కర్మ కాయక్లేశభయాత్త్యజేత్ । స కృత్వా రాజసం త్యాగం నైవ త్యాగఫలం లభేత్ - துஃக்கமித்யேவயத்கர்மகாயக்லேஶபயாத்த்யஜேத் । ஸக்ருத்வாராஜஸம்த்யாகம்நைவத்யாகபலம்லபேத்" என்று கர்மத்தை காயக்லேஶபயத்தாலே துஃக்கமென்றுவிட்டானாகில் அது ராஜஸத்யாகம்; அவனுக்கு த்யாகபலஸித்தியில்லையென்கையாலும் விஹிதாநுஷ்டாநம் ஸ்வரூபஹாநியாமாகில் விதிநிஷேதஶாஸ்த்ரவஶ்யரன்றிக்கே யொழியுமாகையாலும், "ஶரணம்வ்ரஜ" என்கிறவிதியும் அநுஷ்டிப்பாரில்லாமையாலே அதுக்கும் வையர்த்த்யம் வருகையாலும், விஹிதமான கர்மஜ்ஞாநாதிகளுக்கு அங்கதயாப்ரபத்திவிதாநம் பண்ணுகிறதென்னுமளவில், ப்ரபத்தியினுடைய அந்யநிரபேக்ஷதாநிபந்தந ஸ்வதந்த்ரோபாயத்தைச்சொல்லுகிற அவதாரண

(க) கீ-கஅ-கூ (உ) கீ-கஅ-கக (ங) கீ-கஅ-சு
(ச) கீ-கஅ-எங (ரு) கீ-கஅ-அ

வாசியான ஏகபதத்துக்கு வையர்த்த்யம்வருமென்ன வேண்டாதபடி தேவதாந்தரங்களை வ்யாவர்த்திக்கலாமாகையாலும் இங்குச்சொல்லுகிற த்யாகம் கர்மஸ்வரூபத்யாகமாகமாட்டாது.

ஆகையாலே கீழ்ச்சொன்ன கர்மஜ்ஞாநாதிஸாதநங்களில்ப(ஃ)லஸங்காதிகளையும் ஸ்வதந்த்ரஸாதநமென்கிற ப்ரதிபத்தியையும் விட்டு தத்ஸாதநஸமாராத்யனானவனையே பலப்ரஸாதகனாகபுத்தி பண்ணு; அவற்றாலே ப்ரீதனான நான் என்னைப்பெறுகைக்கு விரோதியான எல்லாப்பாபங்களில் நின்றும் விடுவிக்கிறேன். ஆனபின்பு எனக்குப்ராஸாதநமான கர்மயோகத்தில் கர்த்தவ்யாகர்த்தவ்யபுத்தியாலே†மோஹிக்கக்கடவையல்லையென்று உத்தரார்த்தத்தை நிகமிக்கிறதென்று சிலர் சொல்லுவர்கள்; அது அர்த்தமன்று;

கர்மம் அவஶ்யம் கர்த்தவ்யமென்றதும், அகரணத்தில் பாபம் வருமென்றதும் ஸாதநமான கர்மத்திலன்றிக்கே ஸ்வவர்ணஸ்வாஶ்ரமோசிதமான கர்மத்திலே யாகையாலும், கர்மம் ஶ்ரேஷ்டமென்னுமிடம், கர்மயோகத்தை ப்ரஶம்ஸித்தபடி யாகையாலும், (க) "யே த்வேதத³ப்⁴யஸூயந்த:-மேதத்வேததப்யஸூயந்த:" என்கிறவிடம் அநுஷ்டிக்கச்சொன்னதிலே அஸூயையைப்பண்ணில்நஷ்டனென்கிறதொழிய அநுஷ்டியாதபோது நஷ்டனென்கிறதன்றாகையாலும், அநுஷ்டியாதவன் நஷ்டனென்னில், கர்மயோகநிரபேக்ஷனாய்விட்ட ஜ்ஞாநயோகாதிகாரிக்கு நாஶம்வரவேண்டுகையாலும், கர்மஸ்வரூபத்யாகம் தாமஸகார்யமென்றவிடம் "மோஹாத்" என்று விஶேஷிக்கையாலும், நாஸ்திகத்யாகத்தைச் சொல்லுகிறதாகையாலும், ஸாத்விகத்யாகமாகச்சொன்ன பலாதித்யாகம் நாஸ்திகவ்யாவ்ருத்திபரமாகையாலும், அங்ஙனன்றாகில் கர்மஸ்வரூபத்யாகம் பண்ணின ஜ்ஞாநயோகாதிகாரிக்கும் ஸாத்விகத்வமின்றியிலே யொழிகையாலும், கரணங்கள் குர்வத்ரூபங்களாகையாலே கர்மங்களை விடப் போகாதென்கிறவிடம் பகவத்ப்ரீணநகர்மத்தைவிடுகை புக்ஷமல்லவென்கிறத்தாலே பரிஹ்ருதமாகையாலும் "கர்த்தவ்யாநி" என்கிறவிடம் "த்யாஜ்யம்தோஷவத்" என்று ராகத்வேஷாதிகளோபாதி ஆத்மாவுக்கு கர்மம் பந்தகமாகையாலே த்யாஜ்யமென்கிறவர்களை

(க) கீ-௩-௩௧ † மோஹிக்க

வ்யாவர்த்திக்கிறதாகையாலும் கர்மத்தை யங்கமாகவுடைத்தான ஜ்ஞாநந்தன்னையே கர்மத்துக்கு அங்கமாகவிதிக்கையாலே அங்கமானப்ரபத்தியை ஸ்வதந்த்ரமாக விதிக்கக்கூடாதென்கிற விரோதமில்லாமையாலும்,

தப:கர்மாதிஸாத்யமான பாபநிவ்ருத்தி க்ருஷ்ணாநுஸ்ம்ருதிமாத்ரத்தாலே ஸித்திக்குமென்றெழுதுகையாலே ப்ராபல்யதௌர்ப்பல்யமில்லாமையாலும், த்யாகபலஸித்தியில்லையென்கிறவிடம் ஸாதநமான கர்மத்தைவிட்டு தத்ஸாத்யமானஜ்ஞாநத்தை ஆசைப்படில் அதுகிடையாதென்கிறதாகையாலே அத்தோடு விரோதமில்லையாகையாலும், ஸ்வாதிகாராநுரூபதர்மத்தை யநுஷ்டேயமாகச்சொல்லி தத்வ்யதிரிக்ததர்மத்தை த்யாஜ்யமாகச்சொல்லுகிறதாகையாலே விதிநிஷேத ஶாஸ்த்ரவையர்த்த்யம்வருமென்னவொண்ணுதாகையாலும், (௧) "మాశుచస్సమ్పదం దైవీమభిజాతోసి పాణ్డవ-மாஶுசஸ்ஸம்பதந்தைவீமபிஜாதோஸிபாண்டவ" என்கிற ஶோகநிவ்ருத்தியாலே ஶோகம் அநுமேயமானவோபாதி இங்கும், "మాశుచః-மாஶுச:" என்கையாலே ஶோகம் அநுமிக்கலாயிருக்கையாலே ஶோகம் ப்ரஸ்துதமன்றென்கிறது தூஷணமாகமாட்டாமையாலும், ப்ரபத்தியை ஸ்வதந்த்ரமாக விதிக்கையாலும்,

(௨) "ఇతి తే జ్ఞానమాఖ్యాతమ్- இதிதேஜ்ஞாநமாக்யாதம்" என்று அந்த ஜ்ஞாநப்ரகரணந்தன்னிலே நிகமித்துவிடுகையாலே, புநருக்திவருகையாலும், (௩) "అహం హి సర్వయజ్ఞానాం భోక్తా చ ప్రభురేవ చ- அஹம்ஹிஸர்வயஜ்ஞாநாம்போக்தாசப்ரபுரேவச" என்று ஸர்வயஜ்ஞங்களுக்கும் போக்தாவும்நானே; பலப்ரதாநம் பண்ணுமவனும்நானே, யென்று தானேசொல்லுகையாலே "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి-ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்கிறவிடம் கர்மஜ்ஞாநாதிஸாதநங்களாலே ப்ரீதனான நானென்கிறவிஶேஷணம் இங்குக்கூடாமையாலும், தேவதாந்தரவ்யாவ்ருத்தி "மாம்" என்கிறபதத்தாலே ஸித்திக்கையாலே ஏகபதத்துக்கு வ்யாவர்த்த்யமில்லாமையாலும், (௪) "నానుశోచితుమర్హసి-நாநுஶோசிதுமர்ஹஸி" (௫) "నైవం శోచితుమర్హసి-

(௧) கீ-௧௬-௪ (௨) கீ-௧௮-௬௩ (௩) கீ-௯-௨௪
(௪) கீ-௨-௨௫ (௫) கீ-

நைவம் ஶோசிதுமர்ஹஸி" என்று நீ ஶோகிக்கக்கடவையல்லையென்று சொல்ல, அவனும்; (க) "𑌯𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑌚𑌸𑍍𑌤𑍇𑌨 𑌮𑍋𑌹𑍋𑌽𑌯𑌂 𑌵𑌿𑌗𑌤𑍋 𑌮𑌮-யத்த்வயோக்தம்வசஸ்தேநமோஹோயம்விகதோமம" என்று அத்யாத்மவிஷயமாக நீ திருவுள்ளமான வார்த்தைகளாலே என்னுடைய மோஹம்போயிற்றென்று அவன் ப்ரதிவசநம் பண்ணுகையாலும்,

(உ) "𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌭𑍂𑌯𑌃 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌪𑌰𑌮𑌂 𑌵𑌚𑌃-ஸர்வகுஹ்யதமம்பூயஶ்ஶ்ருணுமேபரமம்வசஃ" (௩) "𑌰𑌾𑌜𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌰𑌾𑌜𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍। 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌵𑌗𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑍁𑌸𑍁𑌖𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍-ராஜவித்யாராஜகுஹ்யம்பவித்ரமிதமுத்தமம்ப்ரத்யக்ஷாவகமம்தர்ம்யம்ஸுஸுகம்கர்த்துமவ்யயம்" என்று ராஜகுஹ்யமாகச் சொல்லப்பட்ட பக்தியோகத்தைக்காட்டிலும், (ச) "𑌇𑌤𑌿 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌯𑌾𑌨𑌘-இதிகுஹ்யதமம்ஶாஸ்த்ரமிதமுக்தம்மயாநக" என்று குஹ்யதமமாகச் சொல்லப்பட்ட புருஷோத்தமவித்யாதிகளிற்காட்டிலும் அதிகமமாய், ஸர்வகுஹ்யதமமென்றும், (ரு) "𑌏𑌤𑌦𑍍𑌵𑍈 𑌮𑌹𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑍍-ஏதத்வைமஹோபநிஷதம்தேவாநாம்குஹ்யம்" என்று ஶ்ருதியிலும், (௬) "𑌏𑌤𑌨𑍍𑌮𑌹𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍- ஏதந்மஹோபநிஷதம்தேவாநாம்குஹ்யமுத்தமம்" என்று ஸ்ம்ருதியிலும் தேவகுஹ்யமாகச் சொல்லப்பட்ட ந்யாஸஶப்தவாச்யமான ப்ரபதநத்தை ஸர்வாதிகமாகப் பிரியச்சொல்லுகையாலும், உக்தஸாதநாதிகமென்கிற பக்ஷமர்த்தமன்று;

ஆகையாலே நிரூபதிஷ்டமான கர்மாதிகளிலே (எ) "𑌤𑌤𑍍𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌘𑍋𑌰𑍇 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑌸𑌿 𑌕𑍇𑌶𑌵 - தத்கிம்கர்மணிகோரேமாம்நியோஜயஸிகேஶவ" என்று பின்புகோரமான இக்கர்மத்திலே என்னை யென் செய்யமூட்டுகிறு யென்கையாலே கர்மங்களிலே துஷ்கரத்வாதிபயம் நடக்கையாலும், (அ) "𑌕𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑍋𑌭𑌯𑌵𑌿𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌶𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌾𑌭𑍍𑌰𑌮𑌿𑌵 𑌨𑌶𑍍𑌯𑌤𑌿-கச்சிந்நோபயவிப்ரஷ்டஶ்சிந்நாப்ரமிவநஶ்யதி" என்று யோகப்ரஷ்டனானவன் சி(ச்சி)ந்நாப்ரம்போலே நஶிக்குமென்கையாலே கர்மயோக

(க) கீ-
(உ) கீ-௧௮-௬௪
(௩) கீ-௯-௨
(ச) கீ-௧௫-௨௦
(ரு) தை-நா-௭௯
(௬)
(எ) கீ-௩-௧
(அ) கீ-௬-௩௮

ம் ஸாபாயமென்கிறபயம் நடக்கையாலும், (க) "చఞ్చలంహిమనఃకృష్ణ ప్రమాథిబలవద్దృఢమ్। తస్యాహంనిగ్రహంమన్యేవాయోరివసుదుష్కరమ్-சஞ்சலம்ஹிமநః க்ருஷ்ணப்ரமாதிபலவத்த்ருடம்। தஸ்யாஹம்நிக்ரஹம்மந்யே வாயோரிவஸுதுஷ்கரம்" என்று மநஸ்ஸு விஷயங்கள்தோறும்பட்டி புக்கு ஒன்றில்நிலைநில்லாதே யிருப்பதொன்று; ப(௩)லவத்தாய்த்ருடமாயிருக்கும்; ஸததகதியான வாயுவினுடைய நிரோத(த)மரிதானப் போலே, அந்தமநஸ்ஸை விஷயங்களில்நின்றும் மீட்கையரிதென்று புத்திபண்ணநின்றேனென்கையாலே கர்மயோகாதிகளுடைய† வநுஸந்தாநமுமகப்பட துஷ்கரமென்றுபயப்படுகையாலும்,

(உ) "యతతోహ్యపికౌన్తేయపురుషస్యవిపశ్చితః। ఇన్ద్రియాణిప్రమాథీనిహరన్తిప్రసభంమనః। తానిసర్వాణిసంయమ్యయుక్తఆసీతమత్పరః-யததோஹ்யபிகௌந்தேய புருஷஸ்யவிபஶ்சிதః। இந்த்ரியாணிப்ரமாதீநிஹரந்திப்ரஸபம்மநః। தாநிஸர்வாணிஸம்யம்யயுக்த ஆஸீதமத்பரః" என்று ஜ்ஞாநவானாய்க்கொண்டு இந்த்ரியஜயம்பண்ணுகையிலே யத்நியாநிற்கிற புருஷனுக்கும் அது அரிது; மநஸ்ஸையும் தன்வழியிலே அபஹரித்துக்கொள்ளுமென்கையாலே இந்த்ரியப்ராபல்ய நிபந்தநமானபயம் நடக்கையாலும், தத்பரிஹாரார்த்தமாக அந்தவிந்த்ரியங்களை நியமித்து என்பக்கலிலே தத்பரனாவானென்கையாலும்,

(௩) "దైవీహ్యేషాగుణమయీమమమాయాదురత్యయా-தைவீஹ்யேஷா குணமயீமமமாயாதுரத்யயா" என்று எனக்குலீலாபரிகரமாய் குணத்ரயாத்மிகையான என்னுடைய இந்தமாயையை ஒருவராலும் ஸ்வயத்நத்தால் கடக்கவரிதென்கையாலும், (௪) "ఈశ్వరస్సర్వభూతానాంహృద్దేశేఽర్జునతిష్ఠతి। భ్రామయన్సర్వభూతానియన్త్రారూఢానిమాయయా-ஈஶ்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுநதிஷ்டதி। ப்ராமயந்ஸர்வபூதாநியந்த்ராரூடாநிமாயயா" என்று ஸர்வநியந்தாவான ஸர்வேஶ்வரன் ஸர்வருடையவும் ஹ்ருதயப்ரதேஶங்களிலே நில்லாநிற்கும்; ஸத்தாயோகி ஸகலபதார்த்தங்களையும் யந்த்ராரூடமாக்கி ப்ரமிப்பியாநின்றுகொண்டு; என்கையாலே, ஈஶ்வராதீநம்ஜகத்து, தன்னால் செய்யலாவதொருக்ருத்யமில்லை யென்றறிகையாலும்,

---

(க) கீ-௬-௩௪ (உ) கீ-௨-௬0 (௩) கீ-௭-௧௪

(௪) கீ-௧௮-௬௧ † அநுஷ்டாநம்

(௧) "మత్తస్స్మృతిర్జ్ఞానమపోహనఞ్చ-மத்தஸ்ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச" என்று பூர்வாநுபூதத்தினுடைய ஸ்ம்ருதியும் ஜ்ஞாநாபோஹநாதிகளான விவையுமென்னாலே யென்கையாலே, சேதநவ்யாபாரைகஸாத்யமாயிருப்பதொன்றுமில்லையென்றறிகையாலும், "మామేవయే ప్రపద్యన్తే మాయామేతాం తరన్తి తే - மாமேவயேப்ரபத்யந்தே மாயாமேதாம்தரந்திதே" என்று என்னையே யாவர்சிலர் ப்ரபத்தி பண்ணுகிறார்கள்; அவர்கள் இந்தமாயையைக் கடப்பர்களென்றும், (௨) "తమేవచాద్యం పురుషం ప్రపద్యే-தமேவசாத்யம்புருஷம்ப்ரபத்யே" (௩) "తమేవశరణం గచ్ఛ సర్వభావేన భారత-தமேவஶரணங்கச்சஸர்வபாவேநபாரத" இத்யாதிகளாலே ஸர்வகாரணபூதனை வந்தப்புருஷனையே ப்ரபத்திபண்ணுவானென்றும், ஸர்வப்ரகாரத்தாலும் அவனையே ஶரணமாகவடையென்றும் பலவிடங்களிலும் ப்ரபத்தியைவிதிக்கச் செய்கையாலே ப்ரபத்தியல்லது ஸம்ஸாரநிஸ்தரணோபாயமில்லையென்கிற ப்ரபத்திவைலக்ஷண்யஜ்ஞாநம் பிறக்கையாலும்,

ஸுகரமாய் நிரபாயமாய் நிரபேக்ஷமாய் ஸித்தமாய் பரதந்த்ரஸ்வரூபத்துக்கநுரூபமாய் அவிளம்ப்யபலப்ரதமான வுவ்வுபாயங்கிடக்க துஷ்கரமாய் ஸாபாயமாய் ஸாபேக்ஷமாய் பஹுதரஜந்மஸாத்யமாய் ஸ்வரூபவிருத்தமாய் விளம்ப்யபலப்ரதமான ஸாத்யோபாயங்களிலே என்னைமூட்டாநின்றாய், அவை தூரநுஷ்டேயமாயிராநின்றது; (௪) "நெறிகாட்டிநீக்குதியோ" என்கிறபடியே ஸாதநாந்தரங்களைக்காட்டி அகற்றநினைக்கிறாயோ! விலக்ஷணோபாயமான வுன்னைக்காட்டி உஜ்ஜீவிப்பிக்கிறாயோ! (௪) "என்செய்வானெண்ணினாய் கண்ணனே" என்று ஶோகாவிஷ்டனானவளவிலே இப்படி ஸாதநவிஶேஷஶ்ரவணத்திலே ஶோகம்பிறக்கும்படி பாகம்பிறந்தபின்பு,

இனி நீபூர்வோக்தமானகர்மஜ்ஞாநாதிஸாதநங்களைஸாங்கமாகஸவாஸநபர்த்யாகம்பண்ணிவாத்ஸல்யாதிகுணவிஶிஷ்டனாய்க் கொண்டுஉன்னுடையதோஷமேபோக்யமாய்,உன்சிறுமைபாராதே உனக்குமுன்னின்று கார்யம்செய்யுமவனாய், அதிலும் என்பேறாகச்செய்வேனாயிருக்கிறவென்னை உன்னுடைய இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரங்களுக்கு அவ்யவஹிதமாய் உன்னிணைவையும் அபேக்ஷியாதபடி நிரபேக்ஷஸாதநமாகநினை; அநந்தரம் ஜ்ஞாநாதிகுண

(௧) கீ-௧௫-௧௫ (௨) கீ-௧௫-௪ (௩) கீ-௧௮-௬௨
(௪) பெரியதிருவந்தாதி-௬

விம்பிஷ்டனுன் நான் என்பக்கலிலே ஸமர்ப்பித்த ஸர்வப(ு)ரனை வுன்னை என்னைப்பெறுகைக்கு விரோதியானவெல்லாப்பாபங்களும் ந மக்கிடமன்றென்று விட்டுப்போம்படிபண்ணக்கடவேன்; ஆனபின்பு ஸாதநாந்தர துஷ்கரத்வாதிகளைப்பற்ற ஶோகிக்கக்கடவையல்லை யென்கிறவிதுவே சரமஶ்லோகத்துக்குச் சரமமானவர்த்தமென்று நம்பூர்வாசார்யர்களருளிச்செய்வர்களென்று ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தார்.

நம்மாழ்வாரும் இவ்வுபாயாநுஸந்தாநதசையிலே (க)"நோற்றநோன்பிலேன்" என்று கர்மயோகத்தை யில்லையென்றும், "நுண்ணறிவிலேன்" என்று ஜ்ஞாநயோகபக்தியோகங்களை யில்லையென்றும், கர்மஜ்ஞாநபக்திகளுடைய அநந்வயாநுஸந்தாநபூர்வகமாக "அம்மான்" என்று ஸ்வாமித்வத்தையும் "சிரீவரமங்கலநகர்வீற்றிருந்த" என்று ஸௌலப்யத்தையும், "எந்தாய்" என்று ஸௌஶீல்யத்தையும், "உனக்குமிகையல்லேன்" என்று வாத்ஸல்யத்தையும்முன்னிட்டு "தமியேனுக்கருளாய்" "அருளாயுய்யுமாறெனக்கே" என்று பகவத்க்ருபையையநுஸந்தித்து "நின்பாதமேசரணாகத்தந்தொழிந்தாய்" என்று உபாயவிதாநத்தையும், "கழல்களவையே சரணாகக்கொண்ட" "ஏகசிந்தையனாய்" என்று விதி(த)விஷயமான ப்ரபத்தியையும் அருளிச்செய்தார்.

திருமங்கையாழ்வாரும் (உ) 'பிறவிநோயறுப்பானேணிலேன்', (ங)"மற்றேலொன்றறியேன்" "நலந்தானொன்றுமிலேன் நல்லதோரறம்செய்துமிலேன்" என்று இதரோபாயஶூந்யதையை யருளிச்செய்து "நாயேன்வந்தடைந்தேன்" என்று தம்முடைய நைச்யத்தைப் புரஸ்கரித்து "ஆற்றேன்வந்தடைந்தேன்" என்று அநந்யஶரணத்வரூபமான அஸாதாரணதைமுன்னாக உபாயவரணம் பண்ணியருளினார்.

ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வாரும் (ச)"குளித்துமூன்றனலையோம்பும் குறிகொளந்தணமைதன்னையொழித்திட்டேன்" என்று கர்மயோகத்தினுடைய ஸவாஸநபரித்யாகத்தைச்சொல்லி "ஏன்கணில்லை" என்று ஜ்ஞாநயோகாநந்வயத்தை யநுஸந்தித்து "நின்க

(க) தி-வாய்-ரு-எ-க (உ) தி-மொ-க-கூ-க (ங) தி-மொ-க-கூ-கூ
(ச) திருமாலை-உரு

னும்பத்தனல்லேன்'' என்று பக்தியோகாநந்வயத்தை யநுஸந்தித்து ''நம்பிகடல்வண்ணா'' என்று ஶரண்யகுணபூர்த்தியை யநுஸந்தித்து ''எனக்கருள்செய்கண்டாய்'' என்று ப்ரபத்த்யுபாயவரணம் பண்ணி யருளினர்.

(௪) ''கறவைகள்பின்சென்று கானம்சேர்ந்துண்போம்''என்று கர்மயோகாநந்வயத்தையும், ''அறிவில்லை'' ''அறிவொன்றுமில்லை'' என்று ஜ்ஞாநயோக பக்தியோகங்களினுடைய அநந்வயத்தையுமருளிச்செய்து, ''புண்ணியம்நாமுடையோம்'' என்றுஸித்தோபாயாநந்வய ப்ரதிபத்தியையுமருளிச்செய்து, ப்ரபத்தி இதரோபாயபரித்யாகபூர்வகமாக விருக்குமென்னுமிடத்தை நாய்ச்சியாருமருளிச்செய்தார்.

இப்படி ஆழ்வார்களெல்லாரும் ஸாதநாந்தராநந்வயபூர்வகமாகப் பலவிடங்களிலும் ப்ரபத்தியை யருளிச்செய்துகொண்டு போருகையாலே இதிற்சொல்லுகிற த்யாகவிதாநம் அத்யந்தமநுரூபமாயேயிருக்குமாகையாலே இவ்வாழ்வார்கள் திருவுள்ளத்தை யநுவிதா(ஞா)நம்பண்ணிப்போந்த யாமுநமுனிகள் பாஷ்யகாரர் முதலான பூர்வாசார்யர்களும் ஸாதநாந்தரபரித்யாகபூர்வகமாக இப்ரபத்தியை யருளிச்செய்தார்.

எங்ஙனேயென்னில்;-யாமுநமுனிகள், (உ)''ந தர்மநிஷ்டோஸ்மி-நதர்மநிஷ்டோஸ்மி'' என்கிற ஶ்லோகத்திலே,''நதர்மநிஷ்டோஸ்மி''என்று பேற்றுக்குறுப்பாகக் கர்மயோகத்திலந்வயமில்லையென்றும், ''ந சாத்மவேதீ-நசாத்மவேதீ''என்று ஜ்ஞாநயோகத்திலந்வயமில்லையென்றும், ''த்வச்சரணாரவிந்தே பக்திமாந்- த்வச்சரணாரவிந்தேபக்திமாந்'' என்று பக்தியோகத்திலந்வயமில்லையென்றும்,''அகிஞ்சந:-அகிஞ்சந:'' என்று இதுக்குஅதிகாரஶக்திவாஞ்சா(ஞா)நுதபாதிகளுமில்லையென்றும் ''அநந்யகதி:-அநந்யகதி:'' என்றுரக்ஷகாந்தரமில்லையென்றும் ''ஶரண்ய-ஶரண்ய'' என்று உபாயபூதனுடைய குணபூர்த்தியையருளிச்செய்து ''த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே-த்வத்பாதமூலம்ஶரணம்ப்ரபத்யே'' என்று ''மாமேகம் ஶரணம் வ்ரஜ-மாமேகஶரணம்வ்ரஜ'' என்று விதித்ததேவர்திருவடிகளின் மூலத்தை அந்தவுபதேஶக்ரமத்திலே ப்ரபத்திபண்ணுகிறேனென்றருளிச்செய்தார்.

---

(௪) திருப்பாவை-உ௮ (உ) ஸ்தோ-ரத்ந

பாஷ்யகாரரும் (க) "పితరంమాతరమ్-பிதரம்மாதரம்" என்றுதொடங்கி "సర్వధర్మాంశ్చసన్త్యజ్య-ஸர்வதர்மாம்ஸ்சஸந்த்யஜ்ய" என்கிற திருதியாக சேதநாசேதநரூபங்களான ப்ராப்யாப்ராஸங்களையும் ப்ராபகாபாஸங்களையும் பரித்யஜித்து "లోకవిక్రాన్తచరణౌశరణంతేవ్రజంవిభో-லோகவிக்ராந்தசரணௌஸரணம்தேவ்ரஜம்விபோ" என்று திருவுலகளந்தருளின திருவடிகளையுபாயமாக வரிக்கிறேனென்று புராணவசநப்ரக்ரியையாலே இதரோபாயபரித்யாகபூர்வகமாக ஸரணவரணம் பண்ணி, ஸ்வவசநத்தாலே ஸரணம்புகுகிறவளவிலும் (க) "కైఙ్కర్యప్రాప్త్యుపాయభూతభక్తితదుపాయసమ్యగ్జ్ఞానతదుపాయసమీచీనక్రియా-கைங்கர்யப்ராப்த்யுபாயபூதபக்திததுபாயஸம்யக்ஜ்ஞாநததுபாயஸமீசீநக்ரியா" என்றுதொடங்கி "అదృష్టసన్తారోపాయః- அத்ருஷ்டஸந்தாரோபாயஃ" என்கிற திருதியாக கைங்கர்யப்ராப்திக்கு உபாயமானபக்தி, ததுபாயஜ்ஞாநயோகம், ததுபாயமான கர்மயோகம், ததங்கமான ஸமதமாதிகளாகிற ஸமஸ்தாத்வகுணங்களாலும்நிஹீநனுயிருப்பனென்றும், அநாதிபாபவாஸநையின் மிகுதியாலே இவற்றுக்கடியான ஆத்மஜ்ஞாநமுங்கூடவில்லாதபடி பகவந்மாயாதிரோஹித ஸ்வப்ரகாஸநுகைபாலே அத்ருஷ்டஸந்தாரோபாயனுயிருப்பனென்று கர்மஜ்ஞாநாத்யுபாயவிஸேஷங்களினுடைய வநந்வயத்தை யருளிச்செய்து, (க) "నిఖిలజన్తుజాతశరణ్య! శ్రీమన్నారాయణ! తవచరణారవిన్దయుగళంశరణమహంప్రపద్యే-நிகிலஜந்துஜாதஸரண்யஸ்ரீமந்நாராயணதவசரணாரவிந்தயுகளம்ஸரணமஹம்ப்ரபத்யே" என்று ஸரண்யகுணாநுஸந்தாநபூர்வகமாக ஸ்வாபராதபயநிவர்த்தகபுருஷகாரத்தைப் புரஸ்கரித்து ஆஸ்ரயணோபயோகிகல்யாணகுணவிஸிஷ்டனானவவன் திருவடிகளிலேஸரணம்புக்கார்.

ஸ்ரீவத்ஸாங்காசார்யரும், (உ) "త్వామామనన్తి-த்வாமாமநந்தி" என்கிறஸ்லோகத்திலே-தேவரீர், ஜ்ஞாநக்ரியாபஜநங்களாகிற ஸாதநவிஸேஷங்களாலே லப்ய(ர)ராகவும் அந்யைரலப்யராகவும் சொல்லுவர்கள். அயோத்யாவாஸிகளான சராசரஸஹிதங்களானப்ராணிகள் இவற்றிலெந்தவுபாயத்தாலே ப(த)ஜித்தார்களென்று வ்யதிரேகத்தாலே ஸித்தோபாயம் இதரஸாதநநிரபேக்ஷமென்னுமிடத்தை

(க) ஸரணாகதிகத்யம் (உ) வரதராஜஸ்த-கக

யும் "ஜயஜாஸ்ருதோஷி-கருணைம்ருதாப்தே" என்று பகவத்க்ருபையே உபாயமென்று உதாஹரணபூர்வகமாக வருளிச்செய்து.(க)"ஸ்வ கர்ம ... ஸ்வகைர்க்ருணைஸ்ஸ்வைபர்ச்சிதைஃ" என்கிறஶ்லோகத்திலே ஶமதமாதிதனைவிஶிஷ்டராய்க்கொண்டு கர்மயோகாதிகளாலே தேவரை பஜிக்குமவர்களுக்கும் அவற்றைக் கார்யகரமாக்குவது தேவர்க்ருபையானபின்பு அந்த க்ருபையை எனக்கு அவலம்பமாக அநுஸந்திக்கிருப்பனென்றருளிச்செய்து, (உ)"யத்யப்யஹோ-யதித்வ பக்தோபி" என்று கர்மஜ்ஞாநபக்திகளாகிற ஸாதநவிஶேஷங்களிலந்வயமில்லையேயாகிலும் தேவருடையக்ஷமாதயாதி மங்களகுணங்களுண்டாகையாலே தேவர் திருவடிகளை நான்வரிக்கக் குறையில்லையென்று இதரோபாயநிவ்ருத்திபூர்வகமாகப்ரபத்தியை பகவத்ப்ராப்த்யுபாயமாகவருளிச்செய்தார்.

ஶ்ரீபராசரபட்டரும்,(௩)"ஜ்ஞாநக்ரியா ... -ஜ்ஞாநக்ரியாபஜநஸம்பதகிஞ்சநோஹம்" இத்யாதிகளாலே கர்மயோகாதிகளென்ன, இச்சாதிகார ஶக்த்யநுஶயாதிகளென்ன, இவற்றிலொன்றிலுமெனக் கந்வயமில்லையென்று இதரோபாயஹாநியை முன்னிட்டு "ஶரணம்பவ-ஶரணம்பவ" என்று உபாயப்ரார்த்தனைபண்ணியருளினர். அபயப்ரதகுருஸூநுவான ஸுந்தரவரராஜாசார்யரும் இஶ்ஶ்லோகதாத்பர்யமருளிச்செய்கிறவிடத்தில் (ச) "ஸர்வ ... த்யஜ-மத்ப்ராப்த்யர்த்ததயா" இத்யாதியாலே என்னைப்பெறுகைக்குறுப்பாக என்றுலே சொல்லப்பட்ட எல்லாஸாதநங்களையும் ஸவாஸநமாகவிட்டு அநந்தரம் என்னை யொருவனையுமே என்னைப்பெறுகைக்குஸாதநமாக வ்யவஸாயத்தைப்பண்ணு; ஏவம்ரூப வ்யவஸாய யுக்தனான வுன்னை ஜ்ஞாநஶக்த்யாதி ஸகலகுணங்களாலும் பூர்ணனான நான் என்னைப்பெறுகைக்கு ப்ரதிபந்தகங்களான ஸகலபாபங்களாலும் விரஹிதனாக்குகிறேன்; ஶோகியாதே கொள்ளென்று இதரோபாயநிவ்ருத்திபூர்வகமான ஸித்தோபாயவரணத்தை இதுக்குத் தாத்பர்யமாக வருளிச்செய்தார்.

ஆகையாலே ஸகலஸாதநாஸஹமான ஸித்தோபாயத்தை ஸாதநாந்தர கர்மாதித்யாகவிதாநபூர்வகமாக விதிக்கையாலே இஶ்ஶ்லோ

(க) வர-ஸ்த-௯௪ (உ) வர-ஸ்த-௯௫ (௩) ரங்க-ஸ்த-அ௯
(ச) அஷ்டஶ்லோகி

கத்துக்கு ஸ்வாரஸிகமானவர்த்தமிதுவேயென்னுமிடம் ஸர்வஸம்ப்ரதிபந்நமென்றதாயிற்று.

ஏவம்ரூபமான காமாத்யுபாயங்களைக் கிழடையப்பரக்கச்சொல்லி அநந்தரம் இந்தப்ரபத்தியைச்சொல்லி இதுக்கவ்வருகே யோருபாயம் சொல்லாமையாலே இத்தைச் சரமஶ்லோகமென்று நம்மாசார்யர்களருளிச்செய்வர்கள்.

[மாம்ஶரணம்வ்ரஜ-మాంశరణంవ్రజ] என்னையே உபாயமாகப்பற்றென்று தானே யாதரித்துவிதிக்கையாலும், "అహంసర్వపాపేభ్యోమో క్షయిష్యామి-அஹம்ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்றுதானே பாபவிமோசநம் பண்ணுவிக்கக்கடவேனென்று ப்ரேமத்தோடே சொல்லுகையாலும் ஶரண்யாபி(பி)மதத்வம் இதுக்குத் தாத்பர்யம்.

"సర్వధర్మాన్పరిత్యజ్య-ஸர்வதர்மாந்பரித்யஜ்ய" என்று ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தஸாதநத்யாகத்தையும்சொல்லுகிறது. த்வயத்தில் ஈஶ்வரபாரதந்த்ர்ய நிபந்தநமாக வுபாயம்சொல்லுகிறது. இதில் ஈஶ்வரஸ்வாதந்த்ர்ய நிபந்தநமாக வுபாயம்சொல்லுகிறது. ஆகையாலே ஈஶ்வரஸ்வரூபம் சொல்லுகை இதுக்குப்ரதாநார்த்தம்.

இவ்வுபாயஸ்வீகாரம் ஸ்வீகார்ய ஸ்வரூபகர்ஶநத்திலல்லது கூடாமைபாலே அநுஸந்தாநம் ஸௌலப்யமென்று நம்பூர்வாசார்யர்களருளிச்செய்வர்கள்; ஸ்வதந்த்ரனை வீஶ்வரனுக்கு ஸ்வரூபமானவுபாயத்வத்தை ப்ராதாந்யேந ப்ரதிபாதிக்கிறது. அது இதரோபாயத்யாகத்திலல்லது கூடாமையாலே "ஸர்வதர்மாந்பரித்யஜ்ய" என்று ததங்கமான ஸாதநாந்தரத்யாகம் சொல்லிற்று.

அவன் உபாயத்வேந ஆஶ்ரயணீயனும்போது ஆஶ்ரிதகசதமான தோஷாதிகள் பாராமல் ஆஶ்ரயணீயனாகவேண்டுகையாலே ததுபயோகியான வாத்ஸல்யாதிகுணத்தை "மாம்" என்கிறவிடத்திலே சொல்லுகிறது. அவ்வுபாயகார்யமான விஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரங்களுக்கு ஓரதிகாரவிஶேஷாபேக்ஷை யுண்டாகையாலே அவ்வதிகாரிவிஶேஷணமான வித்தோபாயப்ரதிபத்தியை "ஶரணம்வ்ரஜ" என்கிறவிடத்தாலே சொல்லுகிறது; அவ்வுபாயகார்யமான பாபவிமோசநத்துக்கு அபேக்ஷிதமான ஜ்ஞாநஶக்த்யாதிகுணயோகத்தை "அஹம்" என்று காட்டுகிறது. வித்தோபாயத்வ ப்ரதிபத்தியுக்தனை வதிகாரியைக்காட்டுகிறது "த்வா" என்று; மேலில் பத

த்வயமும் உபாயக்ருத்யமான பாபவிமோசநத்தையும் உபாயஸ்வீகாரபலமான நைர்ப்ப(ஃ)ர்யத்தையும் சொல்லுகிறது.

இதிற்சொல்லுகிற நிரபேக்ஷோபாயத்வமும் அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திப்ரதத்வமும் ஈஶ்வரனுக்கு ஸ்வரூபமாகையாலே இதுதான் ஈஶ்வரஸ்வரூபம் சொல்லுகிறதென்னவுமாம்; இந்த வுபாயவரணமும் தத்கார்யமான நிர்ப்பரத்வாநுஸந்தாநமும் பகவதேகரக்ஷ்யமாய் பகவதேகஶேஷமாயிருக்கிற வாத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலே ஆத்மஸ்வரூபம் சொல்லுகிறதென்றனுமாயிருக்கும்.

இதில் பூர்வார்த்தம் அதிகாரிக்ருத்யம் சொல்லுகிறது. உத்தரார்த்தம் உபாயக்ருத்யத்தையும் அதிகாரிக்ருத்யலேஶத்தையும் சொல்லுகிறது. அதிகாரிக்குக்ருத்யம் இதரோபாயங்களைவிட்டு அவனையே உபாயமாகப்பற்றி நிர்ப்ப(ஃ)ரனாயிருக்கை. உபாயத்துக்கு க்ருத்யம்-த்யாகஸ்வீகாரங்களுக்கு ப்ரேரகனாய் விடுவித்துப் பற்றுவிக்கையும், ஸ்வேதரநிரபேக்ஷணமின்றி அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திகளைப்பண்ணுகையும்.

(ஸர்வதர்மாநித்யாதி) இதில் தர்மஶப்தம் இப்ஶ்லோகத்தில் ப்ரதாநப்ரதிபாத்யமான ஸித்தோபாயத்தினுடைய ஸ்வீகாரத்துக்கு அங்கமான த்யாகத்துக்கு விஷயமான ஸகலதர்மங்களையும் உபாதானம் பண்ணுகிறது.

இதுதான் - "ஶ்ரேயஸ்ஸாதநம்தர்ம:" என்று பலஸாதநதயா ஸ்வஸாத்யமாக ஶாஸ்த்ரசோதி(த)தமான தர்மங்களைச்சொல்லுகிறதாய், அத்தாலே ஜ்ஞாநயோகத்துக்கு ஸாதநமாகவிதிக்கும் கர்மயோகத்தையும், பக்தியோகத்துக்கு ஸாதநமாகவிதிக்கும் ஜ்ஞாநயோகத்தையும் சொல்லுகிறதென்னில் ;-(க)"[Telugu-script quotation] ராமோவிக்ரஹவாந்தர்ம:" (உ)"[Telugu-script quotation] க்ருஷ்ணம்தர்மம் ஸநாதநம்" என்கிற ஸநாதநதர்மத்துக்கு தர்மஶப்தவாச்யத்வமின்றியிலேயொழியும்; அப்போது "ஶரணம்வ்ரஜ" என்கிறவிதிக்கு வையர்த்த்யம் ப்ரஸங்கிக்கும்; மோக்ஷயிஷ்யாமியென்றும் விரோதிக்கும்; ஆகையாலே இத்தர்மஶப்தம்-"ஶ்ரேயஸ்ஸாதநதர்ம:" என்றும், "[Telugu-script quotation]-சோதநாலக்ஷணோர்த்தோதர்ம:" என்

(க) ரா-ஆர-கூ௭-௧௩ (உ) பாரத-ஆர-அஅ

னும் சொல்லுகிறபடியே பலஸாதநதயா ஶாஸ்த்ரசோதிதமான தர்மத்தைச் சொல்லக்கடவது.

இந்த தர்மஶப்தந்தான், தர்மமென்றும், பரதர்மமென்றும், பரமதர்மமென்றும் த்ரிவிதமாயிருக்கும். இதில் தர்மஶப்தத்தாலே (க) "శృణుష్వ పరమం కర్మ ద్వివిధం తదిహోచ్యతే । ఏకం ప్రవర్తకం ప్రోక్తం నివర్తకమథాపరమ్ । కామతస్తు కృతం కర్మ ప్రవృత్తముపదిశ్యతే । నిష్కామం జ్ఞానపూర్వం తు నివృత్తముపదిశ్యతే । ప్రవర్తకం చ స్వర్గాదిఫలసాధనముచ్యతే । నివర్తకాఖ్యం దేవర్షే విజ్ఞేయం మోక్షసాధనమ్-ஶ்ருணுஷ்வ பரமம் கர்ம த்விவிதம் ததிஹோச்யதே। ஏகம்ப்ரவர்த்தகம்ப்ரோக்தம்நிவர்த்தகமதாபரம்। காமதஸ்துக்ருதம் கர்மப்ரவ்ருத்தமுபதிஶ்யதே। நிஷ்காமம்ஜ்ஞாநபூர்வந்துநிவ்ருத்தமுபதிஶ்யதே। ப்ரவர்த்தகஞ்சஸ்வர்க்காதிபலஸாதநமுச்யதே। நிவர்த்தகாக்யம்தேவர்ஷே விஜ்ஞேயம்மோக்ஷஸாதநம்" என்கிறபடியே லோகத்தில் கர்மம் இரண்டுபடியாகச் சொல்லப்படாநின்றது. அதைக்கேள்! ப்ரவர்த்தககர்மமென்றும், நிவர்த்தககர்மமென்றும்; அதில் ப்ரவர்த்தகமாவது-பலாதிஸந்தைசயோடே ஸ்வர்க்கஸாதநமாக வநுஷ்டிக்கும் ஜ்யோதிஷ்டோமாதிகள். நிவர்த்தகமாவது-பலாதிஸங்காரஹிதனாய்க்கொண்டு ஸ்வரூபஜ்ஞாநபூர்வகமாக வர்ணாஶ்ரமதர்மங்களை இதிகர்த்தவ்யதயா அங்கமாகக்கொண்டு மோக்ஷஸாதநமாக வநுஷ்டிக்கும் கர்மயோகாதிகளென்று த்விதமாகச் சொல்லுகிற கர்மங்களில், ஸ்வர்க்காதிஸாதநமான ஜ்யோதிஷ்டோமாதிகளைச் சொல்லுகிறது.

பரதர்மஶப்தத்தாலே பந்தகமான ஸ்வர்க்காதிபுருஷார்த்த ஸாதநங்களிற்காட்டில் மோக்ஷஸாதநமாகையாலே விலக்ஷணமாய் ஸாத்யமான கர்மயோகாதிகளைச் சொல்லுகிறது. பரமதர்மஶப்தத்தாலே க்ஷேத்ரபலஸாதநமுமின்றிக்கே ஸ்வயத்நஸாத்யமுமின்றிக்கே ஸித்தமுமாய் பரமபுருஷார்த்த ஸாதநமுமாய், (உ)"యే చ వేదవిదో విప్రా యే చాధ్యాత్మవిదో జనాః । తే వదన్తి మహాత్మానం కృష్ణం ధర్మం సనాతనమ్-யேசவேதவிதோவிப்ரா யேசாத்யாத்மவிதோஜநா꞉। தேவதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம்தர்மம்ஸநாதநம்" என்று வேதவித்துக்களாய் பூர்வபாக (कर्म)நிஷ்டராணவரோடு அத்யாத்மவித்துக்களாய் உத்தரபாக(ब्रह्म)

(க)

(உ) பார-ஆந-அஅ

நிஷ்டராஞரோடுவாசியறஸாதநதர்மமென்றுசொல்லப்படுவதாய் ஸர்வாதிரிக்தமான ஸித்தஸாதநத்தைச் சொல்லுகிறது.

இத்தர்மஶப்தம் பலஸாதநதர்மவாசகமாகையாலே இவை மூன்றையும் சொல்லுமேயாகிலும் மோக்ஷோபாயம் சொல்லுகிற ப்ரகரணமாகையாலும், முமுக்ஷுவான விஷ்வதிகாரிக்கு ஸ்வர்க்காதி புருஷார்த்தங்களில் அபேக்ஷையில்லாமையாலும், இங்கு த்யாஜ்ய தயா தர்மஶப்தோக்தமாயிற்று-ஸ்வர்க்காதிஸாதநமான ஜ்யோதிஷ்டோமாதிகளுமன்றிக்கே ஸ்வீகார்யத்வேந விதிக்கையாலே பரம தர்மமுமன்றிக்கே மோக்ஷஸாதநதயாஶாஸ்த்ரசோதிதமாய் ஸாத்ய மான பரதர்மமாத்ரமென்னுமிடம் ப்ரகரணபலத்தாலும் விதிபலத் தாலும் ஸித்தம்.

இப்படிப் பரதர்மம் த்யாஜ்யமாகச்சொல்லுகையாலும், ஸ்வதந்த்ரஸாதநமான பரமதர்மம் அங்கமாகமாட்டாமையாலும், பரதர்மாங்கமான பரமதர்மமும் த்யாஜ்யத்வேந உபாதாநம்பண்ணப்படுகிறது. அங்கியானதர்மங்களில் அபேக்ஷையில்லாதபோதே அங்கத்திலும் அபேக்ஷையில்லையிறே.

இதில் பஹுவசநத்தாலே (க) "కర్మణైవహి సంసిద్ధిమాస్థితా జనకాదయః-கர்மணைவஹிஸம்ஸித்திமாஸ்திதாஜநகாதய:" என்று ஸ்வதந்த்ரஸாதநமாகவும், (உ) "సర్వం కర్మాఖిలం పార్థ జ్ఞానే పరిసమాప్యతే-ஸர்வம்கர்மாகிலம்பார்த்த ஜ்ஞாநேபரிஸமாப்யதே" (ங) "కషాయే కర్మభిః పక్వే తతో జ్ఞానం ప్రవర్తతే-கஷாயேகர்மபி:பக்வேததோஜ்ஞாநம்ப்ரவர்த்ததே" என்று அங்கஸாதநமாகவும் சொல்லப்பட்ட கர்மயோகமும், (ச) "నహి జ్ఞానేన సదృశం పవిత్రమిహ విద్యతే । జ్ఞానాగ్నిః సర్వకర్మాణి భస్మసాత్కురుతే తథా-நஹிஜ்ஞாநேநஸத்ருஶம்பவித்ரமிஹவித்யதே। ஜ்ஞாநாக்நிஸ்ஸர்வகர்மாணிபஸ்மஸாத்குருதேததா" (ரு) "జ్ఞానాదేవ చ కైవల్యం ప్రాప్యతే యేన ముచ్యతే- ஜ்ஞாநாதேவசகைவல்யம்ப்ராப்யதேயேநமுச்யதே" என்று ஸ்வதந்த்ரஸாதநரூபமாயும், இந்தஜ்ஞாநம் தைலதாராவதவிச்சிந்நஸ்ம்ருதிஸந்தாநரூபமாய், அநவரதபா(பா)வநாரூபையான பக்தியாய்ப், பரிணதமாகையாலே பக்த்யங்கமாகவும் சொல்லப்பட்ட ஜ்ஞாநயோகமும், (சா) "ఉభాభ్యామేవ పక్షాభ్యాం-உபாப்யாமேவபக்ஷா

(க) கீ-ங உ0 (உ) கீ-ச-ஙங (ங)
(ச) கீ-ச-ங அ (ரு) (சா) ஹாரீதஸ்ம்ருதி

ப்யாம்" இத்யாதியாலே மோக்ஷஸாதநமாகச்சொல்லப்பட்ட கர்மஜ்ஞாநஸமுச்சயமும், (௧) "భక్త్యాత్వనన్యయాశక్యః-பக்த்யாத்வநந்யயாஶக்யః" (௨) "స్వకర్మజ్ఞానవైరాగ్యసాధ్యభక్త్యేకగోచరః-ஸ்வகர்மஜ்ஞாநவைராக்யஸாத்யபக்த்யேககோசரః" என்று கர்மஜ்ஞாநாதிஸாத்யமாய் மோக்ஷஸாதநமாகச் சொல்லப்பட்ட பக்தியோகமும்,

(௩) "జన్మకర్మచమేదివ్యమేవంయోవేత్తితత్త్వతః। త్యక్త్వాదేహంపునర్జన్మనైతిమామేతిసోర్జున-ஜந்மகர்மசமேதிவ்யமேவம்யோவேத்திதத்வதः। த்யக்த்வாதேஹம்புநர்ஜந்மநைதிமாமேதிஸோர்ஜுந" என்று என்னுடைய திவ்யமான வதாரத்தையும் அதில் திவ்யவ்யாபாரங்களையும் யாவனொருவன் உண்மையாகவறிகிறான்; அவன் ஶரீரத்தைவிட்டுப்போனால் மீண்டுபிறவான்; என்னை ப்ராபிக்குமென்கிற (௪) "நிலைவரம்பிலபலபிறப்பாய்" என்கிற அவதாரரஹஸ்யஜ்ஞாநமும்,

(௫) "యోమామేవమసమ్మూఢోజానాతిపురుషోత్తమమ్సనసర్వవిద్భజతిమాంసర్వభావేనభారత- யோமாமேவமஸம்மூடோஜாநாதிபுருஷோத்தமம்। ஸஸர்வவித்பஜதிமாம்ஸர்வபாவேநபாரத" என்று யாவனொருவன் என்னை அஸம்மூடனாய்க்கொண்டு புருஷோத்தமனாகவறிகிறான்; இந்தப் புருஷோத்தமத்வஜ்ஞாநமாகிறது த்ரிவிதசேதநாசேதநங்களினுடையவும் ஸ்வரூபஸ்வபாவங்களை யதாவாகவறிந்து அவற்றில் வ்யாவ்ருத்தனாகவும், (௬) "ఉత్తమఃపురుషస్త్వన్యః పరమాత్మేత్యుదాహృతః। యోలోకత్రయమావిశ్యబిభర్త్యవ్యయఈశ్వరః - உத்தமःபுருஷஸ்த்வந்யःபரமாத்மேத்யுதாஹ்ருதः। யோலோகத்ரயமாவிஶ்யபிபர்த்யவ்யயஈஶ்வரः" என்கிற ந்யாயத்தாலே அவற்றுக்கு வ்யாபகனாகவும் தா(తా)ரகனாகவும் நியாமகனாகவுமறிகையாலே அவனெல்லாமறிந்தவனாகையாலே அவன் ஸர்வபாவத்தாலும் என்னையடைந்தவனென்றும், (௭) "ఇతిగుహ్యతమంశాస్త్రమిదముక్తంమయానఘ। ఏతద్బుద్ధ్వాబుద్ధిమాన్స్యాత్కృతకృత్యశ్చభారత- இதிகுஹ்யதமம்ஶாஸ்த்ரமிதமுக்தம்மயாநக। ஏதத்புத்த்வாபுத்திமாந்ஸ்யாத்க்ருதக்ருத்யஶ்சபாரத" என்றிப்படி குஹ்யதமமான விந்தஶாஸ்த்ரம் இதுகேட்கைக்கு அதிகாரியாம்படி நீ அயாபனாகையாலே உனக்குஎன்னாலேசொல்லப்பட்டது; இந்தப்

---

(௧) கீ-௧௧-௫௪ (௨) கீதார்த்தஸங்க்ர (௩) கீ-௪-௯
(௪) தி-வாய்-௧-௩-௨ (௫) கீ-௧௫-௧௯ (௬) கீ-௧௫-௧௭ (௭) கீ-௧௫-௨௦

புருஷோத்தமத்வத்தை புத்திபண்ணினவன் அபிமதபலலாபத்தாலே க்ருதக்ருத்யனாமென்கிற, (க) "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்? உனக்கோர் கைம்மாறு நானொன்றிலேன்" ... "ஆரினுமாவரும் ... இல்லை" என்கிற புருஷோத்தமவித்யையும்,

(உ) "తీర్థంయంసర్వకామధుక్-தேஹோயம்ஸர்வகாமதுக்" (ங) "మధురానామనగరీపుణ్యాపాపహరీశుభా - மதுராநாமநகரீ புண்யா பாபஹரீ ஶுபா" என்று ஸர்வகாமபலப்ரதமாகவும், அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திப்ரதமாகவும் ஸ்வயம்ப்ராப்யமாகவும் சொல்லுகிற புண்யக்ஷேத்ரவாஸமும்,

(ச) "స్తవనాన్నామసహస్రేణనిత్యంభక్తిసమన్వితః। సర్వపాపవిశుద్ధాత్మాయాతిబ్రహ్మసనాతనమ్-ஸ்தவந்நாமஸஹஸ்ரேண நித்யம்பக்திஸமந்வித:ஸர்வபாபவிஶுத்தாத்மா யாதிப்ரஹ்மஸநாதநம்" என்று பக்தியுக்தனாய்க்கொண்டு அவன் திருநாமங்களைச்சொல்லி ஸ்தோத்ரம்பண்ணுமவன் ஸர்வபாபங்களும்போய் ஶுத்தாத்மாவாய் ஸநாதநமான ப்ரஹ்மத்தை ப்ராபிக்குமென்கிற (ரு) "பாமரு மூவுலகும் ... நாமம் வீடு பெறலாமே" என்று சொல்லுகிற திருநாமஸங்கீர்த்தநமும்.

(சா) "கடைத்தலைசீய்க்கப்பெற்றால் கடுவினைகளையலாம்" என்றும், *மாகந்தநீர்கொண்டு தூவிவலம்செய்கையும் (எ) "பூவிற்புகையும் விளக்கும்சாந்தமும் நீருங்கொண்டு" (அ) "பூசனைசெய்கின்றார்கள் புண்ணியம்செய்தவாறு" என்கிறபடியே பூசனைசெய்கையும், (கூ) "புண்ணியம்செய்து நல்லபுனலொடுமலர்கள் தூவி யெண்ணுமினெந்தை நாமம் இப்பிறப்பறுக்கும்" என்று மித்யாதிகளாலே சொல்லப்பட்ட திருவிளக்கெரிக்கை திருமாலையெடுக்கை திருவலகிடுகை முதலான ஸாதநபுத்தியாலே செய்யப்படுவதாய், ருசிபேதத்தாலும் பாகபேதத்தாலும் அத்யந்த(பி)ந்நமாய் ஆத்மபேதத்தோபாதி அஸங்க்யாதமான வுபாயவிஶேஷங்களைச் சொல்லுகிறது.

அதவா, கர்மஜ்ஞாநபக்திகளுடைய அவாந்தரபாஹுள்யத்தைப்பற்ற பஹுவசநமாகவுமாம்; அதில் கர்மம்-அக்நிஹோத்ரதர்ஶ பூர்ணமாஸாக்நிஷ்டோம தீர்க்கஸத்ராதிரூபேண பஹுவிதம். ஜ்ஞாநமும் உபாஸ்யவஸ்துஸ்வரூபபேதத்தைப்பற்றி வருகிற ஸத்வித்

(க) பெரிய-தி-க-க-ரு (உ) காருடபுரா (ங)
(ச) ஸஹஸ்ரநாமம் (ரு) தி-வாய்-கo-ரு-ரு (சா) தி-வாய்-கo-உ-அ
(எ) தி-வாய்-ரு-உ-கூ (அ) தி-வாய்-கo-உ-ச (கூ) தி-வாய்-கo-உ-ரு

ஸாதஹரவித்யாதிபேதத்தாலே பஹுவிதம்; பக்தியும், (க) "ஸததம் கீர்த்தயந்த:-ஸததம்கீர்த்தயந்த:" (உ) "மந்மநாபவ-மந்மநாபவ" இத்யாதிகளிற்சொல்லுகிற அர்ச்சநஸ்தவப்ரணாமாதிகளாலே பஹுவிதம்; இப்படிவருகிற வ்யக்த்யாநந்த்யத்தைச் சொல்லுகிறது பஹுவசந மென்று சொல்லுவர்கள்; ஆக பஹுவசநத்தாலே மோக்ஷஸாதந தயாப்ரதாநமாகச் சொல்லுகிற தர்மங்களினுடைய ஆநந்த்யத்தை யும் ப்ரதிவ்யக்தியிலுண்டான வாநந்த்யத்தையும் சொல்லிற்றாயிற்று, (ங) "நெறியெல்லாமெடுத்துரைத்த" என்னக்கடவதிறே.

இதில், "தர்மாந்" என்கிற த்விதியாந்தம்-இந்ததர்மங்கள் மேற் சொல்லுகிற த்யாகத்துக்கு விஷயமென்னுமிடத்தைக் காட்டுகிறது. ஆகையாலே பகவதுபாயவரணம் பண்ணுமதிகாரிக்கு தத்வ்யதிரிக்த ஸகலஸாத்யதர்மகளும் த்யாஜ்யமென்றதாயிற்று.

இத்தர்மவிசேஷணமான ஸர்வசப்தம் த்ரைவர்ணிகஸாதாரணமாய் ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள்தோறும் அநுவ்ருத்தமாய்,(ச) "ஸந்த்யாஹீநோऽஶுசிர்நித்யமநர்ஹஸ்ஸர்வகர்மஸு-ஸந்த்யாஹீநோऽஶுசிர்நித்யமநர்ஹஸ்ஸர்வகர்மஸு" "தேத்வகம் புஞ்ஜதே பாபா:-தேத்வகம் புஞ்சதே பாபா:" என்று-பாபத்தையே புஜிக்கிறவர்களாகையாலே அவர்கள்பாபிஷ்டர்களென்றும், அநுஷ்டாநத்தில் ஸர்வகர்மாநர்ஹராகவும், அநுஷ்டாநத்தில் அர்ஹராகவும் சொல்லுகையாலே இந்தக் கர்மாநுஷ்டாநத்துக்கு யோக்யதாபாதகங்களான (ரு) "ஓதியுரு வெண்ணுமந்தி" "ஐவேள்வி" என்கிற ஸந்த்யாவந்தந பஞ்சமஹாயஜ்ஞாதிகளைச் சொல்லுகிறது.

கர்மயோகாதிகளுக்கு யோக்யதாபாதகமாகில் இக்கர்மங்கள், இவற்றையொழிய உதயமில்லாத ப்ரதாநகர்மங்களுக்கு த்யாக விஷயத்வம் சொன்னபோதே (சு) "ஸாத்யாபாவே மஹாபாஹோ ஸாதநை: கிம் ப்ரயோஜநம்-ஸாத்யாபாவே மஹாபாஹோ ஸாதநை: கிம்ப்ரயோஜநம்" என்று ஸாத்யமில்லாதபோது ஸாதநங்களாலே என்னப்ரயோஜந முண்டென்கிற ந்யாயத்தாலே இதுக்கும் த்யாகவிஷயத்வம் சொல் லிற்றாகாதோ; ஆயிருக்க ஸர்வசப்தத்தாலே பிரியச்சொல்லவேண்டுகிறதென்னென்னில்;

(க) கீ-கூ-கச (உ) கீ-கூ-ஙச (உ) தி-வாய்-ச-உஙு
(ச) தக்ஷஸ்ம்ருதி (ரு) க-திருவ-ஙரு (சு) வி-பு-க-க-

ஸாதகமான தர்மத்துக்கு போக்யதாபாதகதர்மவ்யதிரேகேண உதயமில்லையேயாகிலும், "ஶ்ரேயஸ்ஸாதகம்தர்ம꞉" என்கிற ந்யாயத்தாலே மோக்ஷஸாதநதர்மமே இத்தர்மஶப்தத்துக்கு அர்த்தமென்று நினைக்கையாயிருக்கையாலே அவற்றுக்கு த்யாகவிஷயத்வம் சொல்லுகிறதென்று தோன்றுமையாலும், த்யாகவிஷயத்வமில்லாதபோது "అర్హస్సర్వకర్మసు-அநர்ஹஸ்ஸர்வகர்மஸு" என்று ஸர்வகர்மாநர்ஹத்வம் சொல்லுகையாலே "ஶரணம்வ்ரஜ" என்கிற விஹிதஸாதநஸ்வீகாரத்துக்குமநர்ஹனாய், அதுக்கும் இந்தயோக்யதாபாதகதர்மங்கள் அபேக்ஷிதமாமென்று வருகிறஶங்கையைப் பரிஹரிக்கைக்காக ஸர்வஶப்தத்தாலே பிரித்துச்சொல்லுகிறது.

வக்ஷ்யமாணமான ஸ்வீகாரத்துக்கு (௧)"வைத்தேன்மதியால்" (௨) "அவனருளாலுறற்பொருட்டு என்னுணர்விலுள்ளேயிருத்தினேன்" (௩)"யானுமென்னெஞ்சுமிசைந்தொழிந்தோம்" இத்யாதிகளிற்படியே அறிவும் அநுமதியும் இசைவுமேயிறே அபேக்ஷிதம். அதுதானும், (௪) "என்னிசைவினை" (௫) "இசைவித்தென்னை" (௨) "அவனதின்னருளே" என்று ஈஶ்வராதீநமாயிறே யிருப்பது. அதுக்குவேண்டுவது சைதந்யமாத்ரமேயிறே;

அன்றிக்கே, ஸர்வகர்மங்களுக்கும் போக்யதை யபேக்ஷிதமாகில் இந்த ஸ்வீகாரத்துக்கும் போக்யமாக ஒருஸாத்யாவந்தரமபேக்ஷிதமாகவேண்டிவரும்; அதுகாணுமையாலே அவை இதுக்கபேக்ஷிதங்கள்;

